ALKI 6.7.86

கல்கி

ரூ. 1.50



"நாங்கள் வளர்க்கும் நாய்களுக்கு 400 வார்த்தைகள் தெரியும்!"



மின்னும்
மேனி மெருகுக்கு
ரெக்ஸோனா
மின்னி மிளிரும் மேனி...எந்நாளும்
உங்கள் பொன்னான கனவு...நிறைவேற
வரமளிப்பது ரெக்ஸோனா.
சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா
(தேவதாரம்) ஆகிய நாலு வகை
இயற்கைத் தைலங்களின் நற்கலவையான
ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு
இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனா
உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைக்கிறது.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
Rexon
FOR SOFT AND GLOW
REXONA


கல்கி

ஆகஸ்டு 3 ஆண்டு மலர்
பம்பாய்த் தமிழர்
சிறப்பிதழ்

மற்றும்
ரூ 1000/- பரிசு பெறும்
சிறுகதையுடன்,
பரபரப்பூட்டும் தொடர்கதை ஆரம்பம்!
எழுதுவது யார்? அடுத்த வாரம்...



உங்கள் குழந்தை கூட கடத்தப்படலாம்...



"ராஜா என்னும் ஆறு வயதுச் சிறுவனைக் கடந்த மூன்று நாட்களாய்க் காணவில்லை. கறுப்புச் சட்டையும், வெள்ளை டிராயரும் அணிந்து, பள்ளிக்கூடம் சென்றவன் மாலை வீடு திரும்பவில்லை. உயரம் மூன்று அடி இரண்டு அங்குலம். தமிழ், தெலுங்கு பேசுவான். தகவல் தெரிந்தால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: உதவி ஆய்வாளர்........... போலீஸ் ஸ்டேஷன், சென்னை — 600 ......"



• சீனிவாசன்



• திக்கு



இந்த ரீதியிலான அறிவிப்புக்கள் தினந் தோறும் தொலைக்காட்சியில் வருகின்றன. இப்படி நிறையக் குழந்தைகள் காணமற் போகின்றனவே! இதன் மர்மம் என்ன? காணமற் போகிற குழந்தைகள் கண்டுபிடிக்கப்படுகிறார்களா? கண்டுபிடிக்கப்படாமல் போகிற குழந்தைகளின் கதிதான் என்ன?

சமீபத்தில் வந்த பத்திரிகைச் செய்தி இது: தஞ்சாவூரைச் சேர்ந்த நடராஜன் அதே பகுதியைச் சேர்ந்த ஐந்து வயதுப் பையனை சுதாகரை விழுப்புரத்துக்குக் கடத்திக் கொண்டு வந்துவிட்டான். சுதாகரை வள்ளி என்கிற பெண்ணிடம் இருநூறு ரூபாய்க்கு விற்க பேரம் பேசிக் கொண்டிருக்கும்போது விபசார ஒழிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்காக அந்தப் பக்கம் வந்த போலீஸார், சந்தேகத்தின் பேரில் விசாரிக்க நடராஜன் அகப்பட்டுக் கொண்டான். நடராஜனைக் கைது செய்து பையனின் அப்பாவுக்கும் போலீஸார் தகவல் அனுப்பினர்.

இதுபோலக் குழந்தைகளைக் கடத்திக் கொண்டு போய் விற்பது சில ஆண்டுகளாய் நிறையவே நடக்கிறது.

டூரிஸ்ட்டுகளும், பக்தர்களும் நிறைய அளவில் வரும் ஊர்களில் பிச்சை எடுக்கும் சிறுவர்கள் நிறையக் காணப்படுவது சாதாரணமான விஷயம். இதற்குஎன்ன பின்னணி! ஒரு சிலர் பல ஊர்களிலிருந்தும் சிறுவர், சிறுமியரைக் கடத்திக் கொண்டு வந்து, அவர்களைப் பயமுறுத்தி, பிச்சை எடுக்கப் பயன்படுத்துகின்றனர். கைகால்களை ஊனமாக்கி, பிச்சை எடுக்க வைக்கிற கொடுமையும் உண்டு. இதிலே கிடைக்கிற வருவாய் குறைவு என்று கருதும் சில சமூக விரோதிகள் கடத்திக் கொண்டு வரப்படும் சிறுவர்களுக்குப் பிக்பாக்கெட் அடித்தல், கடைகளில் திருடுதல் போன்ற காரியங்களில் பயிற்சி அளித்து அவர்களைப் பயன்படுத்திப் பணம் பண்ணுகிறார்கள்.

அழகான சின்னஞ்சிறு குழந்தைகளைக் கடத்திக் கொண்டு போய், குழந்தையில்லாத தம்பதிகளுக்குக் கணிசமான தொகைக்கு விற்று விடுவதும் உண்டு. ஆஸ்பத்திரிகளிலும், அனாதை ஆசிரமங்களிலும் குழந்தைத் திருட்டுகள் நடப்பதன் பின்னணி இதுதான் என்றார் ஓர் உயர் போலீஸ் அதிகாரி. இப்படிப் பல ஏழைக் குழந்தைகள் வெளிநாடுகளுக்குக் கூடப் போய் செல்வச் செழிப்பில் வாழ்கின்றன. ஆனால் அவற்றின் பெற்றோருடைய ஏக்கத்தை யாரால் நிவர்த்திக்க முடியும்?

பணக்கார வீட்டுக் குழந்தைகளைக் கடத்திக் கொண்டு போய், பெரிய தொகையைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுக் குழந்தையை அழைத்துப் போகும்படி மிரட்டல் கடிதம் அல்லது ஃபோன் வருவதை சினிமாக்களில் பார்த்திருக்கிறோம். வாழ்க்கையில் அதுமாதிரி சென்னையிலோ, தமிழகத்திலோ நடப்பதில்லை என்று பொதுவாகச் சொன்னாலும், ஒரு கேஸ் கூடக் கிடையாது என்று அடித்துச் சொல்லவும் முடியவில்லை. சமீபத்தில் சென்னையில் ஒரு வர்த்தகரின் இரண்டரை வயதுக் குழந்தை கடத்தப்பட்டது. ஆனால் போலீஸாரின் ஒத்துழைப்புடன் காணமற் போன பத்து மணி நேரத்தில் மீண்டும் கண்டு பிடிக்கப்பட்டது. அது ஒரு சுவாரஸ்யமான கதை:

மே 28 ஆம் தேதி. பகல் ஒன்றரை மணி. சென்னை யானை கவுனி பகுதியில் வாழும் சுரேஷ் சோர்டியா, ஒரு கூடையில் பழங்களையும் வேறு சில பொருட்களையும் வைத்து, மைலாப்பூருக்குக் கொண்டு போகுமாறு டிரைவரிடம் கொடுத்து அனுப்பினார். பஸ்ஸில் போவதாய்ச் சொல்லிவிட்டுக் கிளம்பினான் டிரைவர் சீனிவாசன்.

மணி இரண்டு இருக்கும். மாடியிலிருந்து 'குழந்தை நிக்கு எங்கே?' என்று ஒரு குரல் ஒலித்தது. அவ்வளவுதான் பரபரப்பு அடைந்து தேடினார்கள்! காணோம்! ஒரு வேளை சீனிவாசன் மைலாப்பூருக்கு அழைத்துக் கொண்டு போயிருப்பானோ? என்று ஒருவர் சொல்ல, சோர்டியா மைலாப்பூருக்கு ஃபோன் பண்ணினார். 'நான் பஸ்ஸில் வந்தேன்; குழந்தையை உங்ககிட்டேதானே விட்டு விட்டு வந்தேன்'' என்றான் சீனிவாசன். மூன்று மணி சுமாருக்கு சீனிவாசனும் திரும்பி வந்து மற்றவர்களுடன் சேர்ந்து குழந்தையைத் தேட ஆரம்பித்தான்.

இதற்கிடையில் ஒரு போன் வந்தது. ''நான் சீனிவாசனின் நண்பன் குமார். அரக்கோணத்திலிருந்து பேசுகிறேன். குழந்தை என்னிடம் இருக்கிறது. சீனிவாசனுடன் வந்து குழந்தையை அழைத்துக் கொண்டு போங்கள்!'' என்று போனில் பேசியவன் சொன்னான்.

போலீஸுக்குப் ஃபோன் செய்ய அவர்களும் வந்துவிட்டனர். குடும்பத்தில் யாருக்கும் டிரைவர் சீனிவாசன் மீது சந்தேகம் வரவில்லை. ஆனால் இன்ஸ்பெக்டர்களுக்கு சந்தேகம் வலுத்தது. எல்லோருமாக காரிலும் ஜீப்பிலும் அரக்கோணம் சென்று பஸ் ஸ்டாண்டு, ரயில் நிலையம் முதலிய இடங்களில் தேடினர். பலனில்லை. மணி இரவு பத்தாகிவிட்டது. ''குமாரின் ஊர் அரக்

கோணத்திலிருந்து ஏழு கி. மீ. தூரத்தில் உள்ள மேலக்காடு கிராமம். அந்தப் பக்கம் போகிற கடைசி பஸ்ஸில் குமார் போயிருப்பான்'' என்றான் சீனிவாசன்.

இன்ஸ்பெக்டர் முத்துசாமி, ''அதையும் பார்த்து விடலாம்'' என்றார். மற்றவர்கள் அரக்கோணத்திலேயே விழிப்புடனிருக்க, முத்துசாமி, சோர்டியா, சீனிவாசன், ஒரு கான்ஸ்டபிள் ஆகியோர் ஒரு காரில் புறப்பட்டனர். ரிஸ்க் எடுக்க விரும்பாமல், இன்ஸ்பெக்டர் முத்துசாமி போலீஸ் உடையைக் கழற்றிவிட்டு, டிரைவர் போல உடையணிந்து கொண்டார். கையிலிருந்தது டார்ச் மட்டுமே.

மெதுவாய் ஒரு வீட்டை அணுகினார்கள். டார்ச் அடித்த போது, குடிசைக்கு வெளியில் முதலில் தென்பட்டது குழந்தை நிக்கு! கான்ஸ்டபிள் ராதா ஓடிப் போய்க் குழந்தையை எடுத்துக் கொண்டு காருக்குப் போய்விட்டார். இது எதுவுமே தெரியாமல், ஒரு ஆள், ஒரு பெண், இன்னொரு குழந்தை எல்லாரும் தூங்கிக் கொண்டிருந்தனர். அந்த ஆசாமியைக் கைது செய்தார் இன்ஸ்பெக்டர் முத்துசாமி. சீனிவாசனும் தன்னை அவரிடம் ஒப்புவித்துக் கொண்டான்.

விஷயம் இதுதான். சீனிவாசனும் நண்பன் அசோகனும் (பிடிபட்டவன்) சேர்ந்து குழந்தையைக் கடத்திக் கொண்டு போகத் திட்டமிட்டிருக்கின்றனர். வீட்டில் நாலு பேர் காணக் குழந்தையை விட்டுவிட்டுக் கூடையுடன் புறப்பட்ட சீனிவாசன், வெளியில் காத்திருந்து, திரும்பி வந்து, குழந்தை தனியே இருக்கும்போது தூக்கிக் கொண்டு போயிருக்கிறான். தெருக் கோடியில் காத்திருந்த அசோகனை அழைத்துக் கொண்டு, ஆட்டோவில் சென்ட்ரலுக்குப் போய், குழந்தையுடன் அசோகனை ஊருக்கு அனுப்பிவிட்டு, கூடையுடன் மைலாப்பூர் போய்விட்டான். அங்கிருந்து சோர்டியாவுடன் போனில் பேசியிருக்கிறான். அப்புறம் குடும்பத்தினருடன் சேர்ந்து குழந்தையைத் தேடியுமிருக்கிறான். 'குமார்' என்ற பெயரில் ஃபோன் செய்தது அசோகனாக இருக்கலாம்; அல்லது சீனிவாசனே வெளியே போய் அப்படி ஃபோன் பண்ணி இருக்கலாம்! குழந்தை காணாமற் போன பத்து மணி நேரத்துக்குள் மீட்டுக் கொடுத்த போலீஸாருக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசளித்தார் சோர்டியா. "குழந்தையை அசோகனும் சீனிவாசனும் கடத்திப் போனது எதற்காக? "பயமுறுத்திப் பணம் வாங்குவது எங்கள் நோக்கம் இல்லை'' என்று சீனிவாசன் இப்போது சொன்னாலும் அது நம்பும்படியாக இல்லை.

மிரட்டிப் பணம் பறிக்கும் நோக்கம் தவிர, நகைகளுக்காகவும் குழந்தைகளை ஏமாற்றி அழைத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். இதுதான் அடிக்கடி நிகழ்கிற காரியம் என்றும் கூறலாம். வீட்டு வாசலில் அல்லது பள்ளிக்கூட வாசலில் தனியே நிற்கும் குழந்தைகளுக்கு ஐஸ்கிரீம், சாக்லேட் போன்றவைகளை வாங்கிக் கொடுத்து, எங்காவது அழைத்துக் கொண்டு போய் நகைகளைக் கழற்றிக் கொண்டு குழந்தையை 'அம்போ' என்று விட்டுவிட்டுப் போய்விடு

அடுத்த இதழ்...

தருமபுரி மாவட்டத்தில் கல்கி—1

"என் மனசையும் ஊனமுறச் செய்கிறார்கள்!"

— ஓர் இளம் பெண்ணின் கண்ணீர்க் கதை



• **புத்தன் மீண்டும் பிறப்பானா?**

— திகிலூட்டும் புகைப்படங்கள்

வார்கள். குழந்தைகளை மறுபடி பள்ளி வாசலில் அல்லது வீட்டு வாசலில் கொண்டு வந்துவிடும் 'நல்ல' திருடர்களும் உண்டு! குழந்தைகளுக்கு மயக்க மருந்து தந்து நகை பறிப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த கேஸ்களில் கையும் களவுமாய் ஆசாமியைப் பிடித்தால்தான் உண்டு. நகை திருடப்பட்ட 'வுடன் கைமாறிவிடும். வெகுசீக்கிரம் உருக்கப்பட்டுவிடும்.

குழந்தைகள் வழிதவறிக் காணாமற் போய்விடுவதும் உண்டு. பள்ளிக்கூடத்துக்குப் போகிற சிறுவர், சிறுமியர் வீடு திரும்பும் போது எங்காவது வழிதவறிச் சென்றுவிட, அவர்களைக் காணாது பெற்றோர் தவிப்பார்கள். டெலிவிஷன் அறிவிப்புக்களில் வரும் குழந்தைகளில் பெரும்பாலான குழந்தைகள் காணாமல் போவது இவ்வாறுதான். பள்ளியிலிருந்து குழந்தையை அழைத்து வரப் பெற்றோர் தாமதமாகச் சென்றால் குழந்தை தனியே இருக்கப் பயந்து அல்லது பசியினால் உந்தப்பட்டு தானாகவே வீடு திரும்ப முயலும். வழி தப்பித் திரியும். இப்படி வழி தப்பிப் போன ஒரு சிறுமி சுகுணா. வரதப்பன் தம்பதியின் குழந்தை. சுமார் ஒரு வார காலம் வெகு தொலைவில் வேறு ஒருவர் வீட்டில் வாழ்ந்து, கடைசியில் ஒருவாறு பெற்றோரிடம் வந்து சேர்ந்தாள்.

பீகாரிலிருந்து பல குழந்தைகள் கடத்திச் செல்லப்பட்டு உத்தரப்பிரதேசத்தில் தரைவிரிப்பு நெய்யும் தொழிலில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். போதிய அளவு கூலியோ, தூக்கமோ, உணவோ இன்றி அடிமைகளை விட மோசமாகக் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். ஒரு நாளில் 22 மணி நேரம் வேலை செய்கிறார்கள்! இவர்களை மீட்க புதுதில்லி உச்சநீதிமன்றம் சமீபத்தில் உ. பி. அரசுக்கு ஆணை பிறப்பித்திருக்கிறது.

குழந்தைகள் காணாமல் போவது, கடத்தப்படுவது இவற்றைத் தடுக்கப் பெற்றோர்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியம். இது விஷயமாகக் கவனிக்க வேண்டியவை:

* குழந்தைகளுக்கு நகைகள் போடுவதைக் கூடியவரை தவிர்த்து விடுங்கள். நகைகள் போட்டால், குழந்தைகள் தனியே, வீட்டை விட்டு எங்கேயும் போகாமல் கவனித்துக் கொள்ளுங்கள்.
* சிறு குழந்தைகள் தக்க துணையில்லாமல் பள்ளிக்குப் போய் வருவது நல்லதல்ல. வேறு வழியேயில்லை என்றால்தான் தனியே அனுப்பலாம்.
* வேலைக்காரர்கள் என்னதான் நம்பிக்கைக்குரியவர்கள் என்றாலும் கொஞ்சம் எச்சரிக்கையாய் இருங்கள்.
* சின்னக் குழந்தைகளுக்குக் கூட, அதன் பெயர், அப்பா பெயர், வீட்டு விலாசம் இவற்றைப் பனிச்சென்று கூறச் சொல்லிக் கொடுத்து விட வேண்டும்.
* குழந்தை காணாமல் போனால் போலீஸுக்குத் தகவல் கொடுத்து விடுங்கள்.
* முன் பின் தெரியாதவர்கள் ஏதாவது தின்னக்கொடுத்தால்வாங்கிக்கொள்ளக்



கருத்து: பெ. முரளி

சென்னை தொலைக்காட்சி நிலைய உதவி இயக்குனர்,மகாதேவன் தெரிவித்தவை:

* காணாமல் போனவர் பற்றிய அறிவிப்பு டி. வி. யில் இடம் பெற்றால் நிச்சயம் பலன் கிடைக்கும் என்று தலைமேல் அடித்துச் சத்தியம் பண்ண முடியாதெனினும், பல சந்தர்ப்பங்களில் நற்பயன்கள் விளைந்திருக்கின்றன.
* போலீஸ் நிலையத்திலிருந்து காணாமல் போனது பற்றின சான்றிதழ், பெரிய அளவு (12''×10'') புகைப்படம் தவிர, வயது, உயரம், உடை, பேசும் மொழி போன்ற விவரங்களை நிலையத்தில் தர வேண்டும்.
* காணாமற் போன அன்றேயோ, ஒரு சில தினங்களுக்குள்ளாகவோ வருகிறவர்களுக்கு முன்னுரிமை தரப்படுகிறது.
* காணாமல் போன பெரியவர்களை விடச் சிறுவர் சிறுமியருக்கே முக்கியத்துவம் தந்து அறிவிக்கப்படுகிறது.
* தமிழில் செய்திகள் முடிந்து, தேசிய நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கும் முன் உள்ள குறைந்த அளவு நேரத்தில் முடிந்த வரை இந்த விஷயத்துக்கு ஒதுக்குகிறார்கள்.
* இந்த அறிவிப்புகளுக்காக எந்தவிதக் கட்டணமும் வசூலிப்பதில்லை.

கூடாது என்று குழந்தைகளிடம் கண்டிப்பாகச் சொல்லி வைக்க வேண்டும்.

* உங்கள் பகுதியிலிருந்து ஒரே பள்ளிக்கு நாலைந்து பேர் போகிற பட்சத்தில், எல்லாரும் ஒன்றாய்ப் போய், ஒன்றாய்த் திரும்பும்படி ஏற்பாடு செய்து கொள்வது நல்லது.

* திருவொற்றியூர்க்காரர்கள் செய்வதை எல்லாப் பகுதியினரும் கடைப்பிடிக்கலாம். அங்கே 'ஆபத்துக்கு உதவுவோர் சங்கம்' என்று ஒன்று இருக்கிறது. திருவொற்றியூர், வண்ணாரப்பேட்டை, ராயபுரம் பகுதிகளில் வழிதவறி வந்துவிட்ட குழந்தைகளை, போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில் உள்ள இந்தச் சங்கத்தின் காரியாலயத்தில் மக்கள் கொண்டு வந்து விட்டு விட்டுப் போய் விடுவார்கள். நன்கு விசாரித்துக் குழந்தைகளை உரிய இடத்தில் சேர்க்கும் பொறுப்பை அந்தச் சங்கத்தினர்கள் ஏற்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில் காணாமல் போன குழந்தை பற்றிப் புகார் தரப்பட்டாலும் இவர்களுக்கு உடனே தகவல் கிடைக்கிறது. வழி தவறி வந்துவிட்ட பல குழந்தைகளைப் பெற்றோர்களிடம் சேர்ப்பித்திருக்கிறார்கள், இந்தச் சங்கத்தினர்.

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி.

படங்கள்: மணி.



இவர் சொன்னார்...

ஈ.வெ.ரா.வும், ராஜாஜியும் உற்ற நண்பர்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயம். அரசியல் வாழ்க்கையிலும் ஒருவருக்கொருவர் பரிபூரணமாக ஒத்துழைத்தார்கள். ஒருசமயம் மாகாண காங்கிரஸ் மகாநாட்டில் ஏதோ ஒரு பிரேரணை வந்தது. அதை ராஜாஜி விரும்பவில்லை.

"நாயக்கர்! இந்தப் பிரேரணையை நீங்கள் எதிர்த்துப் பேச வேண்டும்" என்றார்.

"ஆகட்டும்! என்ன காரணங்களுக்காக எதிர்க்கச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் ஈ.வெ.ரா.

"முதலில் எதிர்த்துப் பேசுங்கள். அப்புறம் காரணங்களைச் சொல்கிறேன். இப்போது நேரமில்லை!" என்றார் ராஜாஜி.


பிரேரணையை எதிர்த்துப் பேசினார் ஈ.வெ.ரா. பேச்சு வன்மையால் பிரேரணைத் தோற்றது.

"சரி, பிரேரணை தோற்றுவிட்டது. இப்போது காரணங்களைச் சொல்லுங்கள்", என்றார் ஈ.வெ.ரா.

"நீங்கள்தான் எல்லாக் காரணங்களையும் சொல்லிவிட்டீர்களே. அவைதான் என் மனத்திலும் இருந்தன" என்றார் ராஜாஜி.

தொகுப்பு: உ. வெங்கடேசன்

...இவர் செய்தார்



நேரம் உங்களை ஆக்கவோ அழிக்கவோ செய்யும்



நியூபென் குவார்ட்ஸ் டிக்-டிக் என ஓசைப்படுத்தியோ, மணி அடித்தோ உங்களை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தாது

அதன் கணகண பின் மணி அலாரம் கணீரென தெளிவாக ஒலிக்கும் நீங்கள் விரும்பும்போது--நீங்கள் எழுந்திருக்கும் வரை அது ஓயாது.

இன்றே ஒரு நியூபென்னை வாங்கி எடுத்துச் செல்லுங்கள், அது உங்களை உசுப்பிவிடுமுன்னர் நீங்கள் நேரத்தைப் பிடியுங்கள்!

NEWBEN

குவார்ட்ஸ் அலாரம் கடிகாரம்

Shems/NFL/1


ஹார்லிக்ஸ் எங்களுடைய குடும்ப நண்பன். ஆபீஸிலிருந்து களைப்புடன் திரும்பிவரும் என் கணவருக்கு, காலேஜ் மற்றும் டான்ஸ் கிளாஸை முடித்துக் கொண்டு வரும் என் பெண்ணிற்கு, ஸ்கூல் முடிந்து திரும்பும் புட்பால் வீரனான என் பையனிற்கு—ஏன், தினமும் கடைகண்ணி போய் திரும்பும் எனக்கும்தான்—ஹார்லிக்ஸின் துணை ரொம்ப முக்கியம். எங்கள் குடும்பத்தின் நலனிற்காக நான் ஹார்லிக்ஸையே நம்புறேன்.
மால்டெட் பார்லி, முழு ஆடைப் பால் மற்றும் பொன்னிற கோதுமை கொண்ட ஹார்லிக்ஸ் ஒரு சுவையான, சத்தான பானம்.
ஊட்டச்சத்திற்கு மூலாதாரமான ஒரு லட்சிய பானமென்ற நம்பிக்கையை பெற்றது. எனவே, கடந்த நூறு வருடங்களாக கோடிக்கணக்கான குடும்பங்கள் உலகமெங்கும் ஹார்லிக்ஸின் மேல் நம்பிக்கை வைத்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.
Horlicks
The Great Nourisher
இப்போது!
ஹார்லிக்ஸ் பிஸ்கட்ஸ்
ஹார்லிக்ஸின் நலமிக்க கரகர மொறமொற பிஸ்கட்!
Horlicks
சென்னை, சுற்றுப்புற மாவட்டங்கள்மற்றும் பாண்டிச்சேரி நகரில் மட்டும்
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HMM-904 TAM

மாதம் ஒரு மாவட்டம்

கல்கி ஏற்கும் சமுதாயப் பணி



தென்னாற்காடு மாவட்டத்திற்கு வருகிறோம்!

தில்லைக் கூத்தனின் திருநடனம், உலகமே வியந்து போற்றி அதிசயிக்கும் பெருமை பெற்றது: 'கோயில்' என்று வெறுமனே சொன்னால் அது சிதம்பரம் நடராஜர் கோயிலைத்தான் குறிக்கும்! அப்படிப்பட்டதோர் சிறப்பு வாய்ந்த சிதம்பரத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள மாவட்டம் தென்னாற்காடு மாவட்டம். பக்திச் சிறப்பு மட்டும்தானா? கல்வி சிறக்க அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தொழில் வளம் பெருகக் கடலூரில் துறைமுகம் என்று இன்னும் எத்தனையெத்தனையோ சிறப்புக்களைப் பெற்றிருக்கிறது தென்னாற்காடு மாவட்டம்!

இத்தனை சிறப்புக்கள் இருந்தும் தென்னாற்காடு 'மாவட்டம் எல்லாத் துறைகளிலும் முன்னேறியிருக்கிறதா? மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டிருக்கிறதா? என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்று அடித்துச் சொல்லலாம். ஏனெனில் மற்ற மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்த நமது நிருபர்களின் அனுபவங்கள் அப்படித்தான் சொல்ல வைக்கின்றன!

ஆகவேதான், 'மாதம் ஒரு மாவட்டம்' என்ற தலைப்பில் கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில் ஏழாவது மாவட்டமாகத் தென்னாற்காடு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

எனவே, தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நீங்கள் அனைவரும் உங்கள் மாவட்டப் பிரச்னைகள், அல்லது உங்கள் ஊர்ப் பிரச்னைகள், இல்லையெனில் தனி மனிதர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிகள் ஆகியவற்றோடு அரசியல்வாதிகளுடைய — அமைச்சர்களுடைய — அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குகளையும் சுருக்கமாக எழுதி, உங்கள் முழு முகவரியோடு கல்கி அலுவலகத்திற்கு அனுப்புங்கள். இவற்றோடு உங்கள் மாவட்ட வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும், உங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள சாதனைகளையும் எங்களுக்கு எழுதலாம்.

கல்கி அலுவலகத்திற்கு வரும் உங்கள் ஒவ்வொருவருடைய கடிதத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, ஆகஸ்டு மாதம் இரண்டாவது வாரத்தில் நமது கல்கி பிரதிநிதிகள் தென்னாற்காடு மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்வார்கள்; உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் வரும் தேதி பற்றிய முழு விவரங்கள் தனித்தனிக் கடிதங்கள் மூலம் பின்னர் தெரிவிக்கப்படும்.


அதன் பிறகு, கல்கி பிரதிநிதிகள் தென்னாற்காடு மாவட்டக் கலெக்டரைச் சந்தித்துத் தாங்கள் சேகரித்து வந்த பிரச்னைக்குரிய விஷயங்களைப் பற்றி விவாதித்துப் பதில்களைப் பெறுவார்கள். அவையெல்லாம் செப்டம்பர் மாதக் கல்கி இதழ்களில் செய்திகளாகவும், பேட்டிக் கட்டுரைகளாகவும், புகைப்படங்களாகவும் பிரசுரமாகும். எல்லாவற்றையும் பிரசுரித்துவிட முடியாது என்றாலும் — எல்லாவற்றுக்கும் தீர்வு கண்டுவிட முடியாது என்றாலும் — சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்காவது கொண்டு வரலாமல்லவா? உண்மை நிலையை எடுத்துக் காட்டுவதன் மூலம் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கலாமல்லவா? உடனே எழுதுங்கள்.

தென்னாற்காடு மாவட்டம் பற்றிய பிரச்னைகளும், குறைகளும், அநீதிகளும் தவிர, சாதனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 20.7.86.

உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம் — தென்னாற்காடு' என்று குறிப்பிட்டு எழுதுங்கள். அது எங்கள் பரிசீலனைக்கு வசதியாய் இருக்கும்.

— ஆசிரியர்.

எய்ட்ஸ்:



* எய்ட்ஸ் ஆய்வுக்கு அரசு அதிகப் பணம் ஒதுக்கக் கோரி அமெரிக்க மக்கள் ஆர்ப்பாட்டம்



* சினிமா ஹீரோ ராக் ஹட்சன்



* எய்ட்ஸ் நோய் தாக்கியபின் ராக் ஹட்சன்

ஒழுக்கக்கேடு– பரப்பும் பயங்கர நோய்!

ராக் ஹட்சன் என்று ஒரு ஹாலிவுட் சினிமா நட்சத்திரம். கொஞ்ச காலம் முன்புவரை இவரது புகழ் அகில உலகிலும் கொடி கட்டிப் பறந்தது. சினிமா உலகிலிருந்து இவர் ஓய்வு பெற்ற பிறகும் ஆணழகனாக இருந்தார். பிரகாசமான கண்கள்.

சொக்க வைக்கும் புன்னகை.

திடீரென்று ஒருநாள் பலவீனமாக உணர்ந்தார் ராக் ஹட்ஸன். டாக்டரிடம் போனார். டாக்டர் நோய் உணர்ந்து மருந்து எழுதித் தந்தார். ஆனால் மருந்து வேலை செய்யவில்லை! நோய் கடுமையாயிற்று! ஒன்றும் புரியாமல் விழித்தார் டாக்டர். வேறு பல டாக்டர்களை ஆலோசனைக்கு அழைத்தார். அவர்களுக்கும் ராக் ஹட்ஸன் புதிராக விளங்கினார்.

சினிமா நட்சத்திரத்தின் உடலில் என்ன கோளாறு? ஏன் மருந்து வேலை செய்யவில்லை? ஆராய்ந்தார்கள். நோயின் தன்மை புரிந்தது. ராக் ஹட்ஸனுக்கு என்ன உடம்புக்கு வந்தாலும் அதனை எதிர்த்துப் போராடும் சக்தியை அவர் இழந்து விட்டிருந்தார்!



* டாக்டர் பரிசோதனை

ஜலதோஷமா, ஜுரமா எதுவானாலும் நம் உடலில் இயற்கையாகவே அதனை எதிர்த்துப் போராடும் சக்தி உண்டு. மருந்துகள் துணை செய்கின்றன. ஆனால் என்னதான் மருந்து பக்கபலமாக நின்றாலும் உடம்பு நோயை எதிர்த்துப் போராடுகிற சக்தியை இழந்து விட்டால் எவ்வளவு வீரியமுள்ள மருந்தானாலும் சரி, உதவாது. நோய் சுலபத்தில் போகாது; கூடிய சீக்கிரமே உயிரைக் காவு கொண்டு விடும். இந்த நிலைக்குத்தான் **Acquired Immune Deficiency Syndrome** என்று பெயர். முதல் எழுத்துக்களை மட்டும் இணைத்து எய்ட்ஸ் (**AIDS**) என்று பெயரைச் சுருக்கினார்கள்.

ராக் ஹட்ஸனுக்கு எய்ட்ஸ் இருந்தது சரி. எங்கிருந்து வந்தது இது? எதனால் இவரிடம் தோற்றியது என்று ஆராயப் புகுந்தபோது அவருக்குஹோமோஸெக்ஷுவாலிடி என்ற வக்கிரமான காமச் சுவையில் நாட்டம் இருந்தது தெரிய வந்தது. ஓர் ஆண், ஆண் இனத்தையே சேர்வதும், பெண் பெண்ணினத்தையே சேர்வதும் ஹோமோஸெக்ஷுவல் எனப்படுகிறது. இந்தத் தகாத உறவு எய்ட்ஸ் பரவ வெகு சுலபமாக இடமளிக்கும் என்று கண்டு பிடிக்கப்பட்டது.

"நுண்நோக்கி (மைக்ராஸ்கோப்) மூலம் பார்க்கும்போது எய்ட்ஸ் வைரஸ் கிருமிகள் அளிக்கும் தோற்றம்.



சினிமா நட்சத்திரத்துக்கு வந்த இந்தப் புதிய நோய் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பத்திரிகைகள், ரேடியோ, டீ.வி. எல்லாவற்றிலும் இது பற்றியே செய்திகள். ராக் ஹட்ஸனின் முன்னாள் கவர்ச்சிப் படத்தையும் சமீபத்திய குழி விழுந்த கண்களுடன் கூடிய படத்தையும் அருகருகே பத்திரிகைகள் பிரசுரித்தன— ஒரு படிப்பினையாக.

இந்த நோய் வெகு சீக்கிரமே அமெரிக்காவில் பல்லாயிரக் கணக்கானவர்களைப் பீடிக்க, இப்போது பெரும் பீதி ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன? தார்மீகக் கட்டுப்பாடு, நல்லொழுக்கம் முதலியவற்றைத் துறந்து அமெரிக்கர்கள் மனம்போன போக்கில் வாழ்க்கை நடத்தியதுதான். அபரிமித செல்வமும் சுகபோகங்களும் தார்மீகச் சிந்தனைகளைத் தகர்த்துவிட்டன. குடும்பப் பாசம், காதல் போன்ற உன்னத உணர்வுகள் மறக்கப்பட்டன. அமெரிக்கர்கள் காமாதுரர்களாகிப் போனார்கள். திருமணமாவதற்கு முன்பே குழந்தைகள் உடலுறவு கொள்வதைக் கண்டிப்பதற்குப் பதில் பெருமையோடு ஊக்குவித்தார்கள். பிறன் மனைவியை நாடினார்கள்; தன் மனைவியைப் பகிர்ந்து கொண்டார்கள். வக்கிரமான போக்குகளை வளர்த்துக்கொண்டார்கள். அமெரிக்கர்கள் (விதிவிலக்கானவர்கள் நிறையவே உண்டு) செய்த இந்தப் பெருங் குற்றம் இன்று அவர்களைப் பழி வாங்கிவிட்டது!

வக்கிரமான பாலுறவுச் சேர்க்கையால் எய்ட்ஸ் நோய் பரவும் என்பதாக முதலில் கருதப்பட்டது. ஆனால் சீக்கிரமே விலைமாதரை நாடுதல், மனைவி தவிர வேறு பெண்களைப் புணர்தல் போன்ற முறையற்ற சேர்க்கையாலும் எய்ட்ஸ் பரவும் என்பது கண்டு பிடிக்கப்பட்டது.

ஒருவன் எய்ட்ஸ்கிருமிகளை (வைரஸ்) தன்னிடத்தில் கொண்டிருந்தாலும் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கலாம். அந்தச் சக்தியை அவன் உடல் பெற்றிருக்கலாம். ஆனால் அவன் வேறு ஒருவன் அல்லது ஒருத்தியுடன்

உடலுறவு கொள்ளும்போது இவனிடமிருந்து அந்த வைரஸ் கிருமி அந்த மற்றொருவரைத் தொற்றிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. நோய் முற்றி அவரை உயிர்ப் பலி வாங்கி விடுவதும் சாத்தியமே.

இதையெல்லாம் கண்டறிந்த டாக்டர் விஞ்ஞானிகள், ரத்த தானம் பெறுகிற சிலர் திடுமென எய்ட்ஸ் நோய் கண்டு இறந்து போவதையும் கண்டார்கள். இதிலிருந்து ரத்த தானம் அளிப்பவர் எய்ட்ஸ் நோயை எதிர்த்துச் சமாளிக்கும் சக்தியைப் பெற்றிருந்தாலும் எய்ட்ஸ் நோய்க் கிருமிகளை ரத்தத்தில் சுமந்து பிறருக்குப் பரப்புகிறவர்களாக இருக்கக் கூடும் என்று உணர்ந்தார்கள். எனவே தானமாகப் பெறப்படும் ரத்தத்தை எய்ட்ஸ் கிருமிகளுக்காக நுணுகி ஆராய வேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டார்கள்.

ரத்த தானத்தால் மட்டுமல்ல, இன்ஜெக்ஷன் ஊசி மூலமும் எய்ட்ஸ் நோய் பரவக் கூடும் என்று சமீபத்தில் கண்டறிந்திருக்கிறார்கள்! எய்ட்ஸ் கிருமிகளை சுமப்பவர்களுக்குப்போடப்பட்ட அதே ஊசி இன்னொருவருக்குப் போடப்படும் போது அந்தக் கிருமி அவரிடமிருந்து இவரையும் தொற்றிக் கொள்கிறது! அதாவது கிருமிகளை அழித்துவிடும் நோக்கில் வெந்நீரில் வெகு நேரம் கொதிக்க வைத்து 'ஸ்டெர்லைஸ்' செய்யப்பட்ட ஊசி கூட இந்த நோய் தொற்று தலைத் தடுக்க முடியாது! எனவே ஓர் ஊசியை ஒரு முறைக்குமேல் பயன்படுத்தக் கூடாது என்று கண்டறிந்திருக்கிறார்கள். இதனால் ஒருமுறை மட்டும் பயன்படுத்தித் தூக்கி எறிந்து விடுகிற ஊசி, ஸிரிஞ்சுகளுக்கு இப்போது மவுசு, கிராக்கி!

சமீபத்தில்தான் தோன்றி வெகுவேகமாகப் பரவிவிட்ட எய்ட்ஸ் நோய், அமெரிக்காவில் இதுவரை இருபத்திரண்டாயிரம் பேரைப் பீடித்ததாகப் பதிவு செய்திருக்கிறார்கள். இவர்களில் 12,000 பேர் இறந்துவிட்டனர்! இதனை எதிர்த்துப் போராட அரசு ஆண்டொன்றுக்கு முந்நூறு கோடி ரூபாய் செலவழிக்கிறது. ஆராய்ச்சிகளுக்கும் நோயாளிகளின் பராமரிப்புக்கும் இத்தொகை செலவாகிறது. வருஷா வருஷம் இத்தொகை அதிகரித்துக் கொண்டே போகும் என்று எதிர்பார்க்கிறார்கள். காரணம், நோயினால் பாதிக்கப்படா விட்டாலும் நோய்க் கிருமிகளைச் சுமந்து பரப்புகிறவர்களாகப் பதினைந்து லட்சம் பேர் அந்நாட்டில் இருப்பதாக மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் அமெரிக்கா போல குடும்பப் பற்று இன்னும் அடியோடு சீரழிந்து போய் விடவில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற எண்ணமும் பிறன் மனைவி அல்லது கணவனை மனத்தாலும் நினைப்பது பாவம் என்ற கருத்தும் வேரூன்றியுள்ளன. இந்தக் காரணங்களால் இங்கு அமெரிக்கா போல அவ்வளவு சுலபமாகவும் வேகமாகவும் எய்ட்ஸ் நோய் பரவாது என்று கருதப்படுகிறது. ஆனால் சமீப காலமாகக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைகள் ஏராளமாக நடந்திருப்பதால், கர்ப்பம் தரிக்கிற வாய்ப்பு இல்லை என்ற எண்ணம் அளிக்கிற துணிச்சலால், இங்கேயும் தார்மீக ஒழுக்கங்கள் சீர்குலைந்துதான் வருகின்றன. எனவே மக்களும் அரசும் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

ஒரு வேடிக்கை என்னவென்றால் தமிழ் நாட்டில் எய்ட்ஸ் நோய் இருப்பதைக் கண்டு பிடித்து விட்டதாகத் தலைக்குத் தலை பெருமை அடித்துக் கொள்வதுதான். மருத்துவ சாதனை என்ற முறையில் கூட இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது? துக்கப்பட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்வதல்லவா நியாயம்!

ஓரிரு தடவை அமெரிக்கா, ஐரோப்பா என்று போய்விட்டு வந்து ஃப்ரீஸெக்ஸுக்கு ஆதரவளித்த 'முற்போக்காளர்கள்' இங்கு நிறையவே உண்டு. தார்மீக நல்லொழுக்கம் பேசி, சினிமாவிலும் பத்திரிகையிலும் ஸெக்ஸுக்கு முக்கியத்துவம் தரப்படுவதை எதிர்த்தவர்களை இவர்கள், 'ஹிப்போக்ரைட்டுகள்' அதாவது வேஷதாரிகள் என்று ஏசினார்கள்; எள்ளி நகையாடினார்கள். 'விபசாரத்தை ஒழிக்க அவசியமில்லை, விபசார விடுதிகளை அரசாங்கமே ஏற்று லைசென்ஸ் வழங்கி



"நேற்று அரச சபையில் அரசியின் கூந்தலுக்கு 'இயற்கை மணம்' உள்ளதா என்று ஏற்பட்ட போட்டியில் விபரீதம் நடந்துவிட்டது!"

"என்ன விபரீதம்?"

"அரசியின் கூந்தலுக்கு 'இயற்கை மணம் உள்ளதா?' என்று தொடங்கி அரசிக்கு 'இயற்கைக் கூந்தல் உள்ளதா?' என்ற சந்தேகம் வந்துவிட்டது."

— ஓ.பி. முரளி

ஒழுங்குபடுத்தலாம் என்று கூட இந்த 'முற்போக்காளர்கள்' எழுதினார்கள், பேசினார்கள். இன்று அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்?

எய்ட்ஸ் நோய் பற்றிய நியாயமான கவலையும் பீதியும் இன்று உலக மக்களுக்கு இருந்தாலும் அளவுக்கு மீறிப் பயப்பட வேண்டியதில்லை என்று ஆறுதல் குரல்களும் அவ்வப்போது ஒலிக்கின்றன. ''இதைப் படித்துப் பாருங்கள்'' என்று ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்தார், தேவகி மருத்துவமனை டாக்டர் கே. சொக்கலிங்கம்.

சிங்கப்பூர் அரசு பொது மக்களின் நலனுக்காக வெளியிட்டுள்ள பிரசுரம் அது. அதில் முக்கியமாக நம் கவனத்தைக் கவர்கின்ற இரு அம்சங்கள்:

** உடலுறவுக்கு ஒருவரை ஒருவர் மட்டுமே நம்பியிருக்கிற ஆண் — பெண், அல்லது கணவன் — மனைவி எய்ட்ஸ் நோய் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை — துரோகம் இழைக்காதவரை.

** உணவுப் பொருள்களைப் பகிர்ந்து கொள்வதாலோ, தும்மல், இருமல் இவை மூலமாகவோ, ஒருவரை ஒருவர் தொட்டுக் கைகுலுக்குவதாலோ எய்ட்ஸ் நோய் பரவுவதில்லை. பயப்பட வேண்டாம்!

ஆனால் கவலை அளிக்கிற விஷயங்களையும் அந்தப் பிரசுரம் விளக்கி, எச்சரிக்கை செய்கிறது. அவற்றுள் நாம் ஏற்கெனவே பார்த்தவை தவிர புதியதாகச் சில கருத்துக்கள்:

** நோய் வந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளத் தேவையான அறிகுறிகளை எய்ட்ஸ் நோய் தொற்றி இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் வெளியே புலப்படும். இதற்குள் நோய் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு உள்ளுக்குள்ளே பெருகிவிடுகிறது.

** டூத் பிரஷ் மற்றும் நகம் வெட்டி, ரேஸர் போன்ற இலேசான காயம் ஏற்படுத்தக் கூடிய எந்தக் கருவியானாலும், உங்களுக்காக என்று ஒரு செட்டை வைத்துக் கொள்ளுங்கள். அக்யூபங்சர், பச்சை குத்துதல் போன்றவற்றில் பயன்படும் ஊசிகள் நன்றாக ஸ்டெர்லைஸ் செய்யப்படாவிட்டால் நோய் தொற்றலாம்.

** போதை ஊசி ஏற்றிக் கொள்கிற பழக்கம் இருந்தால் உடனே அப்பழக்கத்தைவிட்டு ஒழியுங்கள். ஒரே ஊசியைப் பலர் பயன்படுத்துகிற போது, எய்ட்ஸ் நோயுள்ள எவரேனும் பயன்படுத்தியிருந்தால் ஆபத்தாகிவிடும்.

** தாய் எய்ட்ஸ் கிருமிகளைச் சுமப்பவளாக இருந்தால் கருவில் வளரும் குழந்தையை அது பாதிக்கக் கூடும்.

இந்தியாவில் இரத்த வங்கிகளின் பரிதாபகரமான நிலைமையைக் குறிப்பிட்டு ஒரு டாக்டர் கூறியது இது:


''ஒருவரிடமிருந்து இரத்த தானம் பெறுகிறபோது மூன்று நோய்களுக்கான கிருமிகள் இருக்கின்றனவா என்று சோதனை பண்ணி விட்டுத்தான் ரத்தம் எடுப்பார்கள். ஸிஃபிலிஸ், மஞ்சள் காமாலை, மலேரியா. இந்த மூன்று தவிர, இனி எய்ட்ஸ் நோய்க் கிருமிகள் உள்ளனவா என்றும் ஆராய வேண்டும். ஓர் அனுபவம் கூறுகிறேன் கேளுங்கள்:

''என்னுடைய மகளுக்கே சமீபத்தில் ஓர் ஆபரேஷன் நடந்தது. ரத்தம் தேவைப்பட்டது. நல்ல ரத்தம் என்று சத்தியம் செய்து தான் ரத்த வங்கி கொடுத்தது. ஆபரேஷன் வெற்றி. ஆனாலும் என்ன? மஞ்சள் காமாலை தாக்கிவிட்டது. தானம் பெற்ற ரத்தத்திலிருந்து வந்துவிட்ட கிருமி தன் கைவரிசையைக் காட்டிவிட்டது. அதற்குச் சிகிச்சை நடந்து, என் மகள் பிழைத்து எழுந்துவிட்டாள் என்பது ஒருபுறமிருக்க, ரத்தத்தில் மஞ்சள் காமாலையே கண்ணில் படாமல் நம்மை ஏமாற்றும் போது எய்ட்ஸ் எங்கே அகப்படப் போகிறது?''

''இதை ஒழிக்க வழி?''

''பணத்துக்காக ரத்த தானம் பண்ணுகிற முறையைத் தடை செய்வது ஒன்றுதான் வழி'' என்றார் டாக்டர். ''ஆரோக்கியமான மனிதர்கள் மனமுவந்து தரும் ரத்தம்தான் உயிரைக் காப்பாற்றும். மற்றவை புதிய கோளாறுகளை உருவாக்கும்.''

— நமது நிருபர்




சிஷ்யன்: ஸ்வாமி! அந்த எம்.எல்.ஏ.வுக்கு ஏன் ஆசி வழங்க மறுத்துத் தொலைச்சீங்க?

குரு: ஏன் சிஷ்யா?

சிஷ்யன்: இப்போது ஆஸ்ரமங்களையெல்லாம் தேசியமய்மாக்கணும்னு சட்ட சபையில் பேச ஆரம்பிச்சுட்டார்!

— உ. ராஜாஜி



இங்கிலாந்து
டெஸ்ட் தொடரில்
மாபெரும் வெற்றி
பாரதம்
கபில்தேவ்
பஞ்சாப்
பாதல்
பயங்கரவாதிகள்
மத்திய அரசு
விழா எடுக்கும் ஊதாரி செலவுகள்
ஊழல்
சாராயம்
தமிழ் மக்கள்
உங்க பத்தாண்டு ஆட்சி சாதனைக்கு நினைவுக் கம்பங்களாமே? ஒவ்வொண்ணுக்கும் பொருத்தமான பெயர் வைச்சுருங்க. இப்படி!..



1986 ஜூலை 6
மலர் 44 இதழ் 49
அக்ஷய ஆனி 22

கல்கி



சபாஷ் பாண்டியா!

பஞ்சாபில் நடக்கும் படுகொலைகளைத் தற்காலிகமாக மறந்தோம்! அங்கிருந்து ஹிந்துக்கள் அகதிகளாக விரட்டி அடிக்கப்படுவதால் ஏற்படும் கோபத்தைச் சற்று நேரம் ஒதுக்கி வைத்தோம்; ஸ்ரீலங்கா ராணுவத்தின் ஹிட்லரிஸப் போக்கை நெஞ்சின் ஆழத்தில் புதைத்துக் கொண்டோம்! ஜெயவர்த்தனவின் புதிய சமரசத் திட்டங்கள் பலனளிக்குமா, ஈழத்தில் மறுபடி என்றேனும் அமைதி நிலவுமா என்பது போன்ற கவலைகளைக்கூட இரண்டாம்பட்சமாக்கினோம். தமிழக முதல்வர் தமது பெயரிலேயே வெளியிட்டுள்ள இரு விளம்பரங்களின் தாத்பர்யம் என்ன என்று அலசுவதை நிறுத்தி வைத்தோம்! இன்னும் உலகப் பிரச்னை முதல் ஊராட்சிப் பிரச்னை வரை சகலத்தையும் மறந்து ஒரே குதூகலத்தில் மிதந்தோம்!

சில நிமிஷ நேரம்தான்; சமுதாயப் பிரச்னைகள் மட்டுமின்றி, காரியாலயப் பிரச்னைகள், குடும்பப் பிரச்னைகள் எல்லாம் நம் மனத்தை மறுபடியும் ஆக்கிரமித்துக் கொண்டன. ஆனால் அந்தச் சில நிமிஷ நேரம்தான் எத்தனை ஆனந்தமாக இருந்தது! இவ்வாறு சகலத்தையும் மறந்து ஒரே சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்துபோகிற வாய்ப்பை அளித்த இந்திய கிரிக்கெட் அணிக்கு நமது நன்றி! நன்றி மட்டுமல்ல, வாழ்த்து — பாராட்டு — அன்பு முதலிய எல்லாம்!

'சபாஷ் பாண்டியா!' என்று கபில்தேவைத் தட்டிக் கொடுக்கிறோம். இருபது டெஸ்ட்டுகளுக்குப் பிறகு வந்த வெற்றிதான்; அதனாலேயே சுவை அதிகமாக இருக்கிறது! அதிலும் எப்பேர்ப்பட்ட வெற்றி! தொடர்ந்து இரு டெஸ்ட்களில் வெற்றி! அதன் மூலம் டெஸ்ட் தொடர் வெற்றி! ஏனோதானோ வெற்றியல்ல, சந்தேகத்துக்கிடமற்ற அழுத்தம் திருத்தமான வெற்றி!

வெங்ஸர்க்கார் சரித்திரம் கண்ட டெஸ்ட் தொடராக அமைந்தது இது. லார்ட்ஸ் மைதானத்தில் தொடர்ந்து மூன்றாவது சதம் போட்டு ஒரு ஹாட்ரிக் அடித்தார். அதுமட்டுமின்றி இந்தத் தொடரில் அடுத்தடுத்து இரு டெஸ்ட்களில் இரு சதங்கள். இந்த வெற்றிக் கோப்பையின் மூல உலோகமே வெங்ஸர்க்கார்தான். அத்தனையும் தங்கம்! உலோகத்தைக் கோப்பையாக உருமாற்றியது கபில்தேவின் காப்டன்ஸி திறமை என்றால், கலசத்தின் இரு பக்கமும் அமைந்த கைப்பிடிகள் பின்னி, மானிந்தர் சிங் ஆகியோர். ஒருவரது வேகப் பந்து வீச்சும் மற்றவரது சுழல் பந்து வீச்சும் எதிராளிகளின் ஆட்டத்தை நிர்மூலமாக்கின. கோப்பையினை மூடுகிற சிகரமாக விளங்கி அழகூட்டியது நமது அணியின் ஃபீல்டிங் திறமை. எத்தனை காட்சுகளை எப்படியெல்லாம் லாவகமாகப் பிடித்தார்கள்! ரன்கள் தராமல் அநாயாசமாக ஓடி பந்தைத் தேக்கினார்கள். நமது ஆட்டக்காரர்களுக்குப் பழக்கமற்ற மோசமான சீதோஷ்ண நிலை சோதனையாக அமைந்தது. அதையும் வெற்றி கண்டு கிரிக்கெட்டிலும் வெற்றி பெற்றார்கள்.

இங்கிலாந்து தேர்வுக் குழுவினர் முதல் டெஸ்ட் முடிந்ததுமே காப்டனை மாற்றியது ஆட்டத்தின் நோக்கிலும் ஆட்டக்காரர்கள் நோக்கிலும் அத்தனை உசிதமானதல்ல. வெற்றி தோல்விகள் மாறி மாறித்தான் வரும். இந்தத் திடீர் மாற்றம் இங்கிலாந்து ஆட்டக்காரர்களை மனச் சோர்வு அடையச் செய்திருக்கும்.

இந்தக் கிரிக்கெட் தொடரின் முக்கியப் பகுதிகளை—ஹைலைட்ஸ்—நாம் காண ஒளிபரப்பிய தூர்தர்சனையும் அதற்கு அனுமதி வழங்கிய மத்திய அரசையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆட்டத்தில் இங்கிலாந்து தோற்றுப் போயிருக்கலாம். ஆனால் டி.வி. ஒளிபரப்பில் அபார வெற்றி பெற்றது அந்நாடு. எத்தனை கோணங்களில் எவ்வளவு அற்புதமாகப் படம் பிடித்திருந்தார்கள்! கடைசியில் கபில் பேட்டியின்போது அவர், வெங்ஸர்க்கார், பின்னி, மானிந்தர் பற்றியெல்லாம் பேச, ஆங்காங்கே இடைவெட்டி அவர்களது ஆட்டத் திறனை மீண்டும் நாம் காணக் காட்டியது எத்தனை அழகாக இருந்தது!

உலகக் கோப்பைக்கான கால்பந்து ஆட்டமும் சரி, கிரிக்கெட்டும் சரி, இப்படி ஒளிபரப்பப்படுவது ரசிகர்களுக்குப் பெருவிருந்து என்றால் ஆட்டக்காரர்களுக்குப் படிப்பினை. தங்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வழங்கப்படும் பாடம். இந்த வரப்பிரசாதத்தை ஏற்று வளர்வோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

அவர்கள் என்ன பிளிமாக்காரர்களா?

• அனுதினமும் காலைவேளையில் தங்கள் மாநில முதல்வரை சர்வ சாதாரணமாய்ச் சந்திக்கும் கர்நாடக மக்கள் எங்கே? ஐம்பது தடவைகள் முயன்றும் முடியாமல் சந்திப்ப தற்கே உண்ணாவிரதம் இருக்கும் மூர்மார்க்கெட்காரர்கள்தாம் எங்கே? தமிழகத்தில் பிறந்த பாவத்திற்குப் புலம்புவதைத் தவிர வேறு என்ன லார் செய்ய முடியும்?

மீனுராகவன்.
தஞ்சாவூர்,

• என்ன, மூர்மார்க்கெட் வியாபாரிகளால் முதல்வரைச் சந்திக்க முடியவில்லையா? அவர்கள் என்ன பிளிமாக்காரர்களா, இல்லை கட்சிக்காரர்களா! ஐந்து வருடத்திற்கொரு முறை மறக்காமல் வந்து ஓட்டுப் போட்டுவிட்டு, பிறகு தொந்தரவு செய்யாமல் மூலையில் போய் முடங்கச் சொல்லுங்கள்!

அருண்.
ஈரோடு.

• தலையங்கத்தில் 'ஈழத் தமிழர் படும் அவதி காஷ்மீர மக்களைத் துடித்தெழச் செய்ய வில்லை' என்று கூறப்பட்டுள்ள காரணம் இந்திய உணர்வு இல்லாமையை மிகச் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகிறது.

அ. சம்பத்.
தஞ்சாவூர் — 7,

• எஸ். வி. சேகர் — கோபு, பாபு "சமூசா" வை பத்தி பத்தியாக விரிவாக விளக்கியது "கல்கி"யே. இதனால் எஸ். வி. சேகர் உம்மீது பாய்ந்தாலும், பாயலாம். ஜாக்கிரதை!

எஸ். உஷா மாலதி.
குத்தாலம்,

• எஸ்.வி. சேகர்—கோபு—பாபு சண்டையை ஒரு சின்னச் செய்தியாக வெளியிட்டிருக்க லாமே! மூன்று பக்கங்களை அதற்காக வீணடித்திருப்பது நியாயமில்லை சார்...!

ப. உத்தண்டராமன்.
நெய்வேலி — 3,

• மாலை வரை ஒரு மகிழ்ச்சி ரியலிஸம் நிறைந்த கதை. தொடர்ந்து இது போன்ற கதைகளை வெளியிடுங்கள்.

வி. சம்பத்.
ஈரோடு — 11.

• கவிஞர் மேத்தாவின் கைகளில் புறநானூறு புதிய கோணத்தில் புரண்டாலும், மலரப் போகும் "தமிழீழத்தின்" புலிகளுக்கு ஒற்றுமை உபதேசமாய் இருக்குமென்று எண்ணுகிறேன்.

மு. மதியழகன்.
பெரியகோட்டை.

• அட்டைப்பட மாடல் அழகி பற்றிய பேட்டியும், படமும் அமர்க்களம்.

காவி வேட்டி சங்கர்.
செங்காரப்பேட்டை.

• கண் பார்வை கெடுவது பற்றியும், அதைத் தவிர்க்கும் முறைகளைப் பற்றியும் டாக்டர் கோபாலசாமி கூறிய கருத்துக்கள் ஒவ்வொன்றும் பயனுள்ளதாய் இருந்தன.

டி. சத்தியபாமா பிரபு.
தாளையாத்தம்.

• முல்லா பற்றிய ஜோக்குகள் பத்து வருடங்களுக்கு முன்பே வேறு பத்திரிகையில் வெளியாகியுள்ளன.

இரா. ஜெகந்நாதன்.
பெங்களூர் — 79.

• தனி மனிதனாக நின்று கலவர வியூகத்தைத் தகர்த்த ஹெட் கான்ஸ்டபின் கப்பிர மணியத்துக்கு அபிமன்யு என்ற அடைமொழி மிகவும் பொருத்தம்தான்.

கே. வி. எஸ். மணியன்.
குடியாத்தம் — 2.

• 15.6.86 கல்கி இதழில் கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் சையத் முனீர் ஹோதாவின் பேட்டியைப் படித்தேன். கலெக்டரை எடை போடுவது பேட்டியின் நோக்கம் அல்ல என்றாலும், அவரின் நேர்மையும், கடமை உணர்வும் தேசப் பற்றும் அவர் அளித்த ஒவ்வொரு பதிலிலும் பிரதிபலித்தன.

எஸ். டி. கவாமி.
சென்னை — 91.

வட்டமேஜை

விஜயா ஆபீஸ் விட்டு வரும்போது வழக்கமில்லாத வழக்கமாக நரசிம்மனும், செல்லம்மாவும் ரொம்பவும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

புருவத்தை உயர்த்தியவாறே நோட்டமிட்ட அவளைக் கண்டு, ''ஒரு நல்ல செய்திம்மா!'' என்றார் நரசிம்மன்.

''விஜி! உனக்குத் திருமண யோகம் வந்தாச்சுடி!'' என்ற செல்லம்மாவின் முகத்தில்தான் எத்தனை திருப்தி.

விஜி சலனப்படவில்லை.

மானால் நன்றாக இருக்கும்....'' என்று மட்டும் தன் உள்ளக் கிடக்கையைக் கூறியிருந்தாள் அவள்.

''செல்லம்! குழந்தைக்கு டிபன், காப்பி கொடு. பேசிக் கொண்டே சாப்பிடட்டும். விஜிம்மா! நீ போய் டிரஸ் மாத்திட்டு வா. எல்லா விஷயங்களையும் சொல்றேன்!'' என்றார் நரசிம்மன்.

தன்னுடைய சாதனையைப் பற்றிக் கூறப் போகும் பெருமிதம் அவர் முகத்தில் பளிச்சிட்டது.

இடைவெளி இல்லாத சந்தோஷங்கள்



கோமகள்

மனத்தில் ஒரு சின்னச் சோகம் ஆட்கொண்டது.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இத்தனை மகிழ்ச்சியா?

அவளை அனுப்பிவிட்டு அவர்களால் எப்படி இருக்க முடியும்?

''எனக்குத் திருமணத்திற்கு ஒன்றும் அவசரமில்லை. இன்னும் சில வருஷங்கள் போகலாம்மா!'' என்று அம்மாவிடம் மன்றாடி விட்டு அவள் எத்தனையோ தரம் கூறியிருந்தும் பெற்ற மனம் ஒத்துக் கொள்ளவில்லை.

''ஒண்ணு மட்டும் சொல்றேன்ம்மா! சென்னையிலேயே என் வாழ்க்கை அமையு

உடை மாற்றிக் கொண்டு வந்த விஜயா, காப்பியைப் பருகிவிட்டு, டிபனைக் கொறிக்க ஆரம்பித்தாள்.

''போன மாதக் கடைசியிலே வந்தானே ஒரு மாதிரியான பி.ஏ. பையன், அவனுக்கு நம் சொத்துப் பத்துக்கள் தெரிய வேண்டுமாம். நாம் இருப்பது சொந்த வீடானால் அதை அவன் பெயரில் மாற்றிவிட வேண்டுமாம். இன்னும்....'' என்று மேலும் பேச வந்தவரை விஜயா இடைவெட்டினாள்.

''போதும்ப்பா!''

''இந்த மாத முதல் வாரம் பெங்களூர்லே இருந்து வந்தாங்களே, அந்தப் பையனுக்கு

அருள்வாக்கு



பயம் என்றால் என்ன? 'நமக்கு என்ன ஆயிடுமோ? ஏதாயிடுமோ?' என்று நிம்மதியில்லாமல் தவிப்பதுதான் பயம். 'நம்மை எதுவும் என்னவும் பண்ண முடியாது; அசைக்க முடியாது!' என்று ஸ்திரமாக ஒரு ஸ்தானத்தில் நம்மை அமர்த்திக் கொள்கிற வரையில் பயம் இருந்து கொண்டே இருக்கும். அப்படி ஜீவனை ஆட்டமில்லாத நிம்மதியான ஒரு ஸ்தானத்தில் சாச்வதமாக இருக்கச் செய்வதுதான் மோக்ஷநிலை என்பது. நமக்கு அந்நியமாக எதுவோ ஒன்று இருக்கிற வரைக்கும், 'அது நம்மை என்ன பண்ணிவிடுமோ?' நாம் நிம்மதியின் ஸௌக்கியத்திலேயே ஸ்திரமாக இருக்க முடியாதபடி 'அதனிடமிருந்து என்ன கெடுதல் வருமோ?' என்ற எண்ணம், அதாவது பயம், இருந்து கொண்டேதான் இருக்கும்.

'நாம் ஒன்று; நமக்கு இரண்டாவதாக இன்னொரு அந்நிய வஸ்து, அநேக அந்நிய வஸ்துக்கள் உள்ளன' என்ற வேறுபாட்டுக்குத்தான் "த்வைதம்" என்று பெயர்.

த்வைதமிருந்தால் அப்போது ஒன்றுக்குத் தன்னை விட வேறாக உள்ள இன்னொன்றால் பயம் ஏற்பட இடமுண்டு. எப்போது த்வைதம் போய், தனக்கு வேறாக எதுவுமே இல்லை என்று தெரிந்து கொள்கிறோமோ, வேறில்லாத தானான ஆத்மாவில் ஆணி அடித்தாற்போல் நம்மை ஸ்திரமாக அமர்த்திக் கொள்கிறோமோ, அப்போதுதான் பயம் போகும். இப்படி த்வைதமில்லாமல் ஆவதுதான் அத்வைதம்.

வேதம் சொல்கிற மோக்ஷம் அந்த அத்வைத அனுபவந்தான் என்று நம்முடைய ஆசார்யாள் ப்ரஹ்ம ஸூத்ரம், உபநிஷத்துக்கள், கீதை ஆகியவற்றுக்குப் பாஷ்யம் செய்து நிலைநாட்டியிருக்கிறார். அத்வைதம்தான் மோக்ஷம். அது பயமில்லாத அபயநிலை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஸ்டேட்ஸ் போகணும்னு ஆசையாம். அந்தச் செலவை நாம் ஏத்துக்கிட்ட அடுத்தகணமே, 'உங்க பெண் கழுத்திலே தாலியைக் கட்டிடுவேன்'னு தந்தி கொடுத்திருக்கான்மா!"

"விடுங்கப்பா!" எரிச்சலோடு கூறினாள் அவள்.

"இன்னும் ஒண்ணே ஒண்ணும்மா! மதுரையிலேயிருந்து ஒரு பேங்க் எம்ப்ளாயி வந்திருந்தானே அவன் என்ன எழுதியிருக்கான்னு தெரியுமா?"

"சஸ்பென்ஸ் எல்லாம் வேண்டாம்ப்பா! இந்த மாதிரி கடிதங்கள் எல்லாம் ஒரே மாதிரிதான் எழுதப்பட்டிருக்கும். சீக்கிரம் சொன்னீங்கன்னா நான் என்னோட ஃபைலைக் கொஞ்சம் பார்ப்பேன்!" சலிப்போடு கூறினாள் விஜயா.

இந்த வயசுப் பொண்ணுக்கு இப்படிக்கூட ஒரு சலிப்பும், கசப்பும் இருக்க முடியுமா? ஏன் இப்படி உற்சாகமே இல்லாமல் இருக்கிறாள்?

ஒரு நல்ல மண வாழ்க்கைக்கு மனசுக்குள் கற்பனைக் கோட்டைகள் கட்டிக் கொண்டு அதை ஆவலோடு எதிர்பார்க்கும் வயசில்லையா இவளுக்கு?

ஒருவேளை பெற்ற அம்மா, அப்பாவை விட்டு எப்படிப் பிரிந்திருக்கிறதுன்னு உள்ளுக்குள் கவலைப்படுகிறாளா?

"என்னப்பா மௌனமாயிட்டீங்க?" அவர் சிந்தனையைத் தட்டி எழுப்பினாள் விஜயா.

"உம்! ஏதோ நினைப்பு!" என்று சமாளித்தார் அவர்.

பிறகு, "மதுரைப் பையனைப் பற்றியும் சொல்லி முடிச்சுடறேன் விஜிம்மா! அப்புறம் உன் இஷ்டம்!" என்று ஆரம்பித்தார்.

"அந்த மதுரைப் பையன் மோகன் எழுதியிருக்கான். அவனுக்குச் சொல்லிக்கும்படியா மனுஷர்கள் யாருமில்லையாம். அம்மா மட்டும்தான். ஆடம்பரம் வேண்டாம். நகைகள், பாத்திரங்கள், புடவைகள் என்று எந்த பேரமும் வேண்டாம். எனக்குப் பெண்ணைப் பிடித்திருக்கிறது. முக்கியமானது பெண்ணுக்கு என்னைப் பிடித்திருப்பதுதான். அதைத் தெரியப்படுத்த வேண்டுகிறேன்'ன்னு எழுதியிருக்கான்ம்மா!"

விஜயாவின் முகத்தில் மூட்டமிட்டிருந்த சலிப்பும், எரிச்சலும் சற்றே கலைந்து, மெல்லிய புன்முறுவல் தவழவாரம்பித்தது.

"உம்! விஜிக்கு இந்தப் பையனைப் பிடிச்சாச்சு!" அம்மா குதூகலப்பட்டாள்.

"எனக்குப் பையனைப் பிடிச்சிருக்கோ, என்னவோ அவரது வாசகங்கள், அணுகுமுறைகள் பிடிச்சிருக்கு....." மெல்ல மொழிந்தாள் அவள்.

"அப்போ விஜிம்மா! திருமண ஏற்பாடு களைச் செய்யலாமா?"

"உங்க இஷ்டம் அப்பா!" பெரிதாக ஒன்றும் நாணப்படாதது போலவே மகிழ்ச்சியையும் பிரதிபலிக்கவில்லை அவள்.

எழுந்துதன்னறைக்குச்சென்றாள்விஜயா.

மோகன் வந்தான்.

"யாருமில்லாததால் எனக்கு நானே வர வேண்டியிருக்கு ஸார்!" என்று அவன் கூறினான்.

"ஏன் அப்படிச் சொல்றீங்க மாப்பிள்ளை! நாங்களெல்லாம் உங்களுக்கு இல்லையா?" என்று நரசிம்மன் குறுக்கிட்டார்.

"தேங்க்யூ ஸார்!" என்றவன், மற்ற விஷயங்களையும் பேசி, முடிவாக திருமணத் தேதியை நிச்சயித்துவிட்டு, அழைப்பிதழ்களை அச்சடிக்கச் சென்றான்.

"பை தி பை, விஜயாவுக்கு அஃபிஷியலா எத்தனை இன்விடேஷன் வேண்டும்?" தயக்கத்தோடு கேட்டான்.

"ட்வென்ட்டி இஸ் இனஃப்" என்றாள் விஜயா.

"நான் வேலையைக் கன்ட்டின்யூ பண்ணட்டுமா?" பெற்றோர்கள் எதிரிலேயே கேட்டாள் அவள்.

"திருமண சமயத்தில் ஒரு மாதம் லீவ் போட்டுவிட்டால் அது பற்றி அப்புறம் டிசைட் பண்ணிக்கலாம்னு நினைக்கறேன்!"

"ஓ.கே." திருப்தியோடு புன்னகை செய்தாள்.

மதுரையில் விஜயா இருந்த நாட்களில் அவள் மோகனை நன்கு புரிந்து கொண்டாள். கடிதத்தில் எழுதியிருந்தபடி அவன் ஆடம்பரங்களை வெறுத்தான். அமைதியே உருவாக இருந்தான்.

தம்பதிகளை அழகர் கோயிலுக்குப் போய் வரும்படி அனுப்பினாள் மோகனின் அம்மா. அடுத்து மீனாட்சி கோயிலுக்கு அனுப்பி வைத்தான்.

மதுரையும் தன் கணவனைப் போலவே அமைதியாக உள்ளதாக எண்ணினாள் அவள். சென்னையைப் போல, பார்க்கும் மனிதர்கள் எல்லாம் பரபரத்து ஓடவில்லை. இவர்கள் அவசரத்தில் ஒரு நிதானம் இருந்தது. இதயத் துடிப்பிற்கு இணையாக அவர்கள் ஓடவில்லை.

"விஜி! எப்படி இருக்கு எங்க ஊர்?"

"ஐ லைக் மதுரை வெரிமச்!"

"அப்படியா? சென்னையை விடவா?"

"உம்! நம்ப மதுரையாச்சே?" அவள் கன்னத்தில் குங்கும ரேகைகள் ஓடி மறைந்தன.

மோகனின் மனத்தில், 'இதந்தரும் மனையாள் அன்பு, சுதந்திர மனங்களின் காதல்' என்ற வரிகள் ஓடின.

அழகிய பூங்காவில் அமைதியான மலர்கள், நிலவொளியில் குளிப்பது போல் அவர்கள் இல்லத்தில் மணமும், ஒளியும் நிறைந்திருந்தன.

போனது தெரியாமல் இருபத்து நான்கு நாட்கள் ஓடிவிட்டன.

"விஜி! உன் விடுமுறை நாட்கள் குறைந்து கொண்டே வருகின்றதே...." திடீரென ஞாபகம் வந்தாற்போல் கேட்டான் மோகன்.

அவனது மனநிலை அவளுக்குப் புரியவில்லை.

"விஜி!"

"உம்!"

"இன்னும் நாலே நாட்கள்தான் இருக்கு...."

"எதற்கு?"

"நீ சென்னைக்குப் புறப்படுவதற்கு."

"ஓ! நான் எப்போது புறப்படுவேன்னு நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா?"

"இல்லை, உலகத்திலுள்ள கடிகாரங்களை எல்லாம் நிறுத்திவிடலாமான்னு பார்க்

வருங்கால முதல்வர் ரஜினிகாந்த்!

வாசகர் குமுறல்

சமீபத்தில் சென்னையில் நடந்த 'படிக்காதவன்' பட வெள்ளிவிழாவின் போது, ரஜினி ரசிகர்கள், 'வருங்கால முதல்வர் ரஜினி வாழ்க' என்று கோஷம் போட்டதாக ஒரு பத்திரிகை, செய்தி வெளியிட்டுள்ளது. இதுபோன்ற கண்மூடித்தனமான ரசிகர்களும் ரசிகர் மன்றங்களும் இருக்கும் வரை நாம் முன்னேறவே முடியாது. என்று சினிமா மோகம் இந்தியாவில் அழிகிறதோ அன்றுதான் நாம் 21 ஆம் நூற்றாண்டுக்குச் செல்ல முடியும்.

— ஆர். ஆனந்த், கும்பகோணம்.

எங்களுக்கு ஏன் அனுமதி இல்லை?

குடும்பத்துடன் ஏர்வாடி போய்வர முடிவு செய்தோம். அப்படியே பாம்பன் பாலத்தையும், உலகிலேயே நீண்ட, பிரசித்தி பெற்ற பிராகாரம் உள்ள ராமேஸ்வரம் கோவிலையும் காண்பித்து வரலாம் என்று நேராக ராமேஸ்வரம் போனோம்.

பிராகாரங்களைச் சுற்றி முடித்து பெரிய நந்தியை வியந்து குழந்தைகளுக்குக் காட்டிக் கொண்டிருந்தோம். அப்போது காவலர் ஒருவர் வந்து நெட்டித் தள்ளாத குறையாக 'வெளியே போங்கள்' என்றார். ஏன் என்றதற்கு முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் அனுமதிக்கப்படுவதில்லை என்றார். உயர் அதிகாரியும் எவ்வளவு வாதாடியும் உள்ளே அனுமதிக்க மறுத்து விட்டார். சோர்ந்து போய்த் திரும்பி விட்டோம்.

சாதி, சமய வேறுபாடற்ற நாடு என்று மேடைகளில் பெருமை பேசுகிறோம். இவ்வளவு சிறிய விஷயத்தில் விட்டுக் கொடுக்

கிறேன். மேகங்களை வானில் விதைத்து, கதிரவன் மணிக் கணக்கைக் காட்டக்கூடாது என்று உத்தரவிடலாமான்னு பார்க்கிறேன்."

க்ளுக்கெனச் சிரித்தாள்.

"தமிழ் வளர்த்த மதுரையில் பிறந்து வளர்ந்தவர்னு புரிகிறது. அதனால்தானே தனிமைத் தவிப்பைக் கலாரசனையோடு சுட்டிக் காட்டுகிறீர்கள். ஆனால்....." என்று எழுந்து கொண்ட விஜயா படுத்திருந்த அவனது தலைமுடியைக் கோதியவாறே அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"என்ன சொல்ல வந்தாய் விஜி? ஏன் நிறுத்திட்டே?"

"திருமணமானதும் ஒரு ஆணும், பெண்ணும் இணைபிரியாமல் இருப்பதுதான் வாழ்க்கை என்றால், உங்கள் சங்க காலத் தமிழன் திரைகடலோடித் திரவியம் தேடப் புறப்பட்டிருப்பானா?"

மோகன் தட்டென எழுந்து விடுகிறான். என்ன.... என்ன சொல்ல வருகிறாள் அவனது புது மனைவி.

"விஜி! மனம் விட்டுப் பேசு!"

"நீங்க என்ன நினைக்கறீங்களோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரை இது தம்பதிகள் இருவரும் சேர்ந்து உழைத்துச் சம்பாதித்து முன்னேறும் உலகம். சில வருடங்களாவது இரண்டு பேரின் வருமானமும் வங்கியில் வளர்ந்து பெருக வேண்டும். வருங்கால வாழ்க்கைக்கு சேமிப்பு இருக்குமானால் தன்னம்பிக்கையும் வளருமல்லவா? அப்புறம் குழந்தைகள்னு பிறந்துட்டா மனைவி அவர்களைத்தானே கவனிச்சாகணும்?"

பிரமிப்போடு அவளைப் பார்த்திருந்த மோகன், "பலேபலே! உன்னை நான் பாராட்டறேன். கற்பனைகளில்லாத சபலங்களில்லாத, ஏன் சந்தோஷங்களில்லாத ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கலாம் என்கிறாய்! அப்படித்தானே?" என்றான்.

"இடைவெளியில்லாத சந்தோஷங்களும் கசந்துதான் போகும்!"

"அதுதான் தவறு. இடைவெளின்னு தனிமைன்னு அர்த்தம். பிரிவுன்னு அர்த்தம்...."

"ஐயோ பாவம்! எ... ... வேலை இருக்கு!" என்று கூறிவிட்டு அடு... ...க்குச் சென்றாள் விஜயா.

அன்று பரபரப்பாக முன்னதாகவே பேங்கிலிருந்து திரும்... ... மோகன் "விஜி! நாளைக்கு நீ சென்னைக்குப் புறப்படணுமில்லையா?" என்றான்.

"இல்லை, நான் புறப்படுவதாக இல்லை!"

"ஏன் விஜி! நீ அன்று சொன்னதெல்லாம் சரிதான். நான் ஒப்புக் கொள்கிறேன் விஜி!" ஆறுதலான குரலில் கூறினான் மோகன்.

"அப்பா நமக்கு அந்தக் கஷ்டத்தை வைக்கவே இல்லை. இங்கே இருக்கற கிளை ஆபீஸுக்கு எனக்கு மாற்றலுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இன்னும் இரண்டு தினங்களில் நான் வேலைக்குச் சேரணும். இந்தாங்க அப்பாவோட லெட்டரும், என் அப்பாயிண்ட்மென்ட் ஆர்டரும்!" என்று அவற்றை அவனிடம் தந்தாள்.

அதைப் பார்த்துவிட்டு திருப்பித் தந்தவன் முகத்தில் எவ்விதக் குதூகலத்தையும் காணோம்.

"நான் வேலைக்குப் போறதில் உங்களுக்கு இஷ்டமில்லையா?" தயக்கத்தோடு கேட்டாள் அவள்.

"இடைவெளியில்லாத சந்தோஷங்கள் கசந்து போகுமேன்னுதான் பயப்படறேன்!" என்றான்.

விஜயா கலகலவென்று சிரித்தாள்.

"உங்க பேங்க்குக்கும் என் ஆபீஸுக்கும் நிச்சயம் நிறைய இடைவெளி இருக்கிறது!"

"ஆனால் நமக்குள் அந்த இடைவெளி நிச்சயமாக எப்போதும் இருக்கக் கூடாது! புரிகிறதா விஜி?" என்று அவளை எட்டிப் பிடிக்க முயன்றான் மோகன்.

அவன் கைக்குள் அகப்படாமல் தப்பிச் சென்று மறைந்தாள் அவள்.

காதவர்கள், சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் எங்கே கட்டிக் காக்கப் போகிறோம்?

— நஸீம், திருப்பூர்.

சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி பிடுங்கிக் கொள்கிறார்!

தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் சலுகை விலைத்தாளில் நோட்டுப் புத்தகங்களைத் தயார் செய்து அரசு மேல்நிலைப் பள்ளிகளின் கோ — ஆபரேடிவ் ஸ்டோர்கள் மூலம் மாணவர்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. விலைகளும் அந்தந்த நோட்டுப் புத்தகங்களின் மீதே அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த விலைக்கு மேல் 'யாரும் கொடுக்க வேண்டாம்' என்று வேறு கூறப்படுகிறது.

ஆனால் உண்மை நிலை வேறுவிதமாக உள்ளது. பள்ளி திறந்ததும் அந்த நோட்டுப் புத்தகங்களுக்கு ஏகக் கிராக்கி. விலை உயர்வு வேறு! உதாரணமாக 192 பக்கமுள்ள சாதாரண நோட்டு மூன்று ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால் நோட்டின் அட்டையில் ரூ. 2.50 என்று அச்சடிப்பட்டுள்ளது. எல்லா நோட்டுப் புத்தகங்களுக்கும் இதே நிலைதான். ஒழுங்காகக் கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. வரும் நோட்டுகளில் பாதியை மட்டும் மாணவர்களுக்கு விநியோகித்துவிட்டு மீதியை மொத்தமாகத் தனி நிறுவனங்களுக்கு விற்றுவிடுகிறார்கள். இதில் ஏகப்பட்ட கமிஷன்! விலையேற்றத்தைப் பொருட்படுத்த முடியாத அவசர நிலை, பெற்றோர்களுக்கு! அரசு நல்லது செய்வதே அபூர்வம்! அப்படியே ஏதேனும் இதுபோல் செய்தால் இடையில் இப்படி ஏகப்பட்ட கொள்ளை! இதைத் தடுக்க வழியே இல்லையா? நமது மனங்கள் என்று செம்மைப்படும்?

— சூரியநிலா, ஈரோடு — 16.

என்ன செய்தி?

சில ஆண்டுகளுக்குமுன்புதான் ஒட்டக் கூத்தர் தமது இனிய மனையாளை எமனுக்குத் தானம் கொடுத்தார். ஆயினும் ஒட்டக் கூத்தரிடம் ஒட்டிக் கொண்டிருந்த ஒரே பழக்கம், ஒண்டிடாடியரின் தண்ணிய அழகின் தண்ணீர்த் தாகம்.

வயது ஐம்பது; அங்குதானே இளமையின் நியாயமான இனிய தாகமே ஆண்களுக்கு — குறிப்பாக அறிவின் மேதாவிலாசத்துக் கற்பனைகளிலும் கனவுகளிலும் மிதப்பவர்களுக்கு ஏற்படுவது...!

குடந்தையிலிருக்கும் பதியிலார் காப்பியம் ஒன்று, கோட்டின் கால் கட்டிலின் மேல் கொடுத்து வைத்த புண்ணிய சொரூபியாக அமர்ந்திருந்தாள். ஒட்டக் கூத்தரோடு ஒட்டி மகிழ்வது என்பது கொட்டி வைத்த புண்ணியம், கொடுத்த வரமல்லவா?

ஓராண்டுக் காலமாகத்தான் இவளது இந்தப் புதிய தொடர்பு. மாதத்தில் ஒரு பௌர்ணமி அவர்களை வெளிச்சத்தில் தாலாட்டும்.

அரசக்குறவர் அன்பிற்குப் பாத்திரமானதால் அந்த அழகின் குறவஞ்சியும் இருபத்து ஒன்பது நாட்களுக்கு இரவே இல்லை என்று எண்ணித் தியாகம் புரிந்தாள். பெயர் சுஜாதை.

மான்மதச் சாந்து மணக்க, மன்மதன் சாடை தெறிக்க ஒட்டக்கூத்தர், முட்டத் துடிக்கும் காளைபோல் அறையினுள் பிரவேசிக்கிறார்.

எழுந்தோடிச் சென்ற சுஜாதை, புள்ளி மானென்று துள்ளி, கலைமானென்றைத் தழுவுவது போலத் தழுவிக் கொண்டாள்.

கோவி.மணிசேகரன்



அந்தத் தழுவலில் கலைமானின் ஐம்பது: சுஜாதையின் இருபத்தைந்தானது.

"நலமா, சுஜாதை?"

"தமிழ் என்னை நலமாக வைத்திருக்கிறது. தமிழ்ச் செல்வமே!"

இலக்கியமும் இலக்கணமும் அன்றிரவு முழுவதுமே இரண்டறக் கலந்து காமயாகப் பரணியைப் பௌர்ணமி நிலவில் எழுதத் தொடங்கின.

அந்தச் சமயத்தில்......

கதவு தட்டும் ஓசை...

யாரது? ஒட்டக்கூத்தன் பூஜையில் ஓநாய் நுழைந்தது போல...

பௌர்ணமி என்றால் அநபாயனும் வர மாட்டானே?

கதவைத் திறந்து கவனிக்கிறார்.

பணிப்பெண் சொன்னாள்:

"முதலமைச்சர் வந்திருக்கிறார்!"

சேக்கிழாரா? இப்போதுதானா அவருக்கு நேரம் கிடைத்தது?

சே! இது விஷயத்தில் அவர் பிறந்த குழந்தை. நேரம் தெரியாமலல்ல; நேர்வது தெரியாமல் நுழைந்திருக்கிறது.

"ஆகவே நாளை புதிய அமைச்சர்களையும் சில பொறுப்புள்ள சேனாதிபதிகளையும் அழைத்துப் பிரகடனம் செய்ய வேண்டும். தேர்தல்நடைபெறுதவணர்களில்நீதிவழுவாத் தேர்தல் நடத்தல் வேண்டும்."

சேக்கிழார் விரலில் இருக்கும் ராஜ இலச்சினையைக் கவனிக்கிறார் ஒட்டக்கூத்தர்.

யாருக்குக் கிடைக்கும் இந்தப் பேறு?

"நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர்! மேலும் மன்னர் சகல அதிகாரங்களையும் சர்வ வல்லமைகளையும் உங்களுக்குக் கொடுத்துவிட்ட பிறகு என்னைக் கலந்து ஆலோசிப்பானேன்?"

சேக்கிழார் சாணக்கியமாய்ச் சிரிக்கிறார்.

"வாணிதாசரே! இந்த ராஜலாஞ்சனத்துக்கு சோழ சாம்ராஜ்யமே பணியும்! ஆனால் இது மட்டும் இருவருக்குப் பணிந்தே தீர வேண்டும்! ஒருவர் சோழமாமன்னர்; அடுத்து நீங்கள்! எனவேதான் உங்களைக் கலந்து ஆலோசிக்க இரவு நேரம் பார்த்து வந்தது."

"சேக்கிழாரே! இரவு நேரத்தில் வாருங்கள். உங்களுக்குத் தடை விதிக்கக் காற்றுக்கே அதிகாரம் கிடையாது. ஆனால் பௌர்

மாண்புமிகு முதலமைச்சர்

தம்மை ஒருவாறு சரிப்படுத்திக் கொண்டு மாடியை விட்டிறங்குகிறார்.

கவிராட்சஸரைக் கண்டதும் சேக்கிழார் எழுந்து நின்று வணக்கம் போடுகிறார்.

"வாருங்கள் சேக்கிழாரே! ஏது இரவு கடந்த நேரத்தில்?"

"மன்னிக்கவும்; தொல்லை கொடுத்து விட்டேனா?"

"அப்படியொன்றுமில்லை. வந்த காரியம் என்னவோ?"

"பழையாறை ஏரியுடைப்புக்கான விசாரணைகளைக் கொலு மண்டபத்தில் வைத்துக் கொள்ளாமல், உடைப்புக்குக் காரணமாயிருந்த அமைச்சர் விக்கிரம சோழ சம்புவராயரை வீணில் விசாரணையில் வைக்காமல் மௌனமாக விலகிக் கொள்ளச் சொன்னேன்."

"என்ன சொன்னார்?"

"முதலில் 'வீண் பழி, அது இது' என்று சத்தமிட்டார். 'சாட்சிகள் இருக்கின்றன; என் மீது நீங்கள் கொண்ட காழ்ப்புக்கு விவசாயிகள் என்ன செய்வார்கள்? இதனால் நட்டம் சோழ நாட்டுக்கல்லவா?' என்றேன். அவர் விலகல் ஓலை எழுதிக் கொடுத்து விட்டுத் தொண்டை மண்டலம் நோக்கிப் புறப்பட்டு விட்டார். அவரைத் தொடர்ந்து அமைச்சர் ஏழிசை மோகன் காடவராயரும் 'எனக்கு மட்டும் இங்கு என்ன வேலை?' என்று விலகிக் கொண்டதுதான் ஆச்சரியம்!"

"தொலையட்டுமே!"

ணமி நிலாவுக்கு உண்டு! இந்த இரவு எனது அந்தரங்கத்திற்குரியது!"

விரலை மூக்கில் உரசியவாறே சேக்கிழார் எழுந்து கொண்டார்.

செம்மாந்த அறிவுடை சேக்கிழார் என்கிறார்களே... புரிகிறது...

ஒட்டக்கூத்தரும் எழுந்து நின்று ஓங்காரமாய்ச் சிரித்தார்.

கதவிடுக்கிலிருந்து கவனித்த சுஜாதை, முதலமைச்சரை விழுங்கும் வேல்விழிகளால் கொத்துகிறாள்.

மீசையற்ற இந்த ஆண்மயங்கும் பேரழகில், ஆசையற்றுப் போனதென்ன? என்று வியக்கிறாள். சேக்கிழாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாள். முதன் முறையாகப் பார்க்கவே, வான்மீகி வருணித்த இராமச்சந்திர மூர்த்தியின் வனப்புமிக்க அழகு கண்ணைப் பறித்துக் கருத்தைக் கற்பழித்தது. சே! இது மூடக்கற்பனையின் ஊமைக்கனவு!

அவள் தலையை உள்ளே இழுத்துக் கொண்டாள்.

"முதலமைச்சரே! உங்கள் விருப்பம் எதுவோ அதனைச் செய்யலாம். நான் குறுக்கிட மாட்டேன். பழையாறை விவசாயிகளுக்குப் பத்தாயிரம் பொன் தருகிற போது என்னைக் கேட்டீர்களா என்ன?"

"அது..."

"இதுவும் அது! எனக்கு வேண்டாம் அரசியல். உங்கள் விருப்பம் போலச் செயல்படலாம். போகட்டும். ஒரு சந்தேகம். நீங்களறிவீர்களா?"

''எதை? சொல்லுங்கள்?''

''அந்த ஜோதி என்கிற நாட்டியக்காரி உங்களையே வலம் வந்து கொண்டிருக்கிறாளாமே! பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள்.''

''பேசட்டும்; இதுவும் ஒருவித அரசியலே! எனக்கு அவள் ஒரு வெளிச்சமாகத் தெரிகிறாள். இருட்டுச் சந்தேகம் எனக்கு அவசியமற்றது. சோழ மாமன்னர் என்னை முதலமைச்சராக்கிச் சோதிக்கிறார்; ஜோதி, என்னைக் காப்பியம் எழுதச் சொல்லிப் போதிக்கிறாள். தொண்டர் மாக்கதை எழுதத் தூண்டுகிறாள்...

செய்தி வெளிப்பட்டது; வெடிபட்டும் விட்டது.

''ஓகோ! செய்தி அப்படியா? இன்னொரு செய்தி... ஜோதியைச் சோழமன்னன் காதலிக்கிறானாமே!''

அதிர்ந்து போனார் அரசியல் ஞானியான சேக்கிழார். ''ஒட்டக்கூத்தரே!''

''இது கேள்வியல்ல; நானே சந்தேகப்படுவது. இரகசியமாக இருக்கட்டும்.''

''நான் நம்பமாட்டேன். ஜோதியை நானறிவேன். ஒருகால் மன்னரின் ஒருதலைக் காதலாக இருக்கலாம்! நேரமாகிறது. பௌர்ணமி இரவு நடுநிசிக்கு வருகிறது. நான் விடை பெறுகிறேன்!''

சேக்கிழார் சொல்லிப் புறப்பட்ட நடுநிசி இரவு, நயத்தகு நகைப்பையுண்டு பண்ண, ஒட்டக்கூத்தர் சுஜாதை சுகம் நாடி அறையினுள் சென்றார்.

அவர்களுக்கு உலகம் இருண்டு போனது; காரணம் பௌர்ணமி நிலவு அறையினுள் குடிகொண்டு விட்டது.

சோழ மாமன்னன், ஜோதி மீது காதல் கொண்டிருக்கிறானா?

ஓ... கபாலீச்சுரன் காதுகளில் விழுந்தால் மண்டையோட்டாலேயே தனது மண்டையைப் பிளந்து கொள்வானே!

இதனைப் பிறகு கூர்ந்து நோக்கி ஆராய்வோம் என்ற அளவில் விட்டுவிட்டு, அரசியல் சிந்தனையில் விறுவிறுவென்று சுழலலானார்.

அன்று எழுந்த சூரியன் சோழப் பேரரசுக்குப் புதிய கிரணங்களையூட்டுவோனாக ஒளிர்கிறான்.

அமைச்சர்கள் நால்வர் நேமிக்கப்படுகிறார்கள்.

விக்கிரமசோழ சேதிராயர்; இவர் மலையமான் நாட்டுத் திருக்கோவிலூர் சிற்றரசராக இருந்தாலும், அங்கிருந்தவாறே தொண்டை மண்டலம் முழுவதுமாகக் கவனிக்க வேண்டும்.

அதியமான். இவர் கொங்கு நாட்டுத் தகடூர் சிற்றரசரானாலும் அங்கிருந்து கொங்கு மண்டலத்தைக் கவனிக்க வேண்டும்.

நாலூரான். இவர் ஏற்கெனவே சோழப் பேரரசில் பதவி வகித்தாலும் அமைச்சு பதவிக்கு உயர்வு காண்கிறார். இராமாநுஜர் மதத்தைச் சார்ந்த வைணவர். வைணவ மதத்துக்கும், சோழ மண்டலத்துத் தேர்தல்களுக்கும், மற்றும் மக்கள் நலனுக்கும் உரியவராகிறார்.

ஆக்ரி ராஸ்தா

தமிழில் வந்த கைதியின் டைரியை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்! ஒரு விசுவாசத் தொண்டனின் அழகான மனைவியை அநியாயமாய்ச் சிதைத்தவர்களைப் பழி வாங்க, சிறைவாசம் முடிந்து கிளம்பும் அதே டேவிடின் கதைதான் ஆக்ரி ராஸ்தா.

தமிழில் கமல் செய்ததை ஹிந்தியில் அமிதாப்.

அப்பா வேஷத்தைப் பொறுத்தவரை அமிதாப் அட்டகாச அமிதாப். ஆனால் சி.ஐ.டி. அமிதாப்தான் கொஞ்சம் இடிக்கிறார். அவருக்கு வயது இருபத்து நான்குக்குக் கொஞ்சம் மேலேதான் என்று சொல்வதும், டூயட் பாட விடுவதும், அடிதடியில் இறங்க வைப்பதும் இளமை மைனஸான அமிதாபுக்கு அவ்வளவாக ஒத்துப் போகவில்லை.

முழுக்க முழுக்க ஹீரோ ஸப்ஜெக்டாகப் போய்விட்டதால் ஜெயப்ரதாவும், ஸ்ரீதேவியும் எலுமிச்சை ஊறுகாய், மாங்காய் ஊறுகாய் போலத்தான். அதனாலேயோ என்னவோ, அந்த நீளமூக்கு மச்சமோகினி ஜெயப்ரதாவையும், வடுமாங்காய்ப் பேச்சுக்காரர் ஸ்ரீதேவியையும் இன்னும் கொஞ்சம் பார்க்க மாட்டோமா என்று நினைக்க வைத்து விடுகிறார்கள்.

ஒரு பக்கம் அபலை ஜெயப்ரதா திடுக் திடுக் மனத்துடன். எதிரே அந்த அரசியல்வாதி. ஜெயப்ரதாவின் உணர்ச்சிகளையெல்லாம், அதே பாவத்துடன் அந்த அரசியல்வாதி சொல்லிவிட்டு, தொப்பி, கோட் என்று ஒவ்வொன்றாக அகற்றும் காட்சி இருக்கிறதே, வசனம், நடிப்பு என்று எல்லா

இராசராச மகதை நாடாழ்வார். இதுவரை நாடு காவல் அதிகாரியாய் விளங்கிய இவர், நிலம் அளத்தல், வரி வசூலித்தல் போன்றவற்றைக் கவனிக்க வேண்டும். இவர் அரண்மனைக்கு வருகை தந்து இங்கிருந்தே இவற்றைக் கவனிக்கலாம்.

குன்றத்தூரில் இருக்கும் தம்பி பாலறாவாயன் கோயில்கள், கலைகள், ஏழை மக்களின் துயரங்கள், தொழில்கள் ஆகியவற்றை அரண்மனைக்கு வந்து கவனிக்க வேண்டும்.

பதவி வேண்டாம் என்று விலகிச் சென்ற ஏழிசை மோகன் காடவராயருக்கு மீண்டும் அழைப்புத்தரப்படுகிறது. அவர்தாம் சோழப் பேரரசின் மாதண்ட நாயகர் — மகாசேனாதிபதி.

ஏனைய நிதி, நீதி போன்றவற்றை ஒழுங்குபட நிர்வகிக்கும் அனைத்துப் பொறுப்புக்களையும் தாமே வைத்துக் கொண்டார் முதலமைச்சரான சேக்கிழார்.

அடுத்து தில்லையில் நடக்கும் பேரம்பலப் பொன் வேயும் திருப்பணி எவ்வளவு தூர



விதத்திலும் அமர்க்களம்.

கல்லறையில் நின்று கொண்டு அப்பா அமிதாப் நதி போலச் சலசலத்து ஆங்கிலத்தில் பேச, மகன் அமிதாப் காட்டாறு போலத் தடார், படார் என்று ஆங்கிலத்தில் வெடிக்க — க்ளாப், க்ளாப், க்ளாப் என்று எத்தனை கைதட்டல்கள் தியேட்டரில்!

மகன் அம்மாவின் கல்லறையைப் பற்றி அறிந்து கொண்டதும், அந்தக் கல்லறைக்குப் போய் அதில் படிந்திருக்கும் தூசியைத் துடைக்க, அம்மா ஜெயப்ரதாவின் கண்ணீரைத் துடைப்பது போல அதில் அவருக்குக் கிடைக்கும் திருப்தியை விஷுவலாகக் காட்டியிருக்கும் இடம் — மெச்சிக் கொள்ள வார்த்தைகள் இல்லை.

ஹிந்திப் படங்களுக்கே உரித்தான நீளமான பாடல்கள். ஆனாலும் போரடிக்கவில்லை.

அப்பா அமிதாபும், மகன் அமிதாபும் சந்தித்துக் கொள்ளும் அத்தனை காட்சிகளிலும் காமிராவும், எடிட்டிங்கும் செமர்த்தியாய்ப் போட்டி போட்டிருக்கின்றன.

அந்த க்ளைமாக்ஸைப் பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். பாதாளச் சாக்கடையில் இருந்து மெல்ல இரு கண்கள் எட்டிப் பார்க்க, அரசியல்வாதியின் ஜீப் சக்கரம் அந்தச் சாக்கடை வட்டத்து மேலேயே வந்து நின்றுவிட, உடனே அமிதாப் பரபரப்பாக வேறு இடம் நோக்கி ஓட, கடைசி கடைசியில் மாலையும் கழுத்துமாக இருக்கும் அப்பா அமிதாப் சடாரென்று எழுந்து சுட்டுவிட்டு, மண் மூடிய கன்னத்துடன் கூடிய தலையை மறுபடியும் ஒரு வெற்றிப் புன்னகையுடன் சரியவிடும் காட்சி இன்னும் கண்களில்.

ஹிந்தியில் டைரக்டராக அறிமுகமாகும் பாக்யராஜுக்கு இந்தப் படம் ஓர் அருமையான துருப்புச் சீட்டு.

— ஜெயமன்மதன்.

மிருக்கிறது என்பது குறித்து விசாரித்து அறிந்து கொள்ளத் தில்லைக்குப் புறப்பட்டார்.

ஆறு திங்கள் காலங்களில் சோழப் பேரரசைச் சொப்பனபுரியாக்கிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் சேக்கிழார்.

பல இடங்களில் தேர்தல்கள் நடைபெறாமல் இருந்தன; சட்டதிட்டத்துக்கு உட்படாமல் இருந்த பஞ்சாயத்து மகாசபைகளை இயங்கச் செய்தார். அதன் அங்கத்தினர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு ஒரு சுற்றுப்பயணத்தையே மேற்கொண்டார்.

கூடுமான வரை, ஜோதி, முதலமைச்சருடனேயே பயணமாகிக் கொண்டிருந்தாள். இதில் மிகப் பெரும் வியப்பு என்னவென்றால் இந்த ஆறு மாத காலமாக கபாலீச்சுரனைக் காணவில்லை. சோழ மாமன்னர் ஜோதியைக் காதலிக்கிற செய்தி குறித்து கண்டு கொள்ளவுமில்லை. அதற்கு இது நேரமல்ல. ஆனால் காதலன் கபாலீச்சுரன்? எங்கு சென்றான்? எப்படி மறைந்தான் என்ற பிரச்னையே, இப்போது தலைநகர் வந்த பிறகுதான் ஜோதி எழுப்ப, அது பீதியாய், அரசுக்குரிய சேதியாய்ப் பரபரத்தது.

ஆரம்பத்தில் ஓரிரு முறை உடன் வந்து தலைகாட்டிய கபாலீச்சுரன், இப்போது அடியோடு தலைமறைந்து போனதன் காரணம்? சோழமாமன்னர் காதல் அவனுக்கும் தெரிந்திருக்குமோ?

பழையாறை ஏரி உடைப்புக்குக்கான மூல காரணத்தைக் கண்டு பிடித்ததால், பதவியிலிருந்து விலகிக் கொண்ட அல்லது விலக்கப்பட்ட விக்கிரம சோழ சம்புவராயன் ஏதேனும் சூழ்ச்சி செய்து இருக்கலாமா?

இந்த நேரம் பார்த்துத்தான் பழையாறையிலிருந்து பட்டமச்சுர பவானி, அரண்மனைக்கு வந்திருப்பதாகச் செய்தி சொன்னார்கள். ஏதோ பரபரக்கும் செய்தி என்றும் சொன்னார்கள்.

(தொடரும்)



பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள். சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் தான் புரியும்.

"என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்!!..

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து. உடலளவில் மட்டு மின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப் படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் கால கட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்—பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

இத்தனை வருடங்களாக, சானிடரி பாது காப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கட—மான வேலைதான்!

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்—காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு... போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு, என் மகள் வளரும் சூழ்நிலை வேறு. இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடிதுடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருககிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி. நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?



கிடைக்கிறது. 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்.

தவிரவும் கிடைக்கிறது. கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ் 10 உள்ள பேக்கில்

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்—பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு—மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson


OBM/6746/R/TAM

இந்துவுக்கு—

காலை ஆறு மணி ஷிப்டுக்கு சிவஷங்கர் கிளம்பிப் போய்விட்டதால் சுதாவிற்கு நிறையவே நேரம் இருந்தது—சமையல் செய்யவும் இந்துவை ஸ்கூலிற்கு அனுப்பவும்.

இன்றைக்குப்பார்த்து இந்துமிகவும் அடம் பிடித்துவிட்டாள் ஸ்கூல் கிளம்ப.

அப்பா இருக்கின்ற பொழுதாவது சாயங் காலம் சாக்லேட் வாங்கித் தருகிறேன்.



ஒழுங்காகப் பல் தேய், குளி, சாப்பிடு என்று ஐஸ் வைத்துக் காரியத்தை முடிக்க லாம்!

சுதாவால் கோபப்படவும் மிரட்டவும் தான் முடிந்தது.

எவ்வளவுதான் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாலும் இந்துவின் முரண்டு சுதாவை கோபத்தின் எல்லைக்குத் தள்ளும்.

சிவாவிற்கு அந்தப்பிரச்னை இல்லை. அசாத்திய பொறுமை. பணம் காசு பற்றிக் கவலைப் படுவதும் கிடையாது.

இந்து நினைத்த நேரத்தில் கேட்ட பொருள் கைக்கு வந்தது.

சிவாவிற்கு சில நாட்களில் இரண்டு ஷிப்டுகள் சேர்ந்து பார்க்க நேரிடுவதால் அவனுக்கு இந்துவைக் கொஞ்சக்கூட நேரம் கிடைக்காது.

அதனால் இந்துவும் அப்பாவைப் பார்க்கின்ற பொழுதெல்லாம் பாசத்துடன் ஒட்டிக்கொள்ளும். சிவா சுதாவிடம் சொல்லுவான்:

''இது நேச்சுரல்தான்! பெண் குழந்தைகள் அப்பாவை 'ஹீரோ'வாக நினைத்துக் கொள்ளும். பையன்களுக்கு அம்மாவிடம் ஒட்டுதல் அதிகமாக இருக்கும்...''

''சரிம்மா... ஏலே ராசு! என்ன அங்க பராக்குப் பாக்கே... இங்கே வா... முக்குல ஆட்டோ நின்னா செட்டியார் கடைக்குன்னு சொல்லி உடனே கூட்டிட்டு வா. அம்மா கூட ஸ்கூல் வரைக்கும் வெரசலா போவ னும்...'' என்றார்.

வீட்டை நெருங்கும்பொழுது கால்கள் நடுங்கின. ''கடவுளே என் குழந்தைக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது! காமாட்சி என் குழந்தையைக் காப்பாத்து! ஆறு வாரம் விரதம் இருந்து வர்றேன்...

மனம் எல்லா தெய்வங்களையும் மன்றாடி வேண்டிக் கொண்டது.

''மம்மி! புது ஷூ வாங்கிக் குடு மம்மி! என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் புது ஷூவோட வந்திருக்காங்க... மம்மி என்னோட பர்த்டேக்கு ஒரு செயின் வாங்கணும் மம்மி...

மம்மி... மம்மி, எனக்கு புது ட்ரெஸ் வேணும் மம்மி...''

இந்துவிற்கு ஆசைகள் அதிகம்! என்னென்ன கேட்க வேண்டும் என்று நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாள்!

என்ன ஆகியிருக்கும்?

எதிர்க்கடைப் பையன் போன் வந்திருப்பதாகச் சொன்னபோது கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது.

இந்த நேரத்தில்.... யார்....?

''ஹலோ... நான் ஜெயராமன் பேசறேங்க. உங்க ஹஸ்பண்ட் ஆபீஸ்ல வேலை பார்க்கறேன். உங்க டாட்டரோட ஸ்கூல் பஸ் ஆக்ஸிடெண்ட் ஆயிடுத்தாம்... உடனே போய்...'' அடுத்து அவர் சொன்ன வார்த்தைகளெல்லாம் அவள் காதில் விழவில்லை.

காலிற்குக் கீழே பூமி நழுவியது.

ஒரு அதிர்ச்சி அலை அவளை அசைத்தது. ரிசீவரை வைத்துவிட்டு பக்கத்து ஸ்டூலில் உட்கார்ந்தாள்.

அவளை அந்த நிலையில் பார்த்ததும் கடைக்காரச் செட்டியார் அதிர்ந்து போனார்.

''என்னாச்சம்மா... என்ன செய்தி... எங்கிட்ட சொல்லுங்கம்மா... ஏன் ஒரு மாதிரி ஆயிட்டீங்க...'' என்றார்.

நிமிஷத்தில் தன் நிலைக்கு வந்தாள்.

''நம்ம பாப்பா போன ஸ்கூல் பஸ் ஆக்ஸிடெண்ட்ல மாட்டிடுச்சாம்...'' அதற்குமேல் வார்த்தைகள் வரவில்லை.

''ஐயையோ... இப்போ என்ன செய்யப் போறீங்கம்மா. கடைப் பையனை வேணா கூட வரச்சொல்லட்டுமா? ஆட்டோல போறீங்களா...?''

அதுதான் சரியென்று பட்டது.

''ஒரு நிமிஷம்... நான் வீட்டைப் பூட்டிவிட்டு வந்துடறேன்...'' என்றாள்.

''மம்மி! எங்க ஸ்கூல் பஸ் டிரைவர் வயசானவர்தான். ஆனால் எவ்வளவு வேகமாகப் போவார் தெரியுமா? முத சீட்ல உட்கார்ந்து நாங்க அவரை ஒவ்வொரு பஸ்ஸையும் ஓவர்டேக் பண்ணச் சொல்லுவோம்...'' என்று இந்து சொன்னது நினைவில் வந்தது! அப்பொழுதெல்லாம் அது இப்படி ஒரு விபரீதத்தை ஏற்படுத்தும் என்பது நினைவிற்கு வரவில்லை.

வீட்டின் உள்ளே எல்லாம் போட்டது போட்டபடி இருந்தது.

ஒவ்வொரு ஜன்னலாக சாத்திவிட்டு வந்தாள்.


புடைவை மாற்றிக் கொள்ளவோ, தலையை ஒதுக்கிக் கொண்டு பொட்டு வைத்துக் கொள்ளவோ தோன்றவில்லை.

ஒரு பயம் சுதாவை விரட்டிக் கொண்டிருந்தது. நடுரோட்டில் நிற்கும் பஸ்ஸில் ஒரு லாரி மோதி நிற்க உள்ளே ரத்த வெள்ளத்தில் குழந்தைகள்.

சிவா பக்கத்து நர்சரியில் சேர்க்கச் சொன்னபோது அங்கெல்லாம் எஜுகேஷன் காணாது என்று இவள்தான் தள்ளி இருக்கிற கிறிஸ்துவப் பள்ளியில் அலைந்து திரிந்து அட்மிஷன் வாங்கினாள்.

வீட்டைப் பூட்டிப் பூட்டை இழுத்துப் பார்த்த போது எந்தவித ஆபத்துமில்லாமல் வீடு திரும்ப வேண்டுமே என்று கவலை

நா. நாகராஜன்



கண்ணீர்க் கோடுகள்

பணக்கார நண்பனே,
நீ போட்டிருப்பது போன்ற
கோடு போட்ட சட்டைக்கும்
நீ கொளுத்துவது போன்ற
வெடி மத்தாப்புக்கும்
என் வீட்டில்
நான் விண்ணப்பித்தேன்

சட்டையில்லாத
என் முதுகில்
வெறுங்கையால்
வெடித்தார்
அப்பா.

அழுகையை
அடக்கிக் கொண்டு
அம்மாவைப் பார்த்தபோது
அவளின் கன்னங்களில்
கண்ணீர்க் கோடுகள்

— ப. விஜயபாலன்

யாக இருந்தது.

வாசலில் ஆட்டோ தயாராக இருந்தது.

ஒரு பன்னிரண்டு வயது, ஒல்லிய கட்டிய சின்னப் பையனும் கூட வரத் தயாராயிருந்தான்.

''போகலாமாம்மா...''

ஆட்டோ மிகவும் மெதுவாகப் போகிற மாதிரி இருந்தது.

வழியில் எல்லாம் ஸ்கூல் பஸ் தென்படுகிறதா என்று பார்த்துக் கொண்டே வந்தாள்.

இந்துவிற்கு எங்கு போனாலும் ஆட்டோவில்தான் போக வேண்டும்.

சிவாவும் உடனே சம்மதித்து விடுவான்!

சுதாதான் கோபப்படுவாள்.

''ஈசியா பஸ் கிடைச்சுடும். கொஞ்ச நேரம் நின்னு கொறைஞ்சா போயிடுவோம்...?''

''போம்மா... ஆட்டோதான் ஜாலி...''

கண்ணீர் வந்தது!

''இந்து என்ன ஆச்சு உனக்கு...?''

தன் மேலேயே கோபம் வந்தது. இப்படி எடுத்ததற்கெல்லாம் அவள்மேல் எரிந்து விழுந்திருக்க வேண்டாம்!

பெண் குழந்தைக்கு இப்படிப் பிடிவாதம் கூடாது என்று என்னவெல்லாமோ நினைத்து அந்தக் குழந்தையின் மனத்தைப் புரிந்து கொள்ளாமல் போய்விட்டேனே!

கடைப் பையனுக்கு இந்துவின் ஸ்கூல் தெரிந்திருக்கிறது.

கடைக்கு வந்தால் அவனிடம் கால் மணி நேரம் அரட்டையடித்துவிட்டு, செட்டியார் மடியில் உட்கார்ந்து, ஃபோனைச் சுழற்றி விட்டு, கல்கண்டோ, பிஸ்கட்டோ, வாங்கி வாயில் ஒதுக்கிக் கொண்டுதான் வருவாள்.

அந்தப் பாசமும் பழக்கமும்தான் அவரை இப்படி இயக்கி இருக்கிறது.

'கடவுளே... எங்கள் பிரார்த்தனை வீண் போய்விடக் கூடாது...'

''டிரைவர், அதோ ஸ்கூல் பஸ் நிக்குது. வண்டியை ஸ்லோ பண்ணி பக்கத்துல நிறுத்துங்க. அம்மா... நாம வந்துட்டோம்...''

நெஞ்சு படபடத்தது.

பஸ்ஸின் பின்புறம் தெரிந்தது.

உள்ளே குழந்தைகள் யாரும் இல்லே.

கூட்டம் சூழ்ந்திருந்தது.

ஆட்டோ நின்றதும் இறங்கி அவசர அவசரமாகக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு விரைந்தாள்.

ஸ்கூல் பஸ்ஸுடன் ஒரு வாடகை டாக்சி மோதியிருந்தது.

பஸ்ஸின் கண்ணாடி சிதறியிருந்தது.

டாக்சியின் முன்பக்கம் சப்பையாகியிருந்தது.

''பஸ்ஸில பூராவும் குழந்தைகள். நல்லவேளை குழந்தைகளுக்கு அதிக காயம் இல்லே. டாக்சிக்காரன்தான் தாறுமாறா வந்திருக்கான். முன் சீட்ல இருந்த ரெண்டு பேருக்கும் நல்ல காயம்...''

மூச்சு வந்தது.

குழந்தைகளை பக்கத்து பில்டிங்கிற்கு கூட்டிப் போயிருப்பதாகவும், பெற்றோர்களுக்கு இன்ஃபார்ம் பண்ணி அவர்களை வரவழைக்கிறவரை அந்த அதிர்ச்சியிலிருந்து குழந்தைகள் மீள்வதற்காக ஆக்ஸிடெண்ட் நடந்த இடத்தை விட்டுக் கூட்டிச் சென்று விட்டதாகவும் சொன்னார்கள்.

சுதாவின் முகத்தில் தெளிவு வந்தது. நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

சுதாவைப் போலவே மேலும் மூன்று நான்கு அம்மாமார்கள் அலறிப் புடைத்துக் கொண்டு வந்திருந்தனர்.

''மம்மி எனக்கு இன்னிக்கு முன்சீட் கிடைக்கலே. நீதான் லேட் பண்ணிட்டியே. அந்த ரேகா குரங்கு முதல் சீட்டைப் பிடிச்சுண்டு விடமாட்டேன்னது...''

''இந்து, அப்படில்லாம் பேசக் கூடாது.''

''போம்மா... அவளைப் பத்தி உனக்குத் தெரியாது.''

''இந்து... இன்னிக்கு நீ முத சீட்லே இருந்திருந்தேன்னு வைச்சுக்கோ... உனக்கும் லேசாக் காயம் பட்டிருக்கும் இல்லியா கண்ணம்மா...?'' என்றாள் சுதா இந்துவின் தலையைத் தடவியபடி.

''க்கும்... நான் மட்டும் முன் சீட்ல இருந்திருந்தேன்னு இந்த மாதிரி ஆக்ஸிடெண்ட் ஆகவே விட்டிருக்க மாட்டேன். டிரைவர் தாத்தாகிட்டே டாக்ஸி வர்றதைச் சொல்லி பிரேக் போட வைச்சிருப்பேன்...'' என்று பெருமையாகச் சொன்னபோது,

அவளின் புத்திசாலித்தனத்தையும், குழந்தைத்தனத்தையும் ஒருசேர ரசித்து, சுதா இந்துவைக் கட்டிப்பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டாள்!

ஜோதிடம் ஜாதகம்





நானும் ஜோதிடன் ஆனேன்!

என் மூத்த சகோதரனுக்குத் திருமணம் செய்விப்பதற்காக மும்முரமாக ஜாதகப் பரிவர்த்தனை நடந்து கொண்டிருந்தபோது ஜோசியர் அடித்துச் சொல்லிவிட்டார்: ''இப்போது மூத்தவனுக்குத் திருமணம் நடக்காது. இளையவனுக்குத் திருமணமாகி, முதல் ஆண் குழந்தை பிறந்து, அதற்கு மூன்று வயது பூர்த்தியாகிய பிறகே மூத்தவனுக்குத் திருமணம் ஆகும்.'' இது அப்படியே பலித்தும் விட்டது. என் மகனுக்கு மூன்று வயது ஆன பிறகு தான் என் அண்ணாவின் கல்யாணம் நடந்தது. அதிலிருந்து எனக்கு ஜாதகத்தில் அளவில்லாத நம்பிக்கை வந்துவிட்டது. மெல்ல மெல்ல ஜோதிடம், கைரேகை இவைகளை முறையாகப் பயின்று இப்போது ஒரு சிறந்த ஜோதிடன் என்று பெயர் பெற்றுவிட்டேன்.

— எஸ்.எம். கருணாமூர்த்தி, கோம்பை.

ஜோதிடம்சொல்வதைநிறுத்தினேன்!

எனக்கு ஓரளவு கைரேகை பார்ப்பதில் தேர்ச்சி உண்டு என்பதால் திருமணம் போன்ற வைபவங்களில் என்னைச் சுற்றி ஒரு சிறு கும்பல் இருந்து கொண்டே இருக்கும். ஒருமுறை என் அத்தானின் கையைப் பார்த்துவிட்டு அவருக்கு ஆயுள் மிகவும் நீளம் என்று கணித்துச் சொன்னேன். ஆனால் அவர் மிகக் குறுகிய காலத்திலேயே காலமாகி விட்டார். அன்று மனமுடைந்து போய் ஜோதிடம் சொல்வதை நிறுத்தினேன். நிலைமை தெரியாத சிலர் நான் 'பிகு' செய்வதாகக் கூறும்போது வருத்தப்பட்டுக் கொள்வேன்.

— கே. ஸ்ரீதர், திருப்பத்தூர்.

வாசகர் பங்கு

கிடைப்பானா என் மகன்?

வாய் பேசா — காது கேளா — ஊனமுற்ற சிறுவனான என் மகன் மதுரை அன்பகத்திலிருந்து காணாமல் போனான். அவனைத் தேடிப் பிடிக்க ஒரு ஜோதிடரின் உதவியை நாடினேன். அவர் என் மகன் பெங்களூர் மல்லேஸ்வரத்தில் கிடைப்பான் என்று சொன்னார். ரூ 200 செலவு செய்து அவனைத்



தேடிப்போனேன். அவன் கிடைக்கவில்லை. இப்போது பையன் சென்னையில் தேனாம்பேட்டை அல்லது அடையாறு பகுதியில் இருக்கக் கூடும் என்கிறார் ஜோதிடர். மீண்டும் ரூபாய் ஐநூறு செலவு செய்தால் தான் போய் வர முடியும். ஆனால் மகன் கிடைப்பானா....?

— எம். சுப்பிரமணியம், வடுகப்பட்டி.

'நாடி' என்றொரு வகை

நாடி ஜோதிடத்தில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. நமது கட்டை விரலில் 21,600 ரேகைகள் உள்ளனவாம். ஆணானால் வலது கைக் கட்டை விரலையும், பெண் ஆனால் இடது கைக் கட்டை விரலையும் ஆராய்ந்து பலன் சொல்கிறார்கள். இந்த ஜோசியம் வசிஷ்ட முனிவர் வைத்தீஸ்வரன் கோயிலில் எழுதி வைத்த ஓலைச் சுவடிகளின் அடிப்படையில் சொல்லப்பட்டு வருகிறது. எனது ரேகையைப் பார்த்துவிட்டு, ஜோதிடம் சொன்னவர்,

'மண்ணுலகில் அயமாத்வாகன ஓட்ட
மக்கள் சாலையில் நிதி வசூலித்து
இறைசாலை தொண்டே'', என்ற பாடலைக் கூறினார். இது நான் பார்க்கும் கண்டக்டர் வேலையை அப்படியே வர்ணித்ததால் எனக்கு இந்த ஜோதிட முறையில் நம்பிக்கை உண்டு.

— தி.க. கோபுராஜ், நெய்வேலி — 1.

எப்படி நம்புவது?

நான் பள்ளிச் சிறுமியாக இருந்த காலத்தில் எனக்குப் படிப்பே வராது என்றும், பதினாலாவது வயதில் திருமணம் ஆகிவிடும் என்றும் என் ஜாதகத்தைப் பார்த்த ஜோதிடர் சொல்லிவிட்டார். ஆனால் இன்று அவர் சொல்லி இரண்டு மாமாங்கம் ஆகிவிட்டது. நான் இன்னமும் 'குமாரி' தான்; மேலும் ஒரு கல்லூரியின் கணிதப் பேராசிரியை வேறு! ஜோதிடத்தை எப்படி நம்புவது? சொல்லுங்கள்!

— என். சாந்தா, கோவை — 2.

துணிவே துணை!

'செவ்வாய் தோஷமுள்ளவள். அவளைத் திருமணம் செய்து கொண்டால் ஆறே மாதத்தில் தம்பதிகளுள் ஒருவர் இறந்துவிடுவர்' என்று சொல்லியதை லட்சியம் செய்யாமல் என் நண்பன் ஒரு பெண்ணைத் துணிந்து மணந்து கொண்டான். விளைவு — நல்ல வேலை உடனே கிடைத்துவிட்டது! பத்து ஆண்டுகளாக ஆனந்தமான வாழ்க்கை! மூன்று குழந்தைகளுடன் இன்றும் சந்தோஷமாக இருக்கிறார்கள்!'

— ஜி. ராஜா, விருதுநகர்.

நகைப்பூட்டிய நிகழ்ச்சி

ஒருமுறை என் அண்ணனும் நானும் எங்களது ஜாதகங்களை ஒரு ஜோதிடரிடம் காட்டிப் பலன் கேட்டோம். இரண்டு ஜாதகங்களையும் பார்த்த அந்த ஜோதிடர் எங்கள் காதல் வெற்றியடைந்து நாங்கள் விரைவில் திருமணம் செய்து கொள்வோம் என்று சொன்னபோது எங்களுக்குச் சிரிப்புத் தாளவில்லை.

— எஸ். ராஜலக்ஷ்மி, சென்னை — 33.

வேதனையுடன் நம்பினேன்

ஜோசியர் ஒருவர் ஒரு வீட்டில் ஜோசியம் சொல்லிக்கொண்டிருந்தார். 'இந்தமுப்பதாவது வயதில் எனக்கு ஒரு பெரிய கண்டம் இருக்கிறது. எந்த நிமிடமும் எதுவும் எனக்கு நேரலாம்' என்றார். அவர் சொல்லி வாய் மூடுவதற்குள் பட்டாசு தயாரித்து வந்த அந்த வீட்டில் எதிர்பாராமல் வாணங்கள் வெடித்துத் தீ விபத்து ஏற்பட்டது. அந்த ஜோசியர் அதில் சிக்கி அங்கேயே இறந்து போனார். எங்கள் ஊரில் நடந்த இந்தச் சம்பவம் ஜோசியத்தில் அவ்வளவாக நம்பிக்கையில்லாத என்னை வேதனையுடன் நம்ப வைத்துவிட்டது.

— வி. உஷா, சிதம்பரம்.

ஜோதிடனுக்கு நன்றி

நான் ஏழாவது படித்துக் கொண்டிருந்த போது ஒரு ஜோதிடர் என் அம்மாவிடம் வந்து என் படிப்பிற்காகப் பணம் செலவழிப்பது வீண் என்றும் நான் படிப்பை நிறுத்துவதுதான் நல்லது என்றும் சொன்னார். அம்மா அன்றைக்குத் திட்டியதைப் பொருட்படுத்தாமல், ஜோதிடர் சொன்னதால் ரோசம் ஏற்பட்டுப் போய் நான் முன்னிலும் கவனமாகப் படிக்கலானேன். பள்ளியிறுதி தேறிய பிறகு, குடும்பச் சூழ்நிலை அனுமதிக்காததால் மேல் படிப்பைத் தொடர முடியவில்லை. அதனால் ஒரு வேலையைத் தேடிக் கொண்டேன். பிறகு தொடர்ந்து படித்து இப்போது பி.ஏ. பட்டதாரியாக உள்ளேன்.

— கு. கணேசன், சென்னை — 15.



ஆசிரியர்: இந்த வாரத்துக்குப் பரபரப்பா என்ன விஷயம் கொண்டாந்திருக்கீங்க?

நிருபர்: +2 விலே தமிழ்நாட்டிலேயே குறைஞ்ச மார்க் எடுத்த மாணவனைப் பேட்டி கண்டு எழுதியிருக்கேன் ஸார்!

— ஜி.எஸ். பாண்டியன்

அதிர்ச்சியுடன் நம்பினேன்

எனது சித்தி பிள்ளை மேல்படிப்புக்காக அமெரிக்கா செல்லவிருந்தான். கூடுதலாக இரண்டாயிரம் ரூபாய் செலவானாலும் அவன் ஆகஸ்டு இரண்டாம் தேதி, காலை விமானத்தில்தான் போக வேண்டும் என்றும் ஆகஸ்ட் ஒன்று இரவு விமானத்தில் போகக் கூடாது என்றும் சொல்லிவிட்டார் ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ள சித்தப்பா. நாங்கள் சித்தி மகனை வழியனுப்ப விமான நிலையம் சென்றபோது முதல் நாள் இரவு விமான நிலையத்தில் குண்டு வெடித்து உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் ஏற்பட்டிருந்ததை அறிந்து அதிர்ந்தோம். இச்சம்பவம் எனக்கு ஜோதிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டது.

— எஸ். ராஜம், சென்னை — 23.

இவனா அமெரிக்கா போவான்...?

என் சகோதரனுக்கு படிப்பறிவு கிடையாது. ஆனால் சமையல் கலையில் கைதேர்ந்தவன். அவன் வெளிநாடு செல்லும் வாய்ப்புள்ளது என்று ஜோதிடர் கூறியதும் சிறிதும் நம்பவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் பணிபுரியும் நண்பரின் வீட்டில் சமையல் வேலை செய்ய அவனை அழைத்துக் கொண்டார்கள். இப்போது அவன் அனுப்பும் பணத்தில்தான் எங்கள் குடும்பம் நடந்து கொண்டிருக்கிறது.

— கே. அய்யாசாமி, வேலூர்.

ஜாதகத்தை உதறினேன்

பிறந்த எட்டாவது வருடத்தில் நான் இறந்து விடுவேன் என்று கூறிய ஜோதிடர் என் ஜாதகத்தைக் கணிக்க மறுத்துவிட்டாராம்! எனக்கு இப்போது வயது முப்பத்திமூன்று! இதனால் எனக்கு ஜோதிடம் ஜாதகம் என்றால் சொல்லொணா அவநம்பிக்கை. எனது எட்டாவது வயது முடிந்த பிறகு எழுதிய ஜாதகத்தை எடுத்துக் கொண்டு என் அப்பா எனக்கு வரன் தேடியபோது எனக்கு ஏகமாய்க் கோபம் வந்தது. ஜாதகத்தை உதறிவிட்டுக் காதலித்தவளைத் திருமணம் செய்து கொண்டு சந்தோஷமாக இருக்கிறேன்.

— ராஜு, பம்பாய் — 86.

'ஓஹோ' என்றொரு ஜாதகம்!

ஏழைக் குடும்பம்; நான்கு பெண்களுக்கு இடையே பிறந்த ஒரு செல்லப் பிள்ளை. அவன் ஜாதகம் 'ஓஹோ' என்று ஜோதிடர் சொல்லிவிட்டார். முப்பத்தோராவது வயதில் அவன் பெரிய அரசியல்வாதியாகி பெரும் புகழும் அடைவான் என்றார். அதை நம்பி. அவன் பெற்றோர் அவனுக்கு ஏகமாய்ச் சலுகை தர, நன்றாகப் படித்துக் கொண்டிருந்தவன் படிப்பில் நாட்டம் இழந்து, பி. காம். பரீட்சையில் ஃபெயில் ஆனான். முப்பத்தோராவது வயதில் தேர்தலில் நின்று தோற்றான். பொருள் நஷ்டத்தோடு வன்முறையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு சிறைத் தண்டனை வேறு அனுபவித்தான். கடைசியில் மனமுடைந்து போய் தற்கொலை செய்து கொண்டுவிட்டான்!

— நீரஜா மூர்த்தி, பெங்களூர்.


கைராசி கைவிட்டபோது....

அருமையாக ஜாதகம் பார்ப்பார்; கைராசிக்காரர், எங்கள் ஊரில் பிரபலமானவர் — தன் ஒரே மகளுக்குப் பிரமாதமாக வரன் பார்த்தார். மூன்று நான்கு வருடங்கள் காத்திருந்து, பல ஜாதகங்களை அலசி, ஆராய்ந்து நூறு சதவிகிதம் பொருத்தமுள்ள ஜாதகத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த வரனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து வைத்தார். ஆனால் அந்தப் பெண் ஒரே மாதத்தில் கணவனை இழந்து பிறந்த வீடு திரும்பிவிட்டாள். அன்றிலிருந்து எனக்கு இந்த ஜோதிடம், ஜாதகம்.... எதிலும் நம்பிக்கையே இல்லை.

— ஆர். சியாமளா, அறந்தாங்கி.

ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி.ஐ.பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

கு. கணேசன்,
80, பெருமாள் கோயில் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை — 600 015.





நெருப்பாக நீ

மாதையனின் வண்டி, ஏதோ பூ பரப்பிய பாதையில் போவது போல, அலுங்காமல் குலுங்காமல் தோப்பு பங்களாவை நோக்கிப் பறக்கிறது......

உள்ளே ஜமீன்தாரும், புவனேசுவரி அம்மாளும் இருப்பது காளைகளின் அறிவுக்குக் கூட எட்டியது போல... அவைகளின் நடையில் கூட ஒரு பயம் கலந்த விரைவு!

மாதையனின் முதுகுப் பக்கம் நந்து. நந்துவின் எதிரே இன்பா... இன்பாவைப் பார்த்த வாறு முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் புவனு... கடைசியாக, வண்டியின் பளபளக்கும் எவர்ஸில்வர் பிடியை கம்பீரமாய்ப் பிடித்தபடி லோகநாதன்...

இவர்களுக்கு முன்னாலேயே ஒரு வண்டியில் சமையல்காரனும், வேலையாட்களும் போய் விட்டார்கள்...

இன்பா, மாதுவுடன் சேர்ந்து ஒரு குழந்தையைப் போல வண்டியை அலங்கரித்திருந் தாள். காளைகளின் கழுத்தில் ஏற்கெனவே கட்டியிருந்த வெண்கல மணிகள் போதா தென்று, இன்பா தொடுத்து மாட்டியிருந்த பூமாலைகள் வேறு...

வண்டியின் சக்கரங்களிலும், இரு பக்கச் சுவர்களிலும் கூட பூச்சரங்கள், வண்டியின் முன்னிரு பக்கங்களிலும் வண்ண பலூன்களைக் கட்டியிருந்தாள்...

லோகநாதனுக்கு வண்டியைப் பார்த்ததுமே சிரிப்புப் பொங்குகிறது.

''இது என்னம்மா இன்பா... பொண்ணு, மாப்பிள்ளைய ஏத்திட்டுப் போறாப்பல வண் டிக்கு இத்தனை ஜோடனை பண்ணியிருக்கே?''

''பின்னே? நீங்களும், நந்துவோட அம்மாவும் சேர்ந்து வெளியே கிளம்பியே பல வரு ஷங்களாறது... இத்தனை வருஷங்களுக்குப் பிறகு நீங்க ஜோடியா வெளிலே கிளம்பறதைக் கொண்டாட வேண்டாமா? அதான்...

இன்பா, கண்களை இடுக்கியபடி, குறும்பாகப் பதில் சொல்ல — மாதையன், அதை விடவும் ஒரு படி மேலே போய்ப் பதில் சொல்கிறான்:

''அதெல்லாம் இல்லீங்க, இம்பாம்மா, நம்ம சின்னய்யாவோட கல்யாண ஊர் கோலம் வர்றதுக்கு, இப்பவே வெள்ளோட்டம் பார்த்துக்கறாங்க...''

லோகநாதன் கடகடவெனச் சிரிக்கிறார். சந்தோஷ மிகுதியில் விழிக்கடையில் ஈரம் பனிச்சிடுகிறது.

''இவங்க கல்யாணம்னு, மாட்டு வண்டியிலயா ஊர்வலம் விடுவேன்...? காரை, அன்ன பட்சி மாதிரி சிங்காரிக்க — தஞ்சாவூர்ப் பூக்காரங்களுக்குச் சொல்லி அனுப்புவேன்டா...''

இன்பா, இதற்கு மேலும் அங்கே நிற்க முடியாத தர்ம சங்கடத்துடன், உட்பக்கம் ஓடி — புவனு கிளம்பி விட்டாளா என்று எட்டிப் பார்க்கிறாள்.

நந்துதான் தாயைக் கிளப்பிக் கூட்டி வந்தான்.

வண்டியில், எதிரும் புதிருமாய் அமர்ந்திருந்தாலும் புவனுவின் பார்வை, இன்பாவை யும் தாண்டி எதிலோ லயித்திருக்கிறது.

விலையுயர்ந்த பட்டுப் புடைவை... வெளியே புறப்படுவதற்கான விசேஷ அலங்காரம் தெரிகிறது...

முன்பே ஒரு முறை இன்பா, நந்துவிடம் கேட்டிருக்கிருள்.

''இப்படி படுக்கையிலேயே கிடக்கிறுங்களே, உங்க அம்மா... போரடிக்கலே?''

''உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். அம்மாவுக்கு இப்பவும் இருக்கிற ஒரேயொரு பொழுது போக்கு தன்னைக் கண்ணுடியில பார்த்துட்டு நேரம் போறது தெரியாம உட்கார்ந்திருக்கிறதுதான்.. அதே மாதிரி டிரஸ் பண்ணிக்க ஆரம்பிச்சாலும் லேசுல முடிக்க மாட்டா. சில சமயம் அர்த்த ராத்திரியில விளக்கைப் போட்டுட்டு, முகம் கழுவி, தலை வாரி அலங்காரம் செஞ்சுக்க ஆரம்பிப்பா பாரு... வேதனை...''

நாகரிகம் என்கிற பெயரில் எத்தனையெத்தனையோ மோஸ்தரில் நகைகளும், ரவிக்கைகளும், முக ஒப்பனைகளும் மாறிக்கொண்டேயிருக்கிற இந்நாளில் — புவன, இன்னமும் அறுபத்தேழாம் வருஷத்திய மாடலாகவே இருப்பதையும் இன்பா அடிக்கடி கவனித்திருக்கிருள்.

இவள் வரையில் உலகம் சுழல்வது அப்படியே நின்று விட்டதோ...

புவன தலையை எந்தப் புறமும் அசைக்காமல் பொம்மை மாதிரி அமர்ந்திருக்க, லோகநாதன்தான் வாய் ஓயாமல் பேசிக்கொண்டே வருகிருர்.

''இங்கேயிருந்து ஆரம்பிக்கிறது நம்ம நிலம்...''

''நம்ம நிலம்னு? உங்க அப்பா, தாத்தா காலத்துல சேர்த்து வச்சதா...?''

''ஆ... ஆங்... அதெல்லாம் வேற. இருவலத்துங்கிட்டே இருக்கு. இது நந்துவோட பெரியம்மாவைச் சேர்ந்தது...''

''அப்ப அவங்க நிலம்னு சொல்லுங்க...''

லோகநாதன் புன்சிரிப்புடன் மறுக்கிருர்.

''எப்ப அவ என்னைக் கட்டிக்கிட்டாளோ — அவளைச் சேர்ந்ததெல்லாம் என்னைச் சேர்ந்ததுதானே...''

''ஓ......''

இன்பா அவரை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தலையைத் திருப்பிக் கொள்கிருள்.

அது என்னமோ, அந்தக் கணத்தில், அந்தப் பெரிய மனிதரின் முதுகில் ஒரு கை கொடுத்து, ஓடும் வண்டியிலிருந்து உருட்டித் தள்ள வேண்டும் போல இருக்கிறது.

'பெண்டாட்டியை ஒழுங்காய் வைத்துக் கொள்ளத் துப்பில்லே... நிலமும் நீச்சும் மாத்திரம் நம்மோடதாமே...'

'அது சரி... நிஜமாவே, அந்த அம்மா — இவரோட இருக்க முடியாம ஓடிப் போயிருந்தா, கணவர்ங்கற உரிமையில எல்லாச் சொத்தும் இவரைச் சேர்ந்ததுதானே...'

'ஓடிப் போன மங்களாம்பா திரும்பி வர மாட்டாளா... அப்படி வந்தா, இவர் என்ன செய்வார்...?'

இன்பாவின் நெஞ்சுக்குள் அலையலையாய் எண்ணங்கள்.

லோகநாதன், இந்த மௌனச் சூழ்நிலையை விரும்பாதவராய் நந்துவைப் பார்த்துச் சொல்கிருர்.

''ஏண்டா,... காலேஜ்லே படிக்கப் போறதுக்கு முன்னுலே ஆயிரம் பாட்டுப் பாடுவியே... இப்ப ஏதாவது பாடேன்...''

நந்து, இன்பாவை ஓரக் கண்ணுல் பார்த்துச் சிரித்தபடி சொல்கிருன்:

''ஆமா... என் பாட்டை நீங்கதான் மெச்சிக்கணும். வாயைத் திறந்தா, கழுதைங்க ஆட்டோகிராஃப் வாங்க வந்துடும்னு ஏற்கெனவே என்னை ஒரு கழுதை கலாட்டா பண்ணியிருக்கு...''

லோகநாதன், மகன் யாரைச் சொல்கிருன் என்பதைப் புரிந்து கொண்டு, மீசையை நீவியபடி சொல்கிருர்:

''அப்ப, அந்தக் கழுதையையே பாடச் சொல்லேன்.''

இன்பா, லோகநாதனை நிமிர்ந்து பார்த்துவிட்டு, புன்னகை மாருமல் சொல்கிருள்.

''எதுக்கு...? வண்டி மாடு ரெண்டும் மிரண்டு ஓடவா... பேசாம, மாதையனைப்



பாடச் சொல்லுங்க... அருமையாப் பாடுவான்...''

''ஐயய்யே... என்னம்மா நீங்க... என்னை மாட்டி விடறீங்க...''

மாதையன் முதலில் அலுத்துக் கொண்டாலும் — அது நேரம் வரையில் மனத்தில் உளைந்து கொண்டிருந்த நினைவுகள் — பழைய பாட்டு ஒன்றின் மூலமாய் வெளிப்படாமலில்லை...

ஆயிரம்தான் பணக்காரர்களுக்கு ஞாபக மறதி அதிகம்தானென்றாலும் — இந்தப் பாட்டை, எத்தனை ஜென்மங்களெடுத்தாலும் ஜமீன்தாரால் மறந்துவிட முடியுமா என்ன...?

இதே பாதையில் பல வருஷங்களுக்கு முன் — ஜமீன்தாரையும் மங்களாம்பாளையும் அழைத்துச் சென்றிருக்கிறான்... புவனா இரண்டாம் தாரமாக வந்தபின், இருட்டிய பிறகு, ஜமீன்தாரும் புவனாவும் இந்த பங்களாவிற்கு வருவார்கள். அப்பொழுது பாட்டு இருக்காது. புவனாவின் புலம்பல்தான் இருக்கும்...



''என்னங்க... அக்காவோட வைர அட்டியல் மாதிரி எனக்கு ஒண்ணு வேணும்னு எத்தனை வருஷமாச் சொல்லிட்டிருக்கேன்...''

''அன்னிக்குச் செட்டியார் ஒரு செட் கொண்டு வந்தாரில்லே... அதுல ஒண்ணைப் பார்த்துப் பொறுக்கிக்க வேண்டியது தானே...''

''அக்காவோடதுல இருக்கற மாதிரி அத்தனை பூரிப்பு — இந்த வைரங்கள்லே இல்லே...''

''அது பழைய வைரம். இந்தக் காலத்துல இவ்வளவுதான் கிடைக்கும்...''

''அப்ப, அக்காவோடதைத்தான் கேட்டு வாங்கித் தாங்களேன்... உங்க வம்சத்துக்கு பிள்ளையப் பெத்துத் தந்திருக்கற எனக்கு இந்த உரிமை கூட இல்லேயா?''

''சும்மா தொண தொணக்காதே புவனா...''

சில சமயங்களில் லோகநாதன், புவனாவைத் தவிர்த்து, மங்களாம்பாளை மட்டும் இங்கே அழைத்து வருவதுண்டு... ஏதாவது காரியம் ஆக வேண்டுமானால்.

கடைசி கடைசியாய் — புவனா, மங்களாம்பாள் குழந்தைகள் அனைவரையும் அழைத்து வந்த நாள்...

மாதையனின் நினைவில் பசுமையாய்...

மங்களாம்பாளின் கையில் சோனியாய், சோகையாய், ஜமீன் மேஸ்திரியின் குழந்தை...

''இது எதுக்கு?''

அவர் முகத்தைச் சுளித்தார்.

''இருக்கட்டும் பாவம். நான் வெளியே கிளம்பறேன்னு தெரிஞ்சிட்டு என் புடைவைய இறுக்கமாப் பிடிச்சுக்கறது...''

''உன் தகுதிக்கு இது நல்லாயில்லே மங்களா...''

''குழந்தைங்க கிட்ட என்ன தகுதியும் தரமும் வேண்டிக் கிடக்கு?''

சில விஷயங்களில் மங்களாம்பாள் அதீதப் பிடிவாதம்தான்.

புவனா முகத்தைச் சுளித்தபடி ஒதுங்கி உட்கார்ந்ததும், மங்களா, இவளின் அலட்சியத்தைப் பொருட்படுத்தாமல், மார்போடு அக்குழந்தையை அணைத்து, நந்துவை ஒரு மடியிலும் செத்துப் போன புவனாவின் இரண்டாவது மகனைத் தோளிலும் சாய்த்துக் கொண்டு — அதே பாட்டைப் பாட... அவினாஷ், மாதையனின் கழுத்தை இரு கைகளாலும் இறுகக் கட்டிப் பிடித்தபடி சேர்ந்திசைத்ததும்.....

அந்த நேரத்தில் மங்களாம்பாளின் முகத்தில் நெருப்பாக ஜொலித்த தாபம்...

மறக்குமா என்ன?

''பாடேன் மாது... மைக் வேணுமா என்ன?''

இன்பா, கிண்டலாகக் கேட்கிறாள்.

''மைக் எதுக்கும்மா... வயசானாலும் குரல் தளரலே. என்ன பாட்டுப் பாடறதுன்னு யோசிக்கறேன்...''

''உனக்குப் பிடிச்சதைப் பாடேன்...''

— இது நந்து.

''எனக்கு இந்தப் பாதையில போறப்ப எல்லாம் ஒரேயொரு பாட்டுத்தான் நினைப்புக்கு வரும்...''

''பாடு... பாடு...''

லோகநாதன் உத்தரவிட — மாதையன், தன் எசமானனை ஓரக் கண்ணால் பார்த்தபடி ஆரம்பிக்கிறான்.

''ஓடையில கல் பொறுக்கி
ஒழுங்காக மச்சு கட்டி
மச்சிலே ரெண்டு கிளி — சந்தையா
வித்தாரம் பேசுதையா!

புளிய மரத்துக்கிளி
பூவெடுத்துத் தின்னுங்கிளி
என்னை அடுத்த கிளி — சந்தையா
ஏமாற்றிச் சென்றதையா...''

மாதையன் பாடிக் கொண்டிருக்கும் போதே லோகநாதனின் முகம் கறுக்கிறது...

இதைக் கவனியாத இன்பா — சட்டெனஏதோ ஒரு உந்துதலில் அடுத்த அடியைப் பாடுகிறாள்.

''ஆலமரத்துக் கிளி
அக்கரையில் மேயுங்கிளி
இக்கரைக்கு வந்ததுமேன் — சந்தையா
இங்கிதமாய்ப் போகச் சொல்லு
சந்தையா...''

அவ்வளவுதான்... மந்திரம் போட்டாற் போல — வண்டி நிற்கிறது...

லோகநாதன் இன்பாவையே குத்துப் பார்வையாய்ப் பார்க்கிறார். முகத்தில் விவரிக்க முடியாத உணர்ச்சிக் கலவை.

மாதையன் வியப்புடன் கேட்கிறான்...

''இந்தப் பாட்டு எப்படிம்மா உங்களுக்குப் பாடமாச்சு?''

நந்துவும் அதையே, சற்று குரலை உயர்த்திக் கேட்கிறான்.

''உனக்கு நாட்டுப் பாடல் எல்லாம் தெரியும்னு சொல்லவே இல்லேயே...''

இன்பா திகைக்கிறாள்... திணறுகிறாள். விரல்களை ஒன்றோடு ஒன்றாய்ச் சேர்த்துப் பிசைகிறாள்...

''எனக்கு நாட்டுப் பாடல் எதுவுமே தெரியாது... ஆனா... இது எப்பவோ கேட்ட மாதிரி ஒரு ஃபீலிங்...

புவனாவின் முகத்தில் கூட ஒரு வித பீதி...

இன்பா, தன்னால் விளைந்த கலக்கத்தைச் சரி செய்வதற்காக ஏதேதோ பேசிக் கொண்டே வருகிறாள்...

''சின்ன வயசில எங்க அம்மா பாடி, நான் கேட்டிருக்கலாம்...''

லோகநாதனுக்குள் மட்டும் ஒரு குரல் ஒலிக்கிறது...

இல்லே... இந்தப் பாட்டு மத்தவங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாம்... ஆனா, அந்தக் கடைசி ரெண்டு வரி... மங்களா சொந்தமா கற்பனை செஞ்சு பாடினதுன்னு எனக்கும், மாதுவுக்கும் — இதோ இந்த புவனாவுக்கும் தான் தெரியும்...

(தொடரும்)

மங்கையர் மலர்

ஜூலை 86



இது மனிதாபிமானப் பிரச்னை

முஸ்லீம் பெண்களுடன் பேட்டி

ஆஸ்துமா ஒரு விளக்கம்

இலவச இணைப்பு

மற்றும் ஏராளமான சிறப்பு அம்சங்கள்

அதிக பக்கங்கள்

பார்வைக் கோளாறு!

தமயந்தி

கொஞ்ச நாட்களாகவே பாஸ்கருக்கு அந்தச் சந்தேகம் லேசாகத் தோன்றி வளர ஆரம்பித்தது. அதுவும் இன்று காலையில் நடந்த நிகழ்ச்சி......!

காலை ஆறரை மணி இருக்கும். சூரியன் அந்த வீட்டுக்குள் பளீரென்று நுழைந்து கொண்டிருக்கும் தருணம். குனிந்து, எழுந்து, நீட்டி மடக்கி, மாடியில் தேகப் பயிற்சி செய்து கொண்டிருந்தான் பாஸ்கர். இடைவெளி இல்லாமல், தொடர்ந்தாற் போல் பயிற்சி எடுத்ததாலோ என்னவோ, வியர்வைத் துளிகள் பெருகித் தோளிலும் மார்பிலும் தெரிந்து, அந்த வாட்டசாட்டமான உடம்புக்குக் களை கூட்டியது.

திடீரென்று அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. சற்று அருகில் மூச்சுக் காற்று வருவதுபோல உணர்வு ஏற்பட்டது. அதிர்ந்தவனாகத் திரும்பி நோக்கினால் —

மாலினி! அதுவும் எப்படி? குளித்துவிட்டு, ஈரமான கூந்தல் நீளமாகத் தொங்க, புடைவையை அரையும் குறையுமாக மேலே போர்த்துக்கொண்டு, கண்களில் ஓர் ஏக்கம் தெரிய—

சட்டென்று பாஸ்கருக்கு ஞாபகம் வந்தது. ''மாலினி! எப்படி வந்தாய் ரெண்டு மாடி ஏறி? கண் கோளாறு சரியாகிப் போய் விட்டதா?''

ஒரு நிமிடம்தான். மாலினி பாஸ்கரை நேராக நோக்கிவிட்டுச் சரசரவென்று கீழே இறங்கிப் போனாள். பாஸ்கர் கூர்ந்து பார்த்துக் கொண்டேயிருந்தான். மாலினி படிகளில் வேகமாக, இடறாமல், தடுமாறாமல் சென்றாள்....


இது எப்படி சாத்தியம்?

மாலினி அந்த வீட்டில் நுழைந்த சம்பவம் பாஸ்கருக்கு நினைவிலிருந்தது. அவள், அண்ணி வசந்தாவுக்கு நெருங்கிய தோழி. யாரோ ஒரு நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணத்துக்கு வேலூர்வரை போகவேண்டியிருந்தது வசந்தாவுக்கு. அண்ணா குமார் கூடச் செல்ல முடியவில்லை. தனியாகப் போக வேண்டாமென்று எண்ணி, மாலினியையும் அழைத்துப் போனாள். திருமணம் முடிந்து, திரும்பி வரும்போதுதான் அது நிகழ்ந்தது.

ஜன்னல் ஓரமாக எதிரும் புதிருமாக மாலினியும் வசந்தாவும் உட்கார்ந்திருக்கிறார்கள். வேகமாகப் பஸ் விரைந்து கொண்டிருக்கிறது. சாலையில் எவனோ ஒரு விடலைப் பையன், கல்லை எடுத்து யார் மீதோ வீசி எறிய, அது தவறிப் போய் மாலினியின் கண்ணில் பாய்ந்தது. நல்லகாலம் கூலிங் கிளாஸ் அணிந்திருந்தாள். இருந்தும், கண்ணாடி உடைந்து, கண்ணுக்குள் கண்ணாடித் துகள்கள் போய்விட்டன.

தன்னால், தன்னுடைய உறவினர் கல்யாணத்துக்குத் துணையாக வந்ததால்தானே இப்படி ஆயிற்று என்கிற குற்ற உணர்வு வசந்தாவுக்கு உறுத்தியது; மேலும் மாலினிக்கு வசதி சற்று குறைவு என்பதால், தங்கள் வீட்டிலேயே இருத்திக் கொண்டு சிகிச்சை அளிக்கலானாள். டாக்டரிடம் போவது, தினம் ஒருவேளை என்று தொடங்கி, வாரம் ஒரு நாள் என்று மாறி, பத்து நாட்களுக்கு ஒரு தரம் என்று முன்னேற்றம் அடையத் துவங்கியது. ஆனால், மாலினியின் கண்களில் தெரிந்த சிவப்பு மாறவில்லை. ''கண்ணாடி, பவுடர் மாதிரி கூழாக உள்ளே போய்விட்டது; சூரியனைப் பார்க்கக் கூடாது'' என்று டாக்டர் எச்சரித்திருந்தாராம். ''பாவம் மாலினி! இன்னும் கோளாறு சரியாகவில்லை. கண்ணாடியில் நேராகப் பார்த்து பொட்டு இட்டுக் கொள்ளக் கூட முடியவில்லை!'' என்று வருத்தப்பட்டு வசந்தா அண்ணியும் சொன்னாளே!

அந்த மாலினி, இன்று காலை, சூரியன்



பிரகாசித்த சமயம், எப்படி மாடி ஏறி வந்தாள்? எதனால்?

ஒருவேளை கண் சரியாகிப் போய்விட்டும் கூட வேடம் போடுகிறாளா?

ஏன்?

ஒருகால் —

பொருத்தமாகக் காலே சிற்றுண்டி சமயத்திலேயே பேச்சு எழுந்தது பாஸ்கருக்குச் சௌகரியமாகப் போயிற்று.

''என்னங்க? உங்க தம்பி எவ்வளவு நாள் பிரும்மசாரியாக இருக்கப் போறார்? நேற்றுக் கூட கலோசனு 'ஒரு பெண்ணைப் பற்றிச் சொன்னான். இவ்வளவு நாள் மீராவுக்குக் கல்யாணம் ஆகட்டுமென்றிருந்தார். அவளும் கல்யாணமாகி அமெரிக்கா போயாச்சு'' என்று டிபன் பரிமாறிக் கொண்டே வசந்தா சொல்லிக் கொண்டு போனாள்.

''பாஸ்கர்! என்ன சொல்கிறே?''


''சீக்கிரம் சம்மதம் சொல்லச் சொல்லுங்க. மாலினி வந்த வேளை இவருக்குக் கல்யாணம் வரட்டும்!''

குமார் சிரித்தான். பாஸ்கர் மௌனம் சாதித்தான். காலேவேளையில் மாலினி வந்த கோலம் நினைவில் வந்து தாக்கியது. சட்டென்று மெதுவாக, ''மாலினிக்கு இன்னுமா குணமாகலே கண்?'' என்று கேட்டான்.

அவ்வளவுதான்; வசந்தாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. காப்பி டம்ளரை 'ணங்'கென்று மேசையில் வைத்தாள். ''அனுவசியமாக அவளேக் குறை சொல்ல வேண்டாம். ஐயோ பாவம்! எப்படி அடிப்பட்டது..... அவளுக்கென்ன விடில்லேயா, வாசலில்லேயா? போன மாசம்கூட அவள் அப்பா லெட்டர் போட்டிருந்தார். நான்தான் இன்னும் கொஞ்சநாளாறு பூரணமாக குணம் ஆகலே. இருக்கட்டும் என்று எழுதினேன். அவள் இருக்கிறது. உங்க தம்பிக்கு உறுத்துவானேன்!'' என்று பொரிந்து தள்ளி விட்டாள்.

பாஸ்கர் அண்ணி சொல்லி முடிக்கட்டும் என்று பொறுமையாகக் காத்திருந்தான். பிறகு மெல்லக் காலேயில் நடந்த சம்பவத்தைப் பற்றி குமாரிடம் சொன்னான்; அண்ணி கோபப்படுவாள் என்றும் எதிர்பார்த்தான்.

மாறாக, ''உங்க தம்பிக்கு சீக்கிரமே கல்யாணம்பண்ண வேண்டியதுதான். விடிகாலே வேளையில்கூட அவர் கனவில் மோகினிப் பிசாசு வருகிறாள்!'' என்று சொல்லிக் கலகலவெனச் சிரித்தாள்.



பாஸ்கரன் மறுத்து, "இல்லை அண்ணி! நான் எக்சர்சைஸ் எடுக்கிறபோது...."

வசந்தா அவன் சொல்வதைப் பொருட்டாக மதிக்கவேயில்லை. "உங்க பாஸ்கருக்கு பெரிய மன்மதன்னு எண்ணம்!" என்று கேலி செய்தாள்.

பாஸ்கர், ஏதும் சொல்லாது, மௌனமாக வெளியேறினான்.

ஒரு பத்து நாள் கழிந்திருக்கும். "இன்று உங்க தங்கையிடமிருந்து லெட்டர் வந்திருக்கு" என்று ஆபீசிலிருந்து வந்த குமாரிடம் கடிதத்தை நீட்டினாள் வசந்தா.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு, ஆர்வத்துடன், "என்ன வருகிறாளாமா?" என்றாள்.

"சரியாப் போச்சு! இப்பத்தானே ஒரு வருஷத்துக்கு முன்னாலே வந்து போனாள்!"—மடமடவென்று கடிதத்தைப் படித்து முடித்தான். "அட! மீராவுக்கு அஞ்சு மாசமாம். வளையல் வாங்கி அனுப்பணுமாம்!" என்ற குமார், உடனேயே, "சரிதான்! அவ்வளோட அளவு யாருக்குத் தெரியும்? ஒன்றும் அனுப்ப முடியாது!" என்று பிரச்னை முடிந்துவிட்டது என்ற அர்த்தத்தில் தோளைக் குலுக்கினான்.

"ஐயோ, பாவம். ஆசையாகக் கேட்டிருக்கிறாள்! விசேஷம் வேறே....!"—ஒரு நிமிடம் யோசித்தாள். பிறகு "மாலினி!" என்று கூப்பிட்டாள்.

மாலினி தயங்கியபடியே கூடத்துக்கு வந்தாள். தட்டுத் தடுமாறித்தான் நடந்தாள்; இடது விழியில் சிவப்பு இன்னும் ரத்தப் பொட்டாகத் தெரிந்தது. மருட்சியுடன் வசந்தாவையும், அவள் கணவனையும் ஏறிட்டுப் பார்த்தாள்.

"இங்கே வாயேன். ஒன் மினிட்!" தன் கையிலிருந்த வளைகளை அவளுக்குப் போட்டுப் பார்த்தாள். சிறிது 'லூசாக' இருந்தது. குதூகலத்துடன் கணவனை நோக்கி, "கரெக்ட்! மீராவுக்கும் என் வளை இதுபோலத்தானிருக்கும்! இந்த வாரமே வாங்கிவிடலாம்...." என்றாள்.

குமார் கடிதத்தைப் பார்த்தபடி, "யாரோ இருபதாம் தேதி போகிறாராமே? அவரிடம் அனுப்ப முடியுமா?"

"ஓ யெஸ், ஞாயிற்றுக் கிழமை கூட கடை இருக்கிறதே!"

நகைக் கடையில் கூட்டமான கூட்டம். மாடிக்கும் கீழுக்குமாக, ஏகத்துக்கு ஜனங்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். வசந்தாவைக் காரில் இறக்கிவிட்டு, "ஒரு மணி நேரத்தில் வந்துவிடுவேன். போதுமில்லையா டயம்?" என்று சொல்லியிருந்தான் குமார்.

மாலினியுடன் வசந்தா உள்ளே போனாள். தெரிந்தவாகள் என்பதால், பணியாள் புன்னகையுடன் வரவேற்றான். அவள் கேட்ட 'மாதிரி'களை அடுக்கி அடுக்கி வைத்தான்.

வசந்தா திருப்பித் திருப்பி பார்த்துக் கொண்டேயிருந்தாள். டிசைன் சரியாக இருந்தால், அளவு சரியாக இல்லை; அளவு

2 ரூபாய் மிச்சம்!

தூய்மை மிக்க வி.வி.டி. தேங்காய் எண்ணெய் இப்போது பாலிதீன் பைகளில் கிடைக்கிறது. இந்த ஒரு கிலோ பேக்கை வாங்கும்போது உங்களுக்கு இரண்டு ரூபாய் மிச்சமாகிறது. 500 கிராம் பேக் வாங்கும் போது ஒரு ரூபாய் மிச்சம்.

உடலுக்குக் குளிர்ச்சியும், கேசத்திற்குப் பராமரிப்பும் அளிக்கும் வி.வி.டி. தேங்காய் எண்ணெய் உபயோகித்து பலன் அடையுங்கள்.

இப்போது வி.வி.டி. தேங்காய் எண்ணெய் பாலிதீன் பைகளில் கிடைக்கிறது.

இந்தப் புதிய பேக் 1 கிலோ & 500 கிராம்களில் கிடைக்கின்றன.





V.V.D

வி.வி.டி. தேங்காய் எண்ணெய்

இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்

இந்தப் புதிய பேக் தற்சமயம் சென்னை நகரத்தில் மட்டும் கிடைக்கும்.



''படம் எடுக்கப்பட்டவரை வினியோகஸ்தர்களுக்குப் போட்டுக் காண்பிச்சிங்களே, என்ன சொன்னாங்க?''

''பாதி படத்தைப் போட்டுக் காண்பிச்சேன். பாதியிலேயே எழுந்து போய்ட்டாங்க....''



''போயும் போயும் மிட்டாய்க் கடைப் பூட்டை உடைச்சியே, ஏன்?''

''இன்று எனக்கு ஹாப்பி பர்த்—டே!''



''உங்க கணவர் சிங்காரம் சோகமா இருக்காரே, ஏன்?''

''டாக்டர் எனக்குக் காரம் ஆகாதுன்னார். அதனாலே அவரை டைவர்ஸ் பண்ணிட்டேன். அதான்!''

பொருத்தமாக இருந்தால், டிசைன் நன்றாக இல்லை. இரண்டுமே சரியாக இருந்தால், விலை சற்றுக் கூடுதல்....

''இது லேடஸ்ட் டிசைன். போட்டுப் பாருங்க'' என்று ஒருத்தி உரிமையுடன், வசந்தா கையில் வளைகளைப் போட்டாள். அவள் கைக்குச் சிறிது பெரிதாக இருந்தது.

''ஆ... இது மீராவுக்குச் சரியாக இருக்கும். ம்.... போட்டுக்கோ.... சைஸ் தெரியும்!''.

மாலினி கைகளில் வளையல் போட்டுக் கொண்டாள்; அவள் முன் சின்ன கண்ணாடி வைக்கப்பட்டது. அனிச்சையாக மாலினி, பார்த்த சமயம் —

வாசலில் ஹார்ன் சப்தம் கேட்டது. 'அப்பா.... ஆனாலும் அவசரம்!' என்று வெளியே ஓடினாள் வசந்தா. ''கொஞ்சம் இரு மாலினி, வந்து விடுகிறேன்.''

குமாருக்கு நேரம் இல்லையாம்; யாரையோ அவசரமாக பார்க்க வேண்டுமாம். வெற்று செக்கை அவனிடமிருந்து பெற்றுக் கொண்டு திரும்பவும் கடைக்குள் நுழைந்த வசந்தா அந்தக் காட்சியைக் கண்டு திகைத்துப் போனாள்.

மாலினி இருந்த நிலை.....

சட்டென்று' அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். பாஸ்கர் சொன்னதும், 'இன்னுமா. கண் சரியாக இல்லை!' என்று கேட்டதும் தொடர்ந்து நினைவு வந்தன.

முடிவுக்கு வந்துவிட்டாள்.

மீராவுக்கு வளையல் கொடுத்தனுப்பின இரண்டாம் நாள், மாலினியை அவளது பெற்றோர் வீட்டுக்கு அனுப்பினாள் வசந்தா.

குமாருக்கு ஒரே ஆச்சரியம். ''என்னது! கொஞ்ச நாள் முன்னாலதான் பாஸ்கரிடம் சண்டை போட்டாய்?''

''பாஸ்கர் சொன்னது சரிதான். மாலினி இனிமேல் தங்கியிருந்தால் ஏதாவது இசகு பிசகா ஆகியிருக்கும்!'' என்று அழுத்தமாகச் சொன்னாள் வசந்தா. தொடர்ந்து, ''அன்னிக்கு நகைக் கடையில்தான் எனக்குத் தெரியவந்தது. அப்போ, வளையலை போட்டுக் கொண்டவுடன், தானாகக் கண்ணாடியில் பார்த்து மாலினி அடைந்த சந்தோஷம் இருக்கிறதே — அது நிச்சயம் பார்வை கோளாறுள்ள பெண்ணால அடைய முடியாது. நேராகப் பார்த்தவுடன் எனக்குத் தெரிந்தது! அப்புறம் அவள் ஏதோ சொல்லிச் சமாளித்தாள். இனியும் மாலினி தங்கினால் — நமக்குத்தான் கெட்ட பெயர் என்று தோன்றிவிட்டது. டாக்டரிடமும் 'பெர்மிஷன்' கேட்டு, மருந்து வாங்கிக் கொடுத்து அவளை ஊருக்கு அனுப்பினேன்!'' என்றாள்.

வசந்தாவின் குரலில் வருத்தம் தெரிந்தது; தன் மைத்துனரை அனாவசியமாகக் குற்றம் சாட்டினதாலா, அல்லது சிநேகிதியின் மீது வைத்த மதிப்பு தாழ்ந்து போனதாலா?

அவளுக்கே தெரியவில்லை.

இரண்டு பலன்கள்!



யூனிட் ட்ரஸ்டின் ஒரு டிவிடெண்டைவிட சிறந்தது எது? இந்த ஜூலை மாதத்தில் வழங்கும் இரண்டு டிவிடெண்டுகள்!!

எப்போதும் கண்டிராத அதிகபட்ச டிவிடெண்ட்—14.75%—இவ்வருடம் யூனிட் ட்ரஸ்ட் வழங்குகிறது.

மேலும் கூடுதலாக 0.5% போனஸ் டிவிடெண்டும் உங்களுக்குக் கிடைக்கின்றது!

மொத்தமாக 15.25% டிவிடெண்ட்.

ஜூலை மாதத்தில் மட்டுமே யூனிட்டுகள் ஆண்டின் மிகக் குறைந்த விலையான ரூ. 12.85க்கு விற்கப்படுகின்றன. பிரதிபலனாக நீங்கள் பெறுவதோ, அதிகமான வருமானம், சுலபமாக பணமாக்கும் வசதி, வரிச்சலுகைகள்.

யூனிட்டுகளை வாங்குவதும் மிக எளிது. அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள், பிரதம அஞ்சலகங்கள் மற்றும் எங்கள் முக்கிய பிரதிநிதிகள்/ஏஜெண்டுகள் மூலமாகவோ, எங்கள் அலுவலகங்களிலிருந்தோ வாங்கலாம்.

நாடு முழுவதும் 21 லட்சம் பேர் யூனிட்தாரர்களாக இருப்பதன் ரகசியம் இதுதான்!

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
(ஒரு பொதுத்துறை நிறுவனம்)
தலைமை அலுவலகம்: பம்பாய்


மண்டல அலுவலகம்:
தபால் பை எண் 5063
சென்னை-600 001
போன்: 27433/24146

திருச்சூர் கிளை:
12/758, தெக்கமடம் சாலை
திருச்சூர்-680001
போன்: 24690

விஜயவாடா கிளை:
27-11-68, மேரி தெரு
கவர்னர்பேட்
விஜயவாடா

பெங்களூர் கிளை:
முதல் மாடி
வேர்ல்ட் ட்ரேட் சென்டர்
ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர் அருகில்
கெம்பகௌடா சாலை, த. பெ. எண் 9614
பெங்களூர்-560 009

விண்ணப்பங்கள் இப்போது ஸ்பென்சர் அண்டு கோ., சென்னை (மவுண்ட் ரோடு மற்றும் அடையார்), திருவனந்தபுரம், எர்ணாகுளம், கோழிக்கோடு, கோயம்புத்தூர், கூனூர், மதுரை, உதகமண்டலம், மெர்க்காரா மற்றும் செகந்திராபாத் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளப்படும்.



ஜூலை மாதத்தில் மட்டுமே யூனிட்டுகள் ஆண்டின் மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. ரூ. 12.85 மட்டுமே!

தமிழ்நாட்டிலுள்ள எங்களது முக்கியப் பிரதிநிதிகள் :—

- திரு. எ. தனபால், கோயம்புத்தூர்-18, போன்: 34776 (O)
- திரு. எம். ராமமூர்த்தி, மதுரை-2, போன்: 30160 (O), 43179 (R)
- திரு. கே. முத்துசாமி, தஞ்சாவூர்-7, போன்: 1224 (R)
- திரு. என். கே. இங்கர்சால், சேலம்-2, போன்: 51520 (R)
- திரு. எம். ராமலிங்கம், திருச்சி-1, போன்: 28280 (O)
- திரு. பி. நாராயணன், வேலூர்-12, போன்: 21575 (O)
- திரு. என். பாலகிருஷ்ணன், கடலூர்-1, போன்: 548 (O), 48 (R)
- திரு. எஸ். கபாலி சந்திரபோஸ், நாகர்கோவில்-2, போன்: 4449 (R)

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

லஞ்ச் டைம்

10

(ஆபீசுக்குள் குண்டு என்றதும், முகத்தில் பீதியுடன், செய்வதறியாது. ஜி. எம். ராகவாச்சாரியை அனைவரும் சூழ்ந்து கொள்கின்றனர். ராகவாச்சாரி டேபி ளில் ஏறி நின்று கொள்கிறார். அவ்வப் போது சொட்டைத் தலையில் ஒழுகும் வியர்வையை அழுந்தக் கர்ச்சீப்பால் துடைக்க, இருக்கும் ஒன்று இரண்டு டை அடித்த முடிகள் நிறம் மாறுகின்றன.)

ராகவா: நன்னாக் கேட்டுக்கோங்கோ... நம்ம ஆபீஸ்ல குண்டு இருந்தாலும் நாம வெளியே ஓட முடியாத சூழ்நிலையில இருக் கோம்... சண்டாளன்... அப்படி ஒரு நிபந் தனையைப் போட்டிருக்கான்...

எல்லோரும் (கோரஸாக): என்ன சார் நிபந்தனை?

ராகவா: ஆபீசை விட்டு ஓட முயற்சி பண்ணினாலோ, அதிர்ச்சி கொடுத்தாலோ குண்டு வெடிச்சிடுமாம்! இன்னும் ரெண்டு மணி நேரத்துக்குள்ள, எம். டி. கூட ஒரு பேச்சு வார்த்தை இருக்காம். அது சுமுகமா முடிஞ்சா அவாளே வந்து வெடியை எடுத் துருவாளாம்.

மைதிலி: (ஏற்கெனவே வேர்த்துக் கொட் டும் சரீரமான மைதிலிக்கு பயத்தில் வேர்வை ஆறாக, அருவியாகக் கொட்ட) என்ன சார் இது?... ஓடக் கூடாதுன்னு சொல்றீங்க...? அவன் சொல்ற டயத்துக்கு முன்னாலேயே வெடிச்சதுன்னா என்ன பண்றது...? எங்க வீட்டுக்காரர் வேற இன்னைக்கு பார்த்து இட்லிக்கு ஊறப் போட்டிருக்கார். நான் போகலேன்னாவழக்கம்போலதனியா கஷ்டப் படுவார்.

ராகவா: ஐயோ... ஈஸ்வரப் பிராப்தியே கிடைக்கப் போற நேரத்துல இட்லியைப் பத்திப் பேசறியே மைதிலி.

மாடசாமி: ஏன்... சார்... சொல்ற டயத் துக்கு வெடிக்கிற குண்டு கூட இருக்குதா?

ஆனந்த்: இல்லாம என்ன...? அதுதான் டைம் பாம்.

நிர்மலா: ஐயோ... டைம் பாமா...? சினி மாவுலஎல்லாம்புகைவந்து டமார்னு வெடிக் குமே... அதுவா... ஐயோ... இன்னிக்குத் தானே இந்தப் புதுப் புடவையை எடுத்துக் கட்டிக்கிட்டு வந்தேன்... இப்படியாயிப் போச்சே... தாயே... பாதாள பொன்னி யம்மா... மாவிளக்குப் போடறேன்... வெடியை புஸ்வாணமாப் பண்ணிடு தாயே...

மாடசாமி: நிர்மலா... உன்னைப் பார்த்தா எனக்கு அழுகையா வருது... நமக்கு இன்னும் ஒருதரம் கூட கண்ணாலம் ஆகலே... ஒரு தரம் கூட முதலிரவு ஆகலே... அதுக்குள்ள மேல போகும்படியா ஆச்சே... ஐயோ... (அழுகிறான்).

நிர்மலா: ஆமா... அத்தான்... நானும் மோசம் போனேனே... ஐயோ...



ராகவா: நிறுத்துங்கோ... இப்பவே பிராணன் போயிட்ட மாதிரி பெலாக்கணம் பாடறேளே... சுமுகமாப் பேச்சு வார்த்தை முடிஞ்சா நாம எல்லாம் சந்தோஷமா வீட்டுக்குப் போயிடலாம் தெரியுமோ...?

சாம்பசிவம்: ஆமா... ரொம்ப நல்ல வர்னு பேரு... ஹெக்டே... அவரும், நம்ம எம். ஜி. ஆரும் கூடிப் பேசின காவேரி தண்ணிப் பேச்சே முறிஞ்சிப் போச்சு... நம்ம எம். டி. யோ... ஒரு சுடுதண்ணி... இது எங்க சுமுகமா முடியப் போகுது...? நமக்குப் பதவி கிடைக்கப் போறது உறுதி தான்...

ஆனந்த்: பதவியா?

சாம்பசிவம்: ஆமா... வைகுண்ட பதவி.. ரிசர்வேஷனோ... ரெகமண்டேஷனோ தேவையில்லாத, ஜனநாயகப் பதவி...

ரகுவீர்: அட ஏன் சார்... பயப்படறீங்க...? இப்படித்தான் போன செவ்வாய்க்கிழமை ஐ. சி. எஃப் ஆபீசர் வீட்டுல வெடிகுண்டுன்னு புரளி பண்ணினாங்க... என்ன ஆச்சு? ஒரு வெங்காயமும் இல்லே... இதெல்லாம் இப்போ சகஜமாப் போச்சு...

ராகவா: அப்படி நிர்த்தாட்சண்யமா விட்டுடப் படாது... ப்டாதுன்னா ப்டாதுதான்... ஏன் சொல்றேன்னா... நம்ம பார்லிமெண்ட்டையே வெடி வைச்சி டமார்னு தகர்க்க சதி செஞ்சான்னு ஏழு பேரைக் கனடாவுல அரெஸ்ட் பண்ணியிருக்கா.

(ராகவாச்சாரி டமார் என்ற வார்த்தையைக் கொஞ்சம் அழுத்தமாக உச்சரிக்க, டேபிளின் விளிம்பில் உட்கார்ந்திருந்த மாடசாமி அதிர்ச்சியில் பொத்தென்று கீழே விழுந்து, 'ஐயோ' என்று அலறுகிறான். பயத்தில் சுசீலா ரகுவீரைக் கட்டிக் கொள்கிறாள்.)

ராகவா: எதுடா சமயம்னு காத்துண்டிருக்கேளாக்கும்! சீரியசான மேட்டர் பேசும் போது கூடவா லவ் சீன் கண்றாவியெல்லாம்...

ஆனந்த்: நாம இங்கிருந்து வெளியே போனாத்தானே அதிர்ச்சியில குண்டு வெடிக்கும்னு சொன்னான்... உள்ள இருந்துட்டே... சத்தம் போடாம குண்டைக் கண்டுபிடிச்சித் தூக்கி வெளியே போட்டுட்டா...?

சுசீலா: இது நல்ல ஐடியா!

ராகவா: பார்த்து... மெதுவா நடங்கோ... எஸ்பெஷலி... மைதிலி... நீ நடந்தாலே அதிர்ச்சி அதிகமா பதிவாகும்...


(மாடசாமி இங்குமங்குமாக லஞ்ச் ரூமை வெறித்துப் பார்க்கிறான். பின்னால் வருகிறாள் நிர்மலா.)

நிர்மலா: இன்னய்யா... உன் பங்குக்கு வெடியைக் கண்டுபிடிச்சிடு. பேங்க்ல கொள்ளையைப் புடிச்சிக் குடுத்தா ஐம்பதாயிரம் தரப் போறாங்களாம், ஆபீசுல வெடிகுண்டை எடுத்துக் குடுத்தா அஞ்சாயிரம் கூடவா தர மாட்டாங்க? நாம ஜாலியா ஆனிமூன் போகலாய்யா...

மாடசாமி: ஆனிமூனாவது... ஆடிமூனாவது... இன்னும் கழுத்துல தாலியே ஏறலே... ஆசைப்படாதே...



நினைவூட்டுகிறோம்!



வெள்ளி சந்தனப் பேலா பரிசு!

லஞ்ச் டைம் தொடரைக் கவனமாகப் படிப்பதுடன் பத்திரப்படுத்தியும் வைத்திருங்கள்!

12 வது கடைசி அத்தியாயத்தில் நீங்கள் பங்கேற்க ஒரு போட்டி அறிவிக்கப்படும்!

பரிசு: வெள்ளி சந்தனப் பேலா!

ஆறுதல் பரிசுகளும் உண்டு!

மைதிலி: ஜி. எம். சார்... போன் ஆம்பளைக் குரலா? பொம்மனாட்டி குரலா?

ராகவா: ஆம்பளையா இருந்தா என்ன...? பொம்மனாட்டியா இருந்தா என்ன?

மைதிலி: இல்லே... எங்க ஹஸ்பெண்ட் கருணைக்கிழங்கு பொரியலுக்குக் குண்டுன்னு தான் சொல்லுவாரு... அவருதான் என் டிபன் பாக்ஸ்ல அது இருக்குன்னு போன் பண்ணி ஞாபகப்படுத்தினாரோன்னு பார்த்தேன்...

ராகவா: அவா அவா குல தெய்வத்தை வேண்டிண்டு தேடுங்கோ.... ஆப்டா தயவு தாட்சண்யம் பார்க்காம ஜன்னல் வழியா தூக்கி வெளியில போட்டுடுங்கோ... எங்கிட்ட காண்பிச்சி அழகு பார்க்கணும்னு அவசியம் இல்லே...

(எல்லோரும் குண்டைத் தேடுகிறேன் என்று சொல்லி, ஆபீஸையே இரண்டு பண்ணுகிறார்கள். பழைய குப்பைகள் எல்லாம் வெளியே வருகின்றன.)

மாடசாமி: சார்... இந்த டேபிளுக்குப் பின்னால பாருங்க... எவ்வளவு மந்தார எலை...

ராகவா: அது அந்த சாம்பசிவம் பண்ற வேலை... இங்க வேண்டாம்னு சொல்லலே... அதுக்காக இடபடியா போண்டா, பஜ்ஜியை சீட்டுல உட்கார்ந்தே கபளீகரம் பண்ணிட்டு, மந்தார எலையை பீரோவுக்குப் பின்னால வீசுவா... நேஸ்டி ஃபெலோ...

ரகுவீர்: நீங்க என்ன தேடினாலும் குண்டு கிடைக்கப் போறதில்லே... எல்லாம் புரளி தான்...

(அப்போது டெஸ்பேட்ச் மேஜைக்கு அடியில் குனிந்து மும்முரமாக மாடசாமி குண்டைத்தேடிக்கொண்டிருக்க, மேஜையின் மீது இருந்த, ரப்பர் ஸ்டாம்ப் இங்க் பாட்டிலைத் தட்டிவிட்டு விடுகிறாள் நிர்மலா. பாட்டில் கீழே விழுந்து, நொறுங்கி இங்க் முழுவதும் மாடசாமியின் மேல் அபிஷேகம் ஆகிறது. மஜெண்ட்டா கலரில் பூதம் போல் எழுந்து வரும் மாடசாமியைப் பார்த்து நடுங்குகிறாள் மைதிலி.)

மைதிலி: சார்... சார்... இது யாரு?

ராகவா: பயப்படாதே... நம்ம மாடசாமி தான்... இங்கை வேஸ்ட் பண்ணாம டெஸ்பாட்ச் கவருக்கெல்லாம் அவனைத் தொட்டுத் தொட்டு இப்பவே ஸ்டாம்ப் பண்ணி வெச்சிருங்கோ...

(அப்போது கண்ணில் தீப்பொறி பறக்க எம். டி. உள்ளே நுழைகிறார்.)

எம். டி.: யோவ்... ராகவாச்சாரி... இது என்னய்யா கூத்து?... விடியோ முடிஞ்சி வீட்டுக்குப் போகாம, ஆபீஸை ஒழிச்சிண்டிருக்கீர்...? நாளைக்குப் பொங்கலா?

ராகவா: உஸ், சத்தம் போடாதீங்க சார்... குண்டு வெடிச்சிடும்...

எம். டி.: குண்டாவது... வெங்காயமாவது... எல்லாம் புரளி... பயப்படாம வீட்டுக்குப் போங்க...

மைதிலி: அப்பா...மைலாப்பூர் ஆஞ்சநேயருக்கு வெத்தலே மாலே போடறேன்னு வேண்டிக்கிட்டேன்... பலிச்சிடுத்தே...

ராகவா: சார்... நீங்க என்ன சொல்றேள்?.. போன் வந்துதே...

எம். டி.: எனக்கும் வந்தது... பண்ணினது யார் தெரியுமா?... இந்த ரகுவீர் ஏற்பாடு பண்ணின ஆள்...

ரகுவீர்: சார்... இது அநியாயம்... இந்த வெடிகுண்டு மிரட்டலுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லே.

ராகவா: ஏன் சார்... உங்களை மிரட்டறதுனாலே ரகுவீருக்கு என்ன ஆகணும்?

எம். டி.: இருக்கு ராகவாச்சாரி... நீ வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைக்கிற ஆளு... எனக்கு பி.பி. இருக்கே... தெரியுமா...?

ராகவா: தெரியும்... 1700/85.

எம். டி.: நாசமாப்போச்சு..இதைச்சொன்னாலே என் உயிர் போயிடும்... 1700 இல்லேய்யா... 170... ஏதாவது அதிர்ச்சியான நியூஸ் சொன்னா எனக்கு ஆபத்து வரும் இல்லேயா? அதுனாலதான் முன் விரோதம் காரணமா இந்த நியூஸை ரகுவீர் கிளப்பிவிட்டிருக்கான். இந்தக் கம்பெனி எம். டி. ங்கற முறையில, இந்த வினாடியே ரகுவீரை நான் சஸ்பெண்ட் பண்றேன்...

(அனைவரும் திகைத்துப் போய் நிற்கிறார்கள்.)

(திரை) (தொடரும்)

காப்பாற்ற முன் வந்த காசிலிங்கத்தின் கதி என்ன?



சுமார் மழை பெய்து சாலையில் ஆபத்தான நசநச ஈரம். பூந்தமல்லி டெலிஃபோன் எக்ஸ்சேஞ்ச் தாண்டிச் சற்று தூரத்தில் சாலையில் சிறியதாய் ஒரு திருப்பம் — அஜாக்கிரதையாக வருகிறவர்களை, 'வா, வா காலை வாரி விடுகிறேன்' என்று காத்திருக்கிறது. ஒரு ஆயில் டாங்கர் லாரி வாலாஜாபாத்திலிருந்து சென்னை நோக்கி நல்ல வேகத்தில் வந்து கொண்டிருப்பதை அந்தத் திருப்பம் உணர்ந்து தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கிறது. விரைந்து வந்து திருப்பத்தில் ஸ்டியரிங்கை இலேசாகத்தான் ஒடிக்கிறார் டிரைவர். அடுத்த கணம் —

டிரைவர் ஸீட் பக்கம் தரையில்; இன்னொரு கதவு வானம் பார்த்தபடி! மேல் பக்கம் அந்த முன் சக்கரம் இன்னும் இலேசாகச் சுழன்று கொண்டிருக்கிறது! அப்போது காலை மணி பத்தரை இருக்கும்.

கணங்கள் நிமிஷங்களாக மாறுகின்றன. லாரியை விட்டு யாரும் வெளியே வரக் காணோம். கூட்டம் சேர்கிறது. எட்ட நின்று பார்க்கிறதேயொழிய டாங்கரை நெருங்கத் தயங்குகிறது.

காசிலிங்கத்துக்குப் பூந்தமல்லி டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சில் வேலை. ஒரு ம அடிக்க வேண்டும் போல் உணர்கிறார் வெளியே வருகிறார். விஷயத்தைக் கேள்விப்பட்டதும் மேலதிகாரிக்குச் சொல்லி அனுப்பிவிட்டு ஸ்தலத்துக்கு விரைகிறார். லாரி மீது ஏறி ஒரு பக்கக் கண்ணாடியை உடைத்து விட்டு உட்புகுந்து உள்ளே இருந்த டிரைவரையும் கிளீனரையும் மெல்ல வெளியேற்றுகிறார். இதற்கு வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற மக்களில் ஒருவர் தைரியமாக உதவ முன்வருகிறார். காசிலிங்கத்துக்குக் கைகால்களில் கண்ணாடிக் கீறல்கள். ஊர்க் காவல் படையைச் சேர்ந்த அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. தாம் பெற்ற பயிற்சிகளைப் பயன்படுத்தி மயக்க நிலையில் இருந்தவர்களுக்கு முதலுதவி சிகிச்சை தருகிறார். சென்னை நோக்கிச் செல்கிற ஒரு பஸ்ஸை நிறுத்தி அடிபட்டவர்களை அதில் ஏற்றிக் கொண்டு பூந்தமல்லி அரசு மருத்துவமனைக்கு விரைகிறார். அட்மிட் செய்து கொண்ட டாக்டர்கள், ''இது ஆக்ஸிடெண்ட் கேஸ்; போலீஸில் தகவல் கொடுத்து விடுங்கள்'' என்கிறார்கள். கடமை வீரர் காசிலிங்கம், யதேச்சையாக அங்கு வந்து சேர்ந்த ஒரு நண்பரிடம் விஷயத்தை விளக்கி அவர் சைக்கிளைக் கடன் வாங்கிக் கொண்டு பூந்தமல்லி போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைகிறார். புகார் கொடுத்ததும் இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிளும் மோட்டார் சைக்கிளில் புறப்படுகிறார்கள். ''நீங்க போங்க, பின்னாலேயே சைக்கிள்லே வந்துடுவேன்'' என்று சொல்லி அனுப்புகிறார் காசிலிங்கம்.

சைக்கிளுக்குக் காத்திருக்கும் நண்பர், தன் வருகைக்குக் காத்திருக்கும் இன்ஸ்பெக்டர், இவர்களைப் பற்றிய எண்ணம்; டிரைவர், கிளீனரின் உடல்நிலை எப்படி இருக்கிறதோ என்ற கவலை; இவற்றுடன் களைப்பும் சேர்ந்து கொள்ள, மூச்சு வாங்க சைக்கிள் பெடலை மிதிக்கிறார் காசிலிங்கம்.

எதிரே ஒரு பார்சல் லாரி. காசிலிங்கம் சாலை ஓரமாக ஒதுங்குகிறார். ஆனாலும் என்ன? காசிலிங்கம் ஒதுங்க ஒதுங்க லாரியும் அவரை நோக்கியே வருகிறதே. ஏன்? அடப்பாவமே! ஆ! ஐயோ...!

காசிலிங்கத்தின் கதி என்ன?

60—ம் பக்கம் பாருங்கள்.

நீங்கள் கேட்டவை — தராசு

காவிரி நீர் பிரச்னையில் ஹெக்டேயின் போக்கு சரிதானா?


* சு. தாணுமாலயப் பெருமாள், குளத்தூர்

? தமிழ்நாடு அரசுபரிசுச் சீட்டில் இரட்டை இலைச் சின்னம் பொறித்தது சரிதானா?

! தவறு என்று சொன்னால் போதாது; குற்றம், பெருங் குற்றம் என்று இரட்டை அழுத்தத்துடன் சொல்ல வேண்டும். கட்சி வேறு; ஆட்சி வேறு என்ற பாகுபாட்டையே மறந்து கட்சி நலனுக்காக ஆட்சி அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு இது போல இன்னும் எத்தனையோ உதாரணங்கள் உண்டு.



• போக்கு சரிதானா?




• ரொம்ப உயர்கிறது?



அரசியல் ஆதாயம்



• சத்தத்தின் எதிரி.



• தொட்டு



• எம்.ஜி.ஆர். சந்திப்பு

* எம். கல்யாணசுந்தரம், நாச்சியார்கோவில்

? காவிரி நீர்ப் பிரச்னையில் கர்நாடக முதல்வர் ஹெக்டேயின் போக்கு சரியில்லையே?

! நமது நோக்கில் சிறிதும் சரியில்லை. கர்நாடக மக்களின் நோக்கில்? கர்நாடக முதல்வர் கர்நாடக மக்களின் நலனுக்காக வாதாடவும் செயல்படவும் வேண்டியவர்.. அது அவர் கடமை. பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுத்தால் நாளை கர்நாடக மக்கள் அவரிடம் அதே அளவு பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள மாட்டார்கள். எனவே, ஹெக்டேயைக் குறை கூறுவதை விடுத்து நமது குரலை உயர்த்தி உரிமைகளைத் தட்டிக் கேட்டுப் போராடத்தான் வேண்டும். மத்திய அரசிடமும் நீதி மன்றங்களிடமும் முட்டி மோதிப் பார்க்கத்தான் வேண்டும்.

* ஆர். விஜயராஜ், பெரியகுளம்

? தமிழகத்தில் அறுபது சதம் மக்களுக்குக் காது மந்தம் என்று குமரி அனந்தன் கூறியுள்ளாரே?

! கொஞ்சம் மிகையாக இருக்கலாம். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்தில் எந்த நோக்கில் இதைச் சொன்னார் என்பதைத் தெரிந்து கொண்டுதான் விமர்சிக்க வேண்டும். அவர் ரொம்ப காலமாகவே சத்தங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்; சுற்றுச் சூழலை பஸ்களின் ஏர் ஹாரன், குழல் ஒலிபெருக்கிகள் போன்றவை பாழடித்து வருகின்றன என்று கூறி இவற்றை எதிர்த்து இயக்கம் நடத்தி வருகிறார்.

* அருண், ஈரோடு

? கமலஹாசன் மட்டும் எளிதாக முதல்வரைச் சந்தித்தது; அவர் புகாருக்கு முதல்வர் உடனடி நடவடிக்கை எடுத்தது..... இவை பற்றி?

! சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் மாதிரி இவர் சினிமா நட்சத்திரங்களின் குறை களையும் முதல்வர். தொழில் ரீதியான பந்த பாசம் இல்லாமல் போகுமா; அல்லது, அதே பந்த பாசத்தை மூர்மார்க்

* அழகை..... ..... ஒப்பிடுக

கெட் வியாபாரிகள் போன்றோர் அவரிடம் எதிர்பார்க்கத்தான் முடியுமா?

* ஜி. சுப்பிரமணியம், நெய்வேலி

? அ.தி.மு.க.வுக்கும் இந்திரா காங்கிரஸுக்கும் இடையே உள்ள கூட்டு உடைந்தால் அடுத்த நிமிஷமே காளிமுத்து கைது செய்யப்படுவார் என்று தளபதி சண்முகம் சொல்கிறாரே. அப்படியானால் கூட்டணியில் இருந்தால் குற்றவாளியைக் கூடத் தண்டிக்காது விடுவதுதான் காங்கிரஸின் கொள்கையா?

! சபாஷ்! சரியான கிடுக்கிப் பிடிதான் போட்டீர்கள். இன்றைய அரசியல் அப்படித்தான் ஆகிவிட்டது! அரசியல்வாதிகள் கூடச் சில சமயங்களில் சில வெட்கக் கேடான உண்மைகளை அவர்களையும் அறியாமல் ஒப்புக் கொண்டு விடுகிறார்கள்!

* வே. பாண்டி, உளுந்தூர்பேட்டை

? நாட்டில் லஞ்ச லாவண்யம் இருக்கக் கூடாது என்றும் ஒழிக்க வேண்டும் என்றும் டில்லியில் உண்ணாவிரதம் இருந்த மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியின் நிலை?

! கவலைக்கிடம் — உத்தியோக ரீதியில்.

* வீ. அமிர்தலிங்கம், மன்னார்குடி

? ஜி.சாமிநாதனுக்கு ராஜ்ய சபை உறுப்பினர் பதவி கிடைக்கும் போலிருக்கிறதே? ம.பொ.சி.க்கு?

! மேலவை ஒழிப்பு சம்பந்தமாக வாயை மூடிக் கொண்டிருந்ததற்காக ஒருவருக்கு ஷொட்டு; இன்னொருவருக்கு.....?

* எஸ். கலீல் ரகுமான், பொள்ளாச்சி

? அமலா, அம்பிகா — அழகை ஒப்பிடுக.

! புதுக்கருக்கு குன்றாத பொருளுக்கு மவுசு அதிகம்.

* செல்வ பாரதி, ஈரோடு

? நடிகைகளின் வருமானத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஆர்.எம்.வீ. கூறுகிறாரே?

! வெள்ளையைக் கட்டுப்படுத்தினால் கறுப்பு கொழிக்கும்.

* கா. அப்துல் மஜீத், திருமயம்

? எம்.ஜி. ஆர். அடுத்து ஒழிக்க இருப்பது அ-இ-அ-தி-மு.க. (?) என்று பதில் கூறியுள்ளீரே? நீர் எந்தக் கட்சிக்குத் துதி பாடுகிறீர்? ஏன் வெறுப்பைச் சம்பாதித்துக்கொள்கிறீர்?

! நான் துதிபாடும் ஒரே கட்சியின் பெயர், உண்மை. உண்மையைச் சொல்கிறவர்கள், கோபத்தையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்வதென்பது புராண காலத்திலிருந்து நிகழ்ந்து வரும் உண்மை. நிற்க; அரசியல் ரீதியாக எம்.ஜி. ஆர். ரொம்பவும் குழம்பிப்போயிருக்கிறார்என்பதைஉணர்த்துவதே எனது அந்தப் பதிலின் நோக்கம். எனது இந்தக் கணிப்பு சரியானது என்பதை எம்.ஜி. ஆர். தமது பெயரிலேயே அண்மையில் வெளியிட்டுள்ள இரு விளம்பரங்களும் நிரூபிக்கின்றன.

* இரா. வீரராகவன், பொன்னமராவதி *

? ஹெக்டே, சரத் பவார் — இருவரில் யார் தட்டு மேலே?

! பவார் பிரச்னையைத் தூண்டிவிட்டு அதிலிருந்து அரசியல் ஆதாயம் தேடியவர். ஹெக்டே சாணக்கியத்துடன் விட்டுக் கொடுத்தும் அதே சமயம் வன்முறையாளரிடம் கண்டிப்புக் காட்டியும் நிலைமையை வெற்றிகரமாகச் சமாளித்தார். இந்த இருவரையும் விட, மத்தியில் ஆளும் மாற்றுக் கட்சிக்காரராய் இருந்தும் வரட்டுக் கௌரவம் பாராமல் ஹெக்டேயைத் தேடி வந்து பிரச்னைக்குத் தீர்வு காண முயன்ற எஸ்.பி. சவான் ரொம்பவும் உயர்கிறார் — என் மதிப்பில்.

* ஷோபனா ராஜன், செலக்கரிச்சல்

? வைரமுத்துவை ஓஹோ என்று புகழ்கிறீர்களே, தில்லு முல்லு செய்து புகழடைய நினைக்கும் ஒருவரை நல்ல கவிஞன் என்று ஒப்புக் கொள்ள முடியவில்லையே?

! எக்ஸ்பிரஸ் பேட்டியில் அவரே சொல்லியிருக்கிறார் — திரைப்படத் துறையில் முதலடிகளை அவர்களே எடுத்துக் கொடுத்துத் தொடர்ந்து பாட்டெழுதுமாறு கேட்பார்கள் என்று. மாட்டேன் என்று சொன்னால் அங்கே இருக்க முடியாது; பணம் சம்பாதிக்கவும் முடியாது. சிந்து பைரவியில் நாடோடிப் பாடலின் முதல் நாலு வரிகளை மட்டும் எடுத்துக் கொண்டது அந்தக் காட்சிக்கு அத்யாவசியமான ஒன்று. நிற்க, வைரமுத்துவை இலக்கிய ரீதியில் எடை போட வேண்டுமென்றால் அதற்கு அவரது திரைப்படப் பாடல்கள்தானா அகப்பட்டது?

ரூ 10 பரிசு பெறுபவர்:

இரா. வீரராகவன்,
138, பட்டமரத்தான் மெயின் ரோடு,
பொன்னமராவதி—622 407.



"சிரித்த முகமாக வாருங்கள்; பயந்தது போலக் காட்டிக் கொள்ளாதீர்கள்!" என்ற எச்சரிக்கையுடன் எங்களை வரவேற்றார் ராயான் பாபு. எச்சரிக்கைக்கு அவசியம் இருந்தது. அவர் வளர்க்கும் நாய்கள் ஒவ்வொன்றும் அரை ஆள் உயரமுள்ள கோபக்கார நாய்கள்!

கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை போல நாய்ப் பண்ணை நடத்துகிறார் ராயான் பாபு. நாய்கள்மேல் உயிரையே வைத்திருக்கிறார். தமது குடும்பத்தினராகவே அவற்றைக் கருதுகிறார். அந்த நாய்களும் அவரிடம் அப்படியே நடந்து கொள்கின்றன! நன்றி உணர்வு காரணமாகவே, அந்நியர் யார் மீதாவது அந்த நாய்களுக்குச் சந்தேகம் தோன்றி விட்டால் அவர் தொலைந்தார்!

ராயான் பாபு பற்றிக் கேள்விப்பட்டு அவரைச் சந்திக்கச் சென்னையை அடுத்த கோல்டன் பீச் பக்கம் சென்றோம். மேட்டுக்குப்பம் என்ற அந்தக் கிராமத்தினுள் நுழைந்து விசாரித்ததுமே, "ஓ! நாய் வீடா!" என்று பிரகாச முகத்துடன் கேட்டு விட்டுச் சுட்டிக் காட்டினார்கள்.

ராயான் பாபுவுக்குச் சிறு வயதிலிருந்தே செல்லப்பிராணிகள் வளர்ப்பதில்கொள்ளை ஆசை. வெள்ளை எலி, அணில், முயல், புறா, மைனா, பூனை, கிளி என்று பலவற்றை வளர்த்த போதிலும் காலப்போக்கில் அவற்றையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டார். ஆனால் நாய்களை மட்டும் பிரிய மனம் வரவில்லை. பலவகைப்பிராணிகளை வளர்த்த அனுபவத்தில் அவை பழகும் தன்மை பற்றிப் புத்தகமே எழுதியிருக்கிறார்!

இப்போது இவரிடம் இருப்பவை உலகப் பிரசித்தி பெற்ற ஜாதி நாய்களான 'டாபர் மேன்' வகை. சில 'லேப்ரடார்' வகை நாய்களும் உள்ளன. இந்த இரு ஜாதி நாய்கள் தாம் துப்பறியும் பணிகளில் போலீஸுக்கு உதவுகின்றன. இந்த வகை நாய்கள் நானூறு வார்த்தைகள் வரை புரிந்து கொள்ளும் ஆற்றல் உடையவை! அதற்கேற்ற அளவில் கட்டளைகளை நிறைவேற்றும் திறமை படைத்தவை!

தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ராயான் பாபு, மனைவி வனிதாவின் உதவியோடு வீட்டின் அருகே ஒரு நர்சரி பள்ளியும் நடத்துகிறார். அதில் படிக்கும்

குழந்தைகள் நாய்களைக் கண்டு பயந்து விடக் கூடாதே என்பதற்காக ஸீகிங், பாபி, மீனா, டையானா (எல்லாம் நாய்களின் பெயர்கள்தான்) முதலியவற்றுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு தனி வீடு பார்த்துக் குடி வைத்திருக்கிறார். அந்தச் சிறு வீட்டுக்கு மாதம் முந்நூறு ரூபாய் வாடகை! தவிர நாய்களைக் கவனித்துக் கொள்ள மாதச் சம்பளத்தில் ஓர் ஆளையும் நியமித்திருக்கிறார்.

ஸ்கூட்டரைக் கொடுத்தார் நாயை வாங்கினார்

''நாய்கள் குடியிருக்க முந்நூறு ரூபாய் வாடகையில் வீடா?'' என்று வியந்து கேட்ட போது, ''ஆமாம் ஸார், அவற்றை எதற்குச் 'கென்னல்' என்ற சின்னஞ்சிறு பெட்டி வீட்டில் அடைத்து வைக்க வேண்டும்? அது கொடுமையில்லையா?'' என்றார். மூன்று அறைகள் கொண்ட அந்த வீட்டில் பகல் பொழுதைக் கழித்துவிட்டு மாலையில் ராயான் பாபுவைத் தேடி ஓடி வருகின்றன, நாய்கள். ராயான் தம்பதியின் குழந்தைகளான சங்கீதா, மனோஜ் ஆகியோருடன் குதித்து விளையாடுகின்றன.

நாய் வளர்ப்பது எளிதல்ல'' என்றார் ராயான் பாபு. ''அதுவும் உயர் ஜாதி நாய்களை வளர்ப்பது ரொம்ப ரொம்பக் கஷ்டம். அவற்றுக்குப் பல வித வித்தைகளைக் கற்றுத் தர வேண்டும்; உடற்பயிற்சி அளிக்க வேண்டும்; தினமும் என் குழந்தைகளுக்கு (நாய்களையும் தம் குழந்தைகளாகத்தான் பாவிக்கிறார்) வைட்டமின்கள், ஊட்டச் சக்திக்கு எலெக்ட்ரோஸ் முதலியன ஊட்டுகிறேன்!''

''உணவு?''

''தினம் ஒரு கிலோ அரிசிச் சாதம்; மூன்று கிலோ இறைச்சி, ஒரு லிட்டர் பால்; தலா ஆறு முட்டைகள்; காலையிலும் மாலையிலும் கேழ்வரகுக் கூழ்.... தவிர, நானே டாக்டராக இருந்து ஜலதோஷம், தலைவலி, வயிற்றுப்போக்கு, ஜுரம் முதலியவற்றுக்கு மருந்து கொடுத்துக் குணப்படுத்துவேன்...''

ரொம்பச் செலவாகுமே?

''உம்... மாதம் ஆயிரம் முதல் ஆயிரத்து ஐந்நூறு வரை தாராளமாகச் செலவாகும்...



கணக்குப் பார்ப்பதில்லை...''

''எப்படிச் சமாளிக்கிறீர்கள்?''

''எங்கள் நாய்களை மற்றவர்கள் வளர்க்கும் ஜாதி நாய்களுடன் இனச் சேர்க்கை



செய்யப் பணம் வசூலிக்கிறோம். தவிர குட்டிகளை விற்றுப் பணம் சம்பாதிக்கிறோம். குட்டிகள் நல்ல விலைக்குப் போகும். குறைந்த விலைக்கு விற்க மாட்டேன். காரணம், நல்ல விலை தர முடியாதவர்கள் நாய்களை நன்கு பராமரிக்க வசதியற்றவர்களாகத்தான் இருப்பார்கள்.''

நாய்கள் அமைதியாகத் தூங்க வீணை, சிதார் போன்ற இசை கேஸட்டுகளை ஒலிக்கச் செய்கிறாராம் ராயான் பாபு. ''நல்ல இசையை நாம்தான் ரசிப்போம் என்பதில்லை; நாய்களும் ரசிக்கும்!'' என்றார்.

சமீபத்தில் இவர் குழந்தையை மாடு முட்டிவிட டாக்டர் வந்து காயத்துக்கு மருந்து போட்டாராம். ''ஒரு நாள் முழுவதும் என் நாய்கள் சாப்பிடவேயில்லை. படுக்கையில் கிடந்த சங்கீதாவையே பார்த்துக் கொண்டிருந்தன. மறுநாள் அவள் எழுந்து உட்கார ஆரம்பித்த பிறகுதான் இவையும் சாதாரண நிலைக்குத் திரும்பின'' என்றார்.

கொடைக்கானலில் நடந்த நாய்கள் கண்காட்சிக்கு ஸீகிங்கை ஏஸி வகுப்பில் கூபேயில்தான் தம்முடன் அழைத்துப்போனாராம். மிக உயர்ந்த விருதான **challenge certificate** பட்டத்தை அது பெற்றுத் தந்தது!

''இந்த ஸீகிங்கை நான் வாங்கினதே ஒரு சுவையான அனுபவம்'' என்றார் ராயான் பாபு. ''ஒரு நண்பர் மூலம் இதன் எஜமானரைச் சந்தித்தேன். அப்போது இது சின்னஞ்சிறு குட்டி. சில ஆயிரங்கள் விலையாகக் கேட்டார். என்னிடம் அச்சமயம் பணம் இல்லை. உடனே, 'இந்தாருங்கள் என் ஸ்கூட்டரை வைத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் கேட்ட விலையை வட்டியுடன் செலுத்திய பிறகு ஸ்கூட்டரைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்' என்று கூறி ஸீகிங்கை வாங்கி வந்தேன்!''

இப்படிக் கூறியவாறே ஸீகிங்கை அன்புடன் தடவிக் கொடுத்த ராயான் பாபு, தற்போது ஸ்விட்சர்லாந்திலிருந்து ஓர் உயர் ஜாதி நாயை விமானத்தில் தருவிக்கும் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறார்!

பேட்டி: சிக்கி

மேலட்டை வண்ணப்படம்: சுத்ரா.

ஒருவர்: நீங்கள் பஞ்சாயத்துத் தேர்தலில் தோற்றதற்கு என்ன காரணம்?

மற்றவர்: நான் தேர்தலில் தோற்றாலும் மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்வேன்னு சொன்னேன். மக்களும் அதை அப்படியே நம்பினது தான் காரணம்!

— ஸ்ரீரங்கம் ரா. ராகவன்.





அவர்: பொதுக் கூட்டத்திலே தலைவர் மேடையின் நாலு பக்கமும் போய் எதையோ தேடினாரே..... எதை?

இவர்: ஜனங்களைத்தான்!

— ஆர். ஸ்ரீ வெங்கடேஷ்

அழகுக் குறிப்புகள்/வீட்டுக் குறிப்புகள்

புத்தம் புதிய ஐடியாக்கள்

1 உங்கள் வீட்டு ஃப்ரிஜ்ஜின் கதவு அடிக்கடி அழுக்காகிப் போகிறதா? கவலைப்படாதீர்கள்! அடிக்கடி கதவைத் திறந்து திறந்து மூடுவதால்தான் இப்படி அழுக்காகிறது. இதைத் தவிர்க்க எப்போதும் ஃப்ரிஜ் கதவைத் திறந்தே வையுங்கள். கதவு அழுக்காகாது. மேலும் கதவைத் திறக்கும் நேரமும் மிச்சமாகும்!

2 இளம் வயதில் கன்னத்தில் 'டொக்கு' (பள்ளம்) விழுந்து சிலர் அவஸ்தைப்படுகிறார்கள். டொக்கு நீங்கி, கன்னம் உப்பலாக மாற, தினமும் நூறு பலூன்களை ஊதிக் கொண்டு வாருங்கள். பலன் கிடைக்கும். அல்லது எப்போதுமே ஏதாவது பாட்டை விசிலடித்தபடியே இருங்கள். ஏதோ விசிலடிப்பதால்தான் கன்னத்தில் பள்ளம் விழுந்திருக்கிறது என்று பார்ப்பவர்களும் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு போவார்கள்.

3 சில சமயம் இரவில் அரைத்து வைத்த இட்லி மாவு காலையில் பொங்கி வழிந்து, கேவலமாக இருக்கும். மாவு பொங்காமலிருக்க, இட்லி மாவு இருக்கும் பாத்திரத்தைத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்து விடுங்கள். மாவு எப்படிப் பொங்கும்?

4 உங்கள் வீட்டில் எலுமிச்சம்பழ மூடி இருக்கிறதா? சரி! காலையில் எழுந்ததும் குளிப்பதற்கு முன் பத்து நிமிஷம் எலுமிச்சம்பழ மூடியை அழுத்தி முகத்தில் தேய்த்துப் பாருங்கள், பளபள என்று ஆகிவிடும் — எலுமிச்சம்பழ மூடி!

5 தாய்ப்பால் கொடுப்பதால் அழகு குறைந்துவிடும் எனச் சில பெண்கள் நினைக்கிறார்கள். இது தவறு — குழந்தைகள் அழகாகவே வளரும்!


6 ஆறாவது விரல் முளைத்திருப்பவர்கள் அதைப் பற்றிக் கவலைப்பட்டுக் குழம்பிப் போக வேண்டாம். சந்தோஷமாக இருங்கள். உண்மையில் நீங்கள் அதிர்ஷ்டக்காரர். நீங்கள் மட்டுமே விரல் விட்டு பதினொன்று வரை எண்ண முடியும்!

7 தூக்கத்தில் குறட்டை விடுபவர்களை எப்படிச் சரிப்படுத்துவது? நல்ல வழி இருக்கிறது! குறட்டை விட்டபடி தூங்குபவரின் மூக்கில் மிளகாய்ப் பொடியை ஏற்றிவிடுங்கள். உடனே பயங்கரமாகத் தும்ம ஆரம்பிப்பார். இதனால் குறட்டை விடுவது நின்றுவிடும். சுலபமான வழிதானே! (தும்மலைச் சமாளிப்பது பற்றிப் பிறகு யோசிக்கலாம்!)

8 தலைமுடி கொட்டுகிறதா? கவலைப்படாதீர்கள். கவலைப்பட்டால் மேலும் முடி உதிரும்!

9 சட்டையில் ஏதேனும் கறை ஏற்பட்டுவிட்டால் சோப்புப் போட்டுத் துவைத்துக் கறையைப் போக்க முயலாதீர்கள். சில சமயம் கறை போகாது. அதனால் அதே மாதிரி கறையைச் சட்டை முழுக்க ஏற்படுத்திக் கொள்ளுங்கள். சட்டை புது டிசைனாக இருக்கும்!

— '628'









கலைகளில் அரிய கலை

காலத்தை அளக்குங் கலை

ஜோதிடத்தைக் கற்றிடுங்கள்.

ஜோதிடப் பயிற்சி

தபால் வழி போதனா முறை

நாளைய வாழ்வினில் நடக்கப் போகும் நிலை என்னவென கண்டறியும் கலை இது ஒன்றே — காலமெல்லாம் வெற்றி பெற்று களி கொள்ள வாழ்வாரா, அன்றி கவலைக் கடலிலே மூழ்கி கரை காணு நிலையுடனே தவிப்பாரா, தொழில் வழி நிலைகளில் — துன்பமின்றி நிமிர்வாரா, தூண்டிய விளக்காகிப் பெரும் பொருள் சேர்ப்பாரா? செல்வச் செழிப்போடு திகழ்வாரா? கட்டிய மனைவியோடு காலமெல்லாம் சுகிப்பாரா? இல்லறம் இனிக்குமா? பிள்ளைக் கனியமுதைப் பெற்றெடுத்துப் பேணிக் காத்துப் பெரும் புகழ் காண்பாரா? கடைசிக் கால வாழ்வினில் கஷ்டமின்றி இருப்பாரா? குபேர சம்பத்தைக் குவிப்பாரா? என்றெல்லாம் எள்ளளவும் பிசகின்றி சொல்லுங்கலை கற்றிட உரிய வேளை காத்து நின்ற காலமிது — கற்பிக்க எவரும் கைதூக்கி வருவரென்று உறுதியில்லை. அரிதான வேளை தனை அறிந்து கற்றுக் கரைசேர வந்திடுவீர்.



இக்கலை பாடங்கள் வீட்டில் இருந்தாலே கிரக தோஷங்கள் விலகிவிடும். தினம் கிரக நாமங்களை உச்சரித்து பாடத்தின் சில வரிகளைப் படித்தாலே எவ்வித கஷ்ட நிலையும், விலகி விடும், பாடத்துடன் தருகின்ற பௌர்ணமி பூஜையின் சக்திமிக்க விபூதிப் பிரசாதத்தை 27 நாட்கள் தொடர்ந்து தரித்தாலே எண்ணிய காரியங்கள் வெற்றி காணும். பாடத்துடன் — கிரக தோஷங்களை முற்றிலும் அகற்றிடும் நவக்கிரக சக்கரங்கள் தரப்படுகின்றன. நிச்சயமாய் கிரக தோஷம் எதுவாயிருப்பினும் விலக்கு சுகவாழ்வைத் தரும்

இக்கலையைக் கற்றுயர உரிய வழிமுறைகளும், நாட்குறிப்பும் சிறப்புக் கட்டுரையும் மாதந்தோறும் — மாணவர்கள் சந்தேக விளக்கமும் எல்லாவித நல்லுக்கான ரக்ஷைகளும் அவரவர் தேவைக்கேற்ப தரப்படுகின்றன. சக்திமிக்க ரக்ஷைகள் வழியாக வாழ்வில் முழுமையான வெற்றி பெற்றுயர்ந்திடலாம்.

எனவே இக்கலை கற்றிட, சேரும் முறையும் செலுத்தும் கட்டணமும் அறிய, உங்கள் தெளிவான விலாசத்தை எழுதி 10.8.1986 தேதிக்குள் மனு செய்து கொள்ளுங்கள். தெளிவான விபரம் தெரிவிக்கின்றோம்.

பிரபல ஜோதிடர் ஜோதி ஆசிரியர்
ஸ்ரீமத் விஜயவீரதேவா
யோகி ராஜயோக பயிற்சியாளர்
☎ 43412
ப்ளாட் நெ. 204, தெரு எண்-5, அண்ணாநகர், மதுரை-625 020.

சந்திப்பு: அத்வானி

தீவிரவாதிகளின் ஹிட் லிஸ்டில் இருப்பவர்!



"இந்திரா காந்தி கொலை செய்யப்படாமல் தேர்தல் நடந்திருந்தால் நிச்சயம் எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும். அந்த அளவுக்கு இந்திரா காந்தி ஆட்சி மீது அன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு அதிருப்தி நிலவியது" என்று தமது கணிப்பை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறவர்:

— பாரதிய ஜனதா கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதன் முறையாகச் சென்னைக்கு வந்திருந்த அத்வானி. அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் லால் கிருஷ்ண அத்வானி, சதா சிநேகப் பார்வையுடனும், புன்னகை தவழும் முகத்துடனும் விளங்கும் வித்தையைத் தெரிந்து வைத்திருக்கிறார்.

இவர் பிறந்தது இன்று பாகிஸ்தானில் உள்ள ஹைதராபாத் நகரம். கராச்சியில் கல்லூரியில் சேரப் போனவர் ஆர். எஸ். எஸ்.ஸால் ஈர்க்கப்பட்டு படிப்புக்குக் குட்பை சொல்லி விட்டார்.

"பின்னால் பம்பாய்ப் பல்கலைக் கழகத்தில் எல். எல். பி. பட்டம் பெற்றேன்" என்று கூறும் அத்வானி, "நான் பிராக்டீஸ் நடத்தாத ஒரு வழக்கறிஞர்" என்றும் சொல்லிச் சிரிக்கிறார்.

பத்திரிகையாளராகவும் இருந்திருக்கிறார். 'ஆர்கனைசர்' பத்திரிகையில் இவர் எழுதிய 'டெல்லி டயரி,' 'பெரிஸ்கோப்' போன்ற பகுதிகள் பரபரப்பாகப் பேசப்பட்டவை. போக்கரானுக்கு வெகுகாலம் முன்பாகவே ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில் டாக்டர் பாபாவிடம், "இந்தியாவில் அணுகுண்டு செய்ய முடியுமா; முடியாதா?" என்று துணிச்சலான கேள்வி கேட்டு "முடியும்" என்ற பதிலை வாங்கியவர் அத்வானி.

டெல்லி மெட்ரோபாலிடன் கவுன்சில் தலைவராக இருந்தபோது, தேர்தல் முறையையே மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். "நாற்பது சதவீத மக்களின் வோட்டுக்களைப் பெற்று எழுபது சதவீத இடங்களைப் பிடித்து ஆட்சிக்கு வருவது என்பது சரியில்லை. மேலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அரசாங்கமே பண உதவி செய்தால் பல 'கோல்மால்கள்' நடக்காது" என்று அன்று கூறியதை இன்றும் உறுதியாக நம்புகிறார்.

எமர்ஜென்ஸி காலத்தில் ஒன்றரை வருடம் பெங்களூரில் சிறைப்பட்டிருந்தார் அத்வானி. அப்போது கன்னட மொழியை அவர் ஓரளவு கற்றுக் கொண்டது வெளியே யாருக்கும் தெரியாது. ஒரு தடவை டெல்லியில் சர்வ கட்சி மாநாடு நடந்தபோது, தேவராஜ் அர்ஸ் இந்தியில் கையெழுத்துப் போட்டு அதை அத்வானியிடம் காண்பித்து, "சரியா?" என்று கேட்டவுடன், அத்வானியும் கன்னடத்தில் கையெழுத்துப் போட்டு அர்ஸிடம் காண்பித்து "சரியா?" என்று கேட்க, அசந்து போனாராம் அர்ஸ்.

இன்றைக்கு டெலிவிஷனிலும் ரேடியோவிலும் தேர்தல் சமயத்தில் சர்வ கட்சியினரும் பேச முடிகிறதென்றால் அதற்கு மூல காரணம் அத்வானிதான். ஜனதா அரசில் செய்தித்துறை அமைச்சராக இருந்த போது, இந்த வசதியை ஏற்படுத்தினார். மேலும் தம்மை அதிகமாக விளம்பரப்படுத்தக் கூடாது என்று சொன்னதோடு, அக்கட்டளை நிறைவேற்றப்படுகிறதா என்றும் தீவிரமாகக் கண்காணித்தார்.

ராஜ்ய சபையில் இவர் எழுந்து நின்றால் உடனே தலைவர் பேச அனுமதித்துவிடுவார். அந்த அளவுக்கு அத்வானி பேச்சில் கருத்தாழம் இருக்கும்.

மொரார்ஜி மகன் காந்தி தேசாய் மீது பலர் ஊழல் குற்றச்சாட்டுச் சொன்னபோது, மொரார்ஜியின் அதிருப்தியைச் சம்பாதிக்க நேருமே என்று கவலைப்படாமல் அதற்காக ஒரு கமிஷன் போட்டு விசாரிக்க வேண்டும் என்று ஸ்திரியமாகக் கூறியவர் அத்வானி. இதைத் தொடர்ந்து பூதலிங்கம்

காசிலிங்கத்தின் ....

லாரி மோதியதில் காசிலிங்கம் தூக்கி யெறியப்பட்டார். ஆபத்தினிடையிலும் ஒரு அதிர்ஷ்டம். இரம் சாலையைத் தாக் காமல், உடல் சாலையையொட்டிய மண் பரப் பில் விழுந்தது. எழுந்து நடக்க முடியவில்லை. காலில் பலத்த அடி. உயிரே போகிற வலி. இவரும் பூந்தமல்லி ஆஸ்பத்திரிக்கே கொண்டு போகப்பட்டார்!

இவர் நிலை கண்டு ஆஸ்பத்திரியில் இன்ஸ் பெக்டருக்கும் டாக்டர்களுக்கும் அதிர்ச்சி. சிகிச்சை அளிக்கப்பட்டது. விபத்துக்குள் ளான மூன்று பேருமே சென்னை கீழ்ப் பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். காசிலிங்கத்தால் காப் பாற்றப்பட்ட இருவரும் இரண்டே நாளில் குணமாகி அவருக்கு நன்றி கூறிவிட்டுப் புறப் பட்டார்கள். ஆனால் காசிலிங்கம் பூரண குணமாகி வீடு திரும்ப மேலும் சில தினங்கள் பிடித்தன.

—மௌஷ்மி

புகைப்படம்: யோகா

கமிஷன் அமைக்கப்பட்டது.

நாங்கள் பேசிக் கொண்டிருந்த போதே கோகலே ஹாலில் கட்சி மீட்டிங் பற்றி ஞாபகப்படுத்தினார்கள். உடனே கூட்டத்தில் என்ன பேசுவது என்பது பற்றிப் பொறுப் புணர்வுடன் ஐந்து நிமிடம் குறிப்பெடுத்துக் கொண்டார். பின்னர் காரில் கோகலே ஹால் செல்லும் போது, ''எனக்கு ஒரு மகன், ஒரு மகள். அவர்களுக்கு அரசியலில் அவ்வளவாக விருப்பம் கிடையாது. என் மனைவியும் அப்படித்தான்'' என்று தகவல் தந்தார் அத்வானி.

கோகலே ஹால் கூட்டத்தில் 'பஞ்சாபில் இந்த நிலை ஏன் ஏற்பட்டது?' என்பதைத் தேதிவாரியாக அவர் விளக்கிய போது, அவையோர் திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தனர். பேச்சின் இடை யிடையே ஹிந்தி எப்படியோ வந்து கலந்து விட்டாலும் பேச்சின் சுவாரஸ்யத்தை அது கெடுக்கவில்லை.

மென்மையான நகைச்சுவை உணர்வுடன் பேசுகிறார். ''கிரிக்கெட்டில் எத்தனை விக்கெட் விழுந்தது என்று நாம் கேட்போம். அது போலத்தான் தினசரி எத்தனை பேர் செத் தார்கள் என்று கேட்க வேண்டியிருக் கிறது'' என்று குறிப்பிட்ட போது கூட்டத் தினரின் முகத்தில் புன்னகையை விட வேதனைச் சாயலே அதிகமாக இருந்தது.

எமர்ஜென்ஸி காலத்தில் சிறையில் இருந்தபோது எழுதிய, குறிப்புக்களை A Prisoner's Scrap Book என்று புத்தகமாக வெளியிட்டுள்ளார். ஜனதா அரசு கவிழ்ந்த வுடன் 'வஞ்சிக்கப்பட்ட மக்கள்' (People Betrayed) என்று ஒரு புத்தகத்தையும் எழுதி யுள்ளார்.

தீவிரவாதிகள் வைத்திருக்கும் கொலை செய்யப்பட வேண்டியவர்கள் பட்டியலில் அத்வானி பெயரும் இருக்கிறது. ஆனாலும் பஞ்சாபில் பல கிராமங்களுக்குத் தைரிய மாகச் சென்று வந்துள்ளார்.

— கௌசல்யா

படம்: சுபா

மனைவி: ராமசாமிக்குக் கண் சரியாகத் தெரியாததற்கு உங்களை ஏன் திட்டிட்டுப் போறார்?

கணவன்: ஒன்பது வருஷமாத் தொடர்ந்து நம்வீட்டில் ஒசி டீ.வி. பார்த்ததில்தான் அவனுக்குக் கண் கெட்டுப் போச்சாம்.

— உ. ராஜாஜி





''என்ன அந்தப் பட்டு ஜவுளிக் கடையில் என்றைக்கும் இல்லாத கூட்டம்...?''

''அந்த ஜவுளிக் கடையில் கல்யாணப் பட்டு எடுக்கும் மணப் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு நர்ஸரி ஸ்கூல் அட்மிஷன் காரண்டி கார்டு கொடுக்கப் படுகிறதாம்!''

— இரா. வீரராகவன்

ஒருவர்: நீங்க 'சாதம்'னு ஒரு படம் எடுத்தீங்களே.....?

மற்றவர்: ஆமாம்! பணத் தட்டுப்பாடு வந்ததால இப்போ 'கஞ்சி'ன்னு மாத்தி விட்டோம்.

— எஸ். பி. பிருந்தா





''உங்க ஆபீஸ் டைப்பிஸ்ட்டு நின்னுக்கிட்டே டைப் அடிக்கிறாங்களே, ஏன்?''

''அவங்க பேரு அமராவதியாச்சே; அதான்!''

— கடுவை கோபால்சாமி

குழந்தைகளின் தேவசபை கூடியிருக்கிறது. விடுகதைகளைத் தூக்கிப் போட்டு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உலகத்திற்கு என்னையும் அழைக்கிறார்கள்.

'முள்ளு முள்ளு முள்ளு
எல்லா இடத்திலும் இருக்குதென்று சொல்லு!
கால்களிலே தைக்காது — ஆனால்
கண்ணை விட்டு வைக்காது'

என்றேன். குழந்தைகள் குழம்பிப் போனார்கள். "நீ விடுகதை போடவில்லை. ஏதோ பாட்டுச் சொல்லுகிறாய்" — என்று குற்றம் சாட்டினார்கள்.

"இல்லை விடுகதைதான்" என்று விவாதித்தேன். அவர்கள் அதை ஒத்துக் கொள்ளவில்லை. எனவே அதை இப்படி மாற்றிச் சொன்னேன்:

'காணும் இடமெல்லாம் முள்ளாக இருப்பான்;
கால்களில் மட்டும் குத்தவே மாட்டான்.
அவன் யார்?'

இப்போது குழந்தைகள் 'இது விடுகதைதான்' என்று ஏற்றுக் கொண்டார்கள்.

"பதில் தெரியவில்லை" என்றார்கள்.

"காலச் சக்கரவர்த்திக்குக் கணக்கப் பிள்ளை. அவன் யார்?" என்றேன்.

"வாடி போகலாம். புரிகிற மாதிரி விடுகதை போட அப்பாவுக்குத் தெரியவில்லை" என்று சிறியவள் பெரியவளை அழைத்தாள்.

"பொறுடி. இவர் பெரிய கவிஞரில்லையா... என்னதான் உளறுகிறார் பார்க்கலாம்" என்று பெரியவள் எனக்கு ஒரு சான்றிதழ் கொடுத்தாள்.

'பார்க்க எழுதத் தெரியாதவன்
பார்த்ததைக் குறித்து வைக்காதவன்
சூரியன் பூமியைச் சுற்றி வருவதை மட்டும்
சுருக்கெழுத்தில் குறித்து வைப்பான்'

என்று நான் கூறி முடித்தவுடன் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன. எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து என்னை 'ஒரு மாதிரி'யாகப் பார்க்கத் தொடங்கின.

"உனக்கு விடுகதையே போடத் தெரியவில்லை. விடுகதை என்றால் இப்படி இருக்காது" — என்று குழந்தைகளெல்லாம் ஒரே மூச்சில் என் விவேகத்தைத் தூக்கி வீசி எறிந்தார்கள்.

"கொஞ்சம் விளக்கம் சொல்கிறேன். அப்போதாவது கண்டுபிடியுங்கள். எல்லா விடுகதைகளுக்கும் ஒரே பதில்தான்" என்று சமாதானப்படுத்தினேன்.

"உள்ளுக்குள் அவன் ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு மனிதர்கள் வெளியே ஓடிக் கொண்டிருப்பார்கள். தன்னைக் கைகளில் கட்டி வைப்பதற்காகத்தான் மனிதர்களை அவன் தன்னுடைய கால்களால் விரட்டிக் கொண்டிருக்கிறான்" என்று நான் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, மூத்த மகள் "ஓஹோ...." என்று தலையை ஆட்டினாள்.

"அடே! கடிகாரம்" என்று இரண்டாவது பெண் கத்தினாள்.

"ஆமாம், கடிகாரம்" என்று குழந்தைகள் அனைவரும் குதித்தார்கள். நான் விரித்த வலையில் நானே மாட்டிக் கொண்டு திண்டாடிய பின் திடீரென்று விடுபட்ட திருப்தி எனக்கு ஏற்பட்டது.

* * * * *

குழந்தைகளை அனுப்பிவிட்டு தனிமையில் யோசித்தபோது விடுகதைக்கும் கவிதைக்கும் அதிக வித்தியாசமில்லை என்று தெரிந்தது. இரண்டுமே உவமை, உருவகம், ஓசை நயங்களை ஆடை அணிகலன்களாக அணிந்து கொள்கின்றன.

கடிகாரம் பற்றிய விடுகதையைக் கவிதையாக உருமாற்ற வேண்டுமென்றால் இப்படிச் சொல்லலாம்:


கடிகாரமே நீ
கவலைப்படாதே!
உன் பெருமை
ஆகாயம் போலவே
அளக்க முடியாதது!

ஏனென்றால் —
வானம்கூட
பூமிப் பெண்
கட்டிக் கொண்டிருக்கும்
கடிகாரம்தான்!

அதில்
சுற்றி வரும் முட்கள்தான்
சூரியனும் சந்திரனும்!

விடுகதை கவிதையாகிறது!

— மு. மேத்தா



"ஒரு குட்டி நிலாவைப் பார்க்கப் போகிறோம்!"



இந்த மாதம் பத்தாம் தேதி வானத்தில் ஓர் அற்புதக் காட்சியைக் காணலாம் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். செவ்வாய் கிரகம் தங்க நிறத்தில் ஜொலிக்கும் என்கிறார்கள். விண்ணில் மிக அபூர்வமாகவே தோன்றக்கூடிய காட்சி இது.

தனுர் ராசியில் இப்போது செவ்வாய் கிரகம் உலா வருகிறது. சாதாரணமாக வெளிரிய ஆரஞ்சு நிறத்தில் இந்தக் கிரகம் ஒளிரும். ஆனால் படிப்படியாக இந்த நிறம் மாறி ஜூலை பத்தாம் தேதி பிரகாசமான மஞ்சள் நிறமாக ஜொலிக்கும். காரணம் என்ன?

இந்த நாளில் பூமியும் செவ்வாய்க் கிரகமும் ஒன்றை ஒன்று சமீபிக்கின்றன. (இடைவெளி 5,60,00,000 கி.மீ.) இந்த அளவுக்கு நெருங்கி வருவது மிகவும் அபூர்வம். மேலும் சூரியனும் பூமியும் செவ்வாயும் ஒரே நேர்கோட்டிலும் அமைகின்றன. இதனால் வழக்கத்தைவிட அதிகமான சூரிய ஒளியைப் பெறும் செவ்வாய் ஒரு குட்டிச் சந்திரனாக வானில் பிரகாசிக்கும்.

இந்த நேரத்தில் ரேடியோ டெலஸ்கோப்புகள் மூலம் செவ்வாயை ஆராய்ந்து மிக சுவாரஸ்யமான தகவல்களைப் பெற விஞ்ஞானிகள் உத்தேசித்துள்ளனர்.

— சுப்ர.பாலன்

படம்:

அமெரிக்காவின் வைக்கிங்—2 விண்கலம் செவ்வாய் கிரகத்தை நெருங்கி — அதாவது 4,19,000 கி.மீ. தூரத்திலிருந்து எடுத்த படம்!

பெங்களூரில் டெஸ்ட் டியூப் பேபி!



'சோதனைக் குழாய்க் குழந்தை' என்றதும் ஏதோ விநோதமான ஜீவன் என்று எண்ணி, பலர் ஆஸ்பத்திரிக்கு வந்து பார்த்துவிட்டுப் போகின்றனர்! ஆனால் குழந்தை மற்ற எல்லாக் குழந்தைகளையும் போலத்தான் இருக்கிறது. தாயின் கருப்பையில்தான் பத்து மாதம் வளர்ந்தது. அப்படியானால் 'டெஸ்ட் டியூப் பேபி' என்று அழைப்பானேன்? குழந்தையின் அப்பா பிரகாஷ் ஒரு டாக்டர். அவரே பேசட்டும்:

"என் மனைவி நிருபமாவின் 'ஃபெலோபியன் டியூப்' பகுதி பழுதாகியிருந்தது. 'ஃபெலோபியன் டியூப்' என்பது 'ஓவரி' என்ற பகுதியிலிருந்து 'ஓவம்' என்ற கரு முட்டைகளைக் கருப்பைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் குழல். இது பழுதாகிவிட்டதால் நிருபமா குழந்தை பெற முடியாது என்று சந்தேகத்துக்கிடமின்றித் தெரிந்து போயிற்று. இப்படி உறுதியான பிறகுதான் நான் 'டெஸ்ட் டியூப் பேபி' பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தேன். இவளும் சம்மதிக்கவே இங்கிலாந்தில் பார்ன் ஹால் மருத்துவமனையுடன் தொடர்பு கொண்டேன். அங்கு எங்களைப் போல் குழந்தைப் பேறுக்குத் தவமிருக்கும் தம்பதிகள் பலர் முன்கூட்டியே தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருந்தனர். எனவே எங்களுக்கு ஒன்றரை வருஷம் கழித்துத்தான் 'அபாய்ட்மெண்ட்' கிடைத்தது.

"நிருபமா எட்டு நாட்கள் மருத்துவமனையில் இருந்தாள். என்னை 'அவுட் பேஷண்ட்'டாக நடத்தினார்கள். கர்ப்பம் தரிப்பதற்கான மூலப் பொருள்களை எங்கள் உடல்களிலிருந்தே எடுத்தார்கள். அவள் உடலிலிருந்து கரு முட்டையையும் (ஓவம்) எனது விந்திலிருந்து நுண்ணுயிரையும் (ஸ்பெர்மடோஸூன்) எடுத்து, சோதனைச் சாலையில் டெஸ்ட் டியூபில் கரு வளர்வதற்கேற்ற இசைவான சூழலை உருவாக்கி இணை சேர்த்தார்கள். டெஸ்ட் டியூபில் கரு வளர ஆரம்பித்ததுமே எங்களுக்குத் த்ரில் ஏற்பட்டது. குறிப்பிட்ட அளவு வளர்ச்சி பெற்றதும் அதனை 'எம்பிரையோ' என்று அழைக்கிறார்கள். இந்த அளவுக்கு வளர்ந்த கரு, நிருபமாவின் கர்ப்பப் பைக்குள் செலுத்தப்பட்டது.

"கரு, கர்ப்பப்பையின் சுவரில் ஒட்டிக் கொண்டு சரியாக வளர்கிறதா என்று இரு வாரங்களுக்கு ஸஸ்பென்ஸாக இருந்தது. இரண்டாவது வார முடிவில் அதிர்ச்சி: கரு பிழைக்கவில்லை; தங்கவில்லை!

"ஆஸ்பத்திரியில் எட்டு நாட்கள்தான் நிருபமா இருந்தாள். என்றாலும் அந்தக் கிராமத்திலேயே ஜாகை ஏற்படுத்திக் கொண்டு தங்கியிருந்தோம். மனந்தளராமல் மறுமுறை முயன்று பார்க்குமாறு டாக்டர்களைக் கேட்டுக் கொண்டோம். இம்முறை பதினைந்தாவது நாள் டாக்டர் 'கங்கிராட்ஸ்' சொன்ன போது ஆகாயத்தில் மிதப்பது போன்ற உணர்வு எங்களுக்கு! மேலும் ஒரு மாதம் ஜாகையில் தங்கியிருந்துவிட்டுத் திரும்பினோம்."

"பெங்களூரில் நடந்தது 'சிசேரியன்' பிரசவம்தான். வயிற்றைக் கிழித்துத்தான் குழந்தையை எடுத்தார்கள். ஆயினும் என்ன? கல்யாணமாகி பத்து வருஷம் கழித்து அப்பா — அம்மா ஆனதில் எங்களுக்கு ஒரே சந்தோஷம்."

"செலவு?"

"சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய்."

"பண வசதி மட்டும் இருந்தால் போதாது" என்றார் நிருபமா. "தம்பதிகளும் குடும்பத்தினரும் இதற்கு மனப்பூர்வமாகச் சம்மதிக்க வேண்டும். இல்லையானால் குழந்தையின் எதிர்காலமே பாதிக்கப்படலாம் அல்லவா?"

பிரகாஷ் முடிவாகச் சொன்னார்: "கணவன் அல்லது மனைவியின் மூலப் பொருளில் பழுது இருந்தால் கடன் பெற்றும் செய்யலாம். விந்து வங்கி (ஸ்பெர்ம் பாங்க்) போன்றவற்றின் உதவியை நாடலாம். ஆனால் இதுபோன்ற கடன் வாங்கும் முறைதான் நமது பண்பாட்டுக்கு ஏற்காத விஷயம்!"

— நமது நிருபர்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.

பூஸ்ட்

சக்தியளிக்கும் சுவையான பானம் நாள்முழுவதும் அவன் விரைந்து செயல்பட வைக்கிறது

உங்கள் குழந்தை, துள்ளித்திரிந்து வளரும் இன்றைய இளைய தலைமுறையைச் சேர்ந்தவன். மட்டையைச் சுழற்றுவதில், பந்தை உதைப்பதில், புதிய விளையாட்டில் கிடைக்கும் பூரிப்பை அனுபவிப்பதில் அவனுக்கு எப்போதும் ஆர்வம்!

பள்ளியிலோ அவன் கடினமாக உழைக்கிறான். தனது துறுதுறுக்கும் மனத்தின் ஆர்வத்தைத் திருப்திப் படுத்த அவன் அதிகமாகப் படிக்கிறான். சிக்கலான கணக்கின் விடை கண்டுபிடிக்க தனது மூளையைச் செலுத்துவதில் அவனுக்கு மகிழ்ச்சியே. ஆம்! ஓட்டமும் நடையுமாக விரையும் வாழ்க்கையின் இந்நாட்களை உங்கள் குழந்தை ஒரு அதிவேக ரயிலைப்போலக் கடந்து செல்கிறான்.

பூஸ்ட்—சாக்லேட் சுவையுள்ள சக்திக்கு


உங்கள் குழந்தை நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இயங்க சக்தி தேவை. ஆடை நிறைந்த பால், பொன்னிற கோதுமை, மால்ட்டட் பார்லி மற்றும் கோகோ போன்ற சக்தியளிக்கும் பொருள்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பூஸ்ட் ஒரு சுவையான பானம்.

பாலுடன் சேர்ந்து சுவையளிக்கும் பூஸ்ட், உங்கள் குழந்தைக்கு மிகவும் ஏற்ற காலை வேளை பானமாக, அவனை நாள் முழுவதும் விரைந்து செயல்பட சக்தியளிக்கிறது.



பூஸ்ட்

சுறுசுறுப்பான வாழ்க்கைக்கு சக்தியளிக்கும் எரிபொருள்.



HMM 9077 TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

